


**கட்டார் நெருக்கடி:**

**எதிரிகளது அம்புகள் எங்கே பாய்ந்துகொண்டிருக்கின்றன?**




-காமினி வியங்கொட-
சிரேஷ்ட ஊடகவியலாளர்

**அரசாங்கத்தில் சிலர் ஞானசாரவுக்கு அடைக்கலம் கொடுத்துள்ளார்கள்**





# மீள்பார்வை

මීල්පාර්වෙ
සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

Registered as a newspaper in Sri Lanka
GPO-QD/75/NEWS/2017 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
www.meelparvai.net

இதழ் - 371 • 16 ஜூன் 2017 வெள்ளிக்கிழமை • ரமழான் 1438 • விலை 40.00







# அளுத்கம கலவர சூத்திரதாரிகள் இன்னும் கைதுசெய்யப்படவில்லை

2014 ஜூன் 15இல் அளுத்கம, பேருவல பிரதேசங்களில் இனவாதிகளால் மூட்டிவிடப்பட்ட கலவரத்தில் முஸ்லிம்களில் 03 பேர் கொல்லப்பட்டதோடு முஸ்லிம்களுக்குச் சொந்தமான 115 வீடுகளும் 38 வர்த்தக நிலையங்களும் 02 பள்ளிவாசல்களும் தீக்கிரையாகியும் தாக்கப்பட்டும் சேதத்துக்குள்ளாகின.

இந்தத் தாக்குதல்களினால் முஸ்லிம்களுக்கு 62 கோடி (627 மில்லியன்) ரூபா சேதம் விளைவிக்கப்பட்டது. அளுத்கமவில் ஞானசார தேரர் நிகழ்த்திய ஆவேசமான உரையைத் தொடர்ந்தே முஸ்லிம்கள் மீதான தாக்குதல் ஆரம்பித்த போதும் இதுவரை கலவரத்தின் சூத்திரதாரிகளுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

கறுப்பு ஜூன் கலவரத்தைத் தொடர்ந்து இது தொடர்பில் விசாரணை நடத்துமாறு அப்போதைய பொலிஸ் மாஅதிபர் இலங்கக்கோன் (பக்.14)



## மீராவோடை தாக்குதல்: ஷீஆ-சுன்னி மோதலா?

ஓட்டமாவடி மீராவோடையில் இயங்கிவரும் ஷீஆக்களின் இஸ்லாமிய கலாச்சார நிலையம் தாக்கப்பட்டமை இலங்கையில் இருக்கும் ஷீஆ-சுன்னி மோதலின் விளைவே என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த ஜயகொடி ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஷீஆ-சுன்னி மோதலொன்று தொடர்பில் அண்மைக்காலமாக பரவலான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. சிறியதொரு சம்பவத்தையும் ஷீஆ-சுன்னி மோதலாகக் காட்டி சிரியாவில் போன்ற குழுச் சண்டைகள் இலங்கையில் வரவிருப்பதாக அண்மைக்காலமாக ஊடகங்கள் ஊதிப் பெருப்பித்து வருகின்றன. (பக்.14)

## புத்தளத்தில் குப்பை கொட்ட 2000 மில்லியன் ஒதுக்கீடு



மீதொட்டுமுல்லை குப்பை மேடு சரிவின் பின்னர் கொழும்பின் குப்பைப் பிரச்சினை இது வரை தீர்க்கப்படாத பிரச்சினையாகவே இருந்து வருகிறது.

கழிவுகளை வகைப்படுத்தல் தொடர்பில் மக்களை தெளிவுபடுத்துவதற்காக விரிவான செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கழிவு முகாமைத்துவத்தை முறைமைப்படுத்தல் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன ஜனாதிபதி அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

(பக்.14)

## மத்திய கிழக்கு முரண்பாடுகள் இலங்கையையும் பாதிக்கும்



சவூதி அரேபியா அடங்கலான நாடுகளுக்கும் கட்டாருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள மோதல் எதிர்காலத்தில் மேலும் மோசமடைந்து இந்து சமுத்திரத்திற்கும் இலங்கைக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் அபாயம் காணப்படுவதாக மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக ரணவக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது முதலாவது வெளிநாட்டு விஜயத்தை மத்திய கிழக்கு நாட்டிலேயே ஆரம்பித்தார். சவூதி அரேபியாவில் சவூதி அரேபியா, எகிப்து, பஹ்ரேன் போன்ற நாடுகளின் தலைவர்கள், அமைச்சர்கள் ஐம்பது பேர்வரை கொண்ட அரபு மன்றத்தில் அவர் உரையாற்றினார். (பக்.14)

## கைது செய்வதை தடுக்குமாறு கோரும் ஞானசாரரின் மனு 22 ஆம் திகதி விசாரணைக்கு

திட்டமிட்ட குற்றங்கள் தடுப்புப் பிரிவு (ஓ.சி.பி.டி) தன்னை கைது செய்ய முயல்வதாக குறிப்பிட்டு அதனை தடுக்குமாறு கோரி பொது பல சேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரினால் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு எதிர்வரும் 22 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இன, மதங்களுக்கு இடையில் மோதல்களை ஏற்படுத்தும் விதமாக செயற்படுவதாக தெரிவித்து முறையான விசாரணை ஒன்று இல்லாமல் தன்னைக் கைது செய்ய திட்டமிட்ட குற்றங்கள் தடுப்புப் பிரிவு முயல்வதாகவும், அதனால் தன்னுடன் தொடர்புபட்ட விசாரணைகள் நிறைவுறும்



வரை அல்லது சட்ட மா அதிபரின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளும் வரையில் தன்னை கைது செய்வதை தடுத்து இடைக்கால தடை உத்தரவொன்றினை பிறப்பிக்குமாறும் (பக்.14)

## இராணுவம் தலையிடும் அளவு பாரிய பிரச்சினைகள் நாட்டில் இல்லை

ஒரு சில அடிப்படைவாத குழுக்களினால் முன்னெடுக்கப்படும் சம்பவங்களை ஊடகங்கள் பூதாகரமாக காண்பித்து நாடு முழுவதும் பாரிய பிரச்சினை உள்ளது போன்று சித்தரிப்பதாகவும், தலைப்புச் செய்திக்காக இவ்வாறு சில ஊடகங்கள் செய்வதால் ஏற்படும் பாதிப்புக்கள் மிகவும் பாரதூரமானதெனவும் பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.



செய்திகள் மூலம் பிரச்சினையை பெரிதுபடுத்தி காண்பிப்பதை விட்டுவிட்டு மக்களிடையில் அமைதியை ஏற்படுத்தும் விதத்தில் ஊடகங்கள் மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு பொலிஸாருக்கு உதவியாக இராணுவத்தை அழைக்கும் அளவுக்கு நாட்டில் பாரிய பிரச்சினைகள் இல்லை. மாறாக பொலிஸாருக்கு உதவியாக இராணுவம் அழைக்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் தீர்மானிக்கும் பட்சத்தில் அது தொடர்பில் கவனம் செலுத்த முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (பக்.14)









Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அளுத்கம இன அழிப்பைக் கொண்டாடும் இனவாதத் தீ




- ஸZபர் அஹ்மத்

2014 ஜூன் 15 அளுத்கம கலவரம் நடந்த தினத்தில்... ஸாரி.. 'கலவரம்' என்ற சொல்லை உபயோகிக்கக் கூடாது. கலவரம் என்பது இரு தரப்புகள் மோதிக் கொள்வது. ஆகவே இன அழிப்பு (GENOCIDE) நடைபெற்ற தினத்தில் அல் ஜஸீரா தொலைக்காட்சி சேவை எப்படியோ சம்பவத்தை மோப்பம் பிடித்து களநிலவரங்களை ஒளிபரப்ப இந்த இன அழிப்பு சர்வதேச கவனம் பெற்றது.

அல்ஜஸீராவைத் தொடர்ந்து பீபீஸின் வாகனங்களும் படை எடுத்தன. இலங்கை அரசு வெட்கித் தலை குனிந்து முந்தானையைப் போட்டுக் கொண்டு அடுப்பங்கரைக்குச் சென்றது.... சம்பிக்க ரணவக்க, அளுத்கமைக் கலவரத்தின் பின்னணியில் ஜிஹாத் க்ரூப் ஒன்று இருந்ததாகவும் சிங்கள வீடுகள் எல்லாம் இந்தத் தீவிரவாத குழுவால் இடித்து தரை மட்டமாக்கப்பட்டதாகவும் கண்டு பிடித்துவிட்டு, சர்வதேச ஊடகங்களை கூட்டி, வந்தவர்கள் எல்லாம் தேச துரோகிகள் என்று பட்டம் சூட்டினார்.

இதெல்லாம் நடந்தது ரிச்சட் நிக்ஸன் அமெரிக்காவில் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அல்ல. இதே சமூக வலை தளங்கள் கோலோச்சிய காலத்தில்.

இந்நிலையில் அளுத்கம கலவரம் தொடர்பாக பாராளுமன்றத்தில் முழு நேரடி விவாதம் ஒன்றை ஜே.வீ.பீ இன் அநுரகுமார திஸாநாயக்க கோர அந்த விவாதமும் நடைபெற்றது. ஆனால் துரதிர்ஷ்டம். முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒருவரும் இருக்கவில்லை.

எல்லா ஜீவராசிகளும் கிங்ஸ்பரி ஹோட்டலில் இப்தார் சாப்பிடச் சென்றிருந்தன. டிஸ்கவரி சேனலில் மான் கூட்டத்தை வேட்டையாடும் சிங்கம் போல தனியாளாய் கர்சித்து விட்டு ஓய்ந்தார் அநுரகுமார.

அதன் பின்னர் அடுத்த 6 மாதங்களில் ஜனாதிபதி தேர்தல் வந்தது. அஸ்வரின் பாராளுமன்ற ஆசனத்திற்கு ஆப்பு சொருகி விட்டு ரிஷாட் நாநா முதலில் பல்டி அடித்தார். கடைசி நேரம் வரை பரபரப்புக் காட்டிய ரவூப் நாநா தேர்தலுக்கு ஒரு வாரத்திற்கு முன்பு மைத்திரி உடன் சேர்ந்து கொண்டார். அனைவரும் புனித நீரால் கழுவப்பட்ட சுத்தமான பக்தர்களானார்கள்.. கடைசியில் யாரும் அநுரகுமார திஸா நாயக்கவைக் கண்டு கொள்ளவில்லை.. சமூகமும் 'ஹேப்பி, இன்று முதல் ஹேப்பி' என்று கீதம் பாடிவிட்டு தூங்கச் சென்றது.

2014 இலாவது அளுத்கம இன அழிப்பு ஒரே நாளில் முடிந்துவிட்டது. ஆனால் இங்கே மெல்லக் கொல்லும் விஷம். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அவலம். இதற்கு இந்த முஸ்லிம் சமூகத்தின் ஏகப் பிரதிநிதிகள் என்று சொல்லும் கூட்டம் சொல்வதை தலையாட்டி பொம்மை போல கேட்டுக்



கொண்டிருந்தால் மியன்மாரை விட கேவல நிலை ஏற்படும்.

தலைமைகளும் சரி, அரசியல்வாதிகளும் சரி பாதுகாப்பான வலயத்தில் இருக்கிறார்கள். அவர்களின் உடமைகள் எரிக்கப்படுவதில்லை. அவர்களின் வாகனங்கள் சேதமாக்கப்படுவதில்லை. அவர்களின் பெண் பிள்ளைகள் மானபங்கப் படுத்தப்படுவதில்லை. எல்லாமே எம்மைப் போன்ற' சாதாரணர்களுக்குத்தான். ஒரு சிவில் சமூகமாக நாம் என்ன செய்யலாம் எப்படி செய்யலாம். எப்படியான அழுத்தங்களைப் பிரயோகிக்கலாம்.

1. கடந்த ஜனாதிபதி தேர்தலின் பின்னர் முஸ்லிம்களுக்க் எதிராக நடந்த வன்முறைகள், பொருளாதார இழப்புகள் பற்றிய ஒரு புள்ளி விபரத்தைத் திரட்டுதல். மேலும் சம்பவங்களில் பாதிக்கப்பட்ட அனைவரையும் ஒன்று திரட்டுதல்.

2. இதுவரை எரிக்கப்பட்ட பள்ளிகள், வர்த்தக நிலையங்கள் பற்றிய ஒரு டாக்குமெண்டரி தயாரித்தல். ஆங்கிலம் மற்றும் அரபு மொழிகளில் பாண்டித்தியம் பெற்ற பண்டிதர்களை அதில் பேச வைத்தல்.

3. மியன்மார் அவலங்களை வெளிக் கொணர்ந்து மியன்மார் அரசையே கிடுகிடுக்க வைத்த அல்ஜஸீரா போன்ற ஊடகங்களை வரவழைத்து குறித்த டாக்குமெண்டரியை வழங்குதல். இலங்கை விவகாரத்தை பேசு பொருளாக்கக் கூறுதல்.

4. மகிந்த காலத்தில் போலல்லாது இதுவரை கொஞ்ச நஞ்ச ஊடக சுதந்திரமாவது மிச்சம் உள்ளதால் சர்வதேச ஊடகங்களை எல்லாம் அழைத்து ஒரு பத்திரிகையாளர் சந்திப்பை ஏற்பாடு செய்தல். அதில் மேற்படி சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களை சந்திக்க வைத்தல்.

5. அமைதியான கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்தல். இதில் எந்தவித கோஷங்களும் தேவையில்லை. சுலோகங்களை ஏந்திக் கொண்டு நிற்கலாம். சர்வதேச கவனம் முக்கியம்.

6. ஜெனீவா மனித உரிமை ஆணைக் குழுவுக்கு இலங்கை விவகாரம் தொடர்பாக ஒரு அறிக்கை சமர்ப்பித்தல். சிவில் அமைப்புகள் இது பற்றி உடன் கவனம் செலுத்தலாம்.

7. எமது அரசியல் கோமாளிகளுக்கும், மார்க்க புரோகிதர்களுக்கும், முல்லா கூட்டத்திற்கும் கூஜா தூக்குவதை விட்டுத் தொலைத்து விட்டு, சிங்கள சமூகத்தில் இருக்கும் புத்திஜீவிகள், விக்டர் ஐவன் போன்ற பிரபல ஊடகவியலாளர்களுடன் இறுக்கமான நட்பைப் பேணி அவர்கள் மூலமாகவே பிரச்சினையின் சீரியஸ்தனத்தை பெரும்பான்மையினருக்கு எத்திவைத்தல்.

8. கடைசியாக ஒரு முக்கிய விசயம் 2009 இல் இறுதி யுத்தத்தில் முள்ளி வாய்க்காலில் அப்பாவிப் பொதுமக்கள் எவரும் கொல்லப்படவே இல்லை என்று பெருங்குரல் எழுப்பியவாறு பிஸ்னஸ் க்ளாஸில் ஜெனீவாவுக்கு இலவச பயணம் மேற்கொண்டு இன்னொரு சிறுபான்மை சமூகத்தில் வயிற்றில் அடித்த ஆத்மாக்கள் எல்லாம் செய்த தவறுக்கு பகிரங்க மன்னிப்பு கேட்டு சாப விமோசனம் பெறல்....

# பேயில் பயந்து பிசாசில் விழுந்த கதை

- முஜீப் இப்ராஹீம்

2015 ஜனவரியில் ஒரு பழைய விதானையினை நாம் ஜனாதிபதியாக்கினோம்!

அவர் 'இதற்கு பிறகு ஜனாதிபதியாகும் நோக்கம் தனக்கில்லை' என்று எளிமையாக நடைபெற்ற சுதந்திர சதுக்க பதவியேற்பு நிகழ்வில் சொன்னார்.

ஆனாலும் அவருக்குள் உள்ளூர இரண்டாவது தடவையும் ஜனாதிபதியாகும் ஆசை வளர்ந்ததாக சில முஸ்லிம் அமைச்சர்கள் பிறகு சொன்னார்கள்! அந்த ஆசை எந்த மட்டில் உள்ளதென்று இப்போது சரியாக அறியமுடியவில்லை.

அவர் சொந்தக் கையால் சோறு திண்டதையும், எல்லோரும் பயணிக்கும் விமானத்தில் ஏறிச் சென்றதையும் 'ஆ' என்று பார்த்து ஆச்சரியப்பட்டோம்.

2020 வரை தான் ஜனாதிபதியாகப் பதவி வகிப்பதை மரணத்தை தவிர எதுவும் தடுத்துவிடாது என உறுதியாக நம்புகிற உள்ளார்ந்த கடும் போக்கு பௌத்தரான அவரிடம் நாம் எந்த விதமான கழிவிரக்கத்தை எதிர்பார்க்க இயலும்?

2015 ஆகஸ்ட் இல் நடந்த பொதுத் தேர்தலில் பெரும்பாலான ஆணையை பெற்று போதாக் குறைக்கு சுதந்திரக் கட்சியோடு தேசிய அரசை அமைத்த பிரதமர் ரணில் அல்லது ஞானசாரவின் பாஷையில் பொன்னயர் அல்லது சர்வதேச அளவில் அரசியல் நரியாக அறியப்பட்டவர்! அவர் 2020 வரை தனது ஆட்சி கவிழப் போவதில்லை என்று உறுதியாக நம்புகிறார்!

புதிய யாப்பின் படி ஜனாதிபதியே நினைத்தாலும் 2019 இல்தான் பாராளுமன்றத்தில் கைவைக்க முடியும்!

இந்தப் பின்னணியில் நமது 21 சோனக மந்திரிமாரும் ஓவர் நைட்டில் சமூக உணர்வு பொங்கி எதிர்க்கட்சியில் அமர்ந்துவிடும் அற்புதங்கள் நிகழ்ந்தாலும் கூட ரணிலின் ஆட்சிக்கு எந்த அசை



வையும் அது கொடுத்துவிடாது!

ஆகவே அவரிடமிருந்தோ அவரது சிஷ்யப் பிள்ளையான சட்டம் ஒழுங்கிற்கு பொறுப்பான அமைச்சரிடமிருந்தோ நமது எரிகிற பிரச்சினைகளுக்கு நிவாரணங்களை எதிர்பார்க்க இயலாது!

நமது 21 மந்திரிகளும் அரசிலேதான் ஒட்டிக் கொண்டுள்ளனர்! கடந்த அரசிலாவது எதிர்க்கட்சிகளில் எதிர்த்துப் பேச ஒன்றிரண்டு பேராவது இருந்தார்கள்! இப்போது அனைவரும் ஒரே பக்கம் இருப்பது அவர்களுக்கு ரொம்ப comfortable zone!

அவர்களுக்குள் யாரும் யார் மீதும் விரல் நீட்டி 'உமது அரசு என்ன செய்து கொண்டிருக்கிறது? இவ்வளவு நடந்தும் ஏன் பதவியில் ஒட்டிக்கொண்டிருக்கிறாய்?' என்றெல்லாம் கேள்விகளை கேட்க முடியாது!

அவர்கள் ஒரே பாத்திரத்தில் போடப்பட்ட முட்டைகளை போல ரொம்ப பத்திரமாக இருக்கிறார்கள்! அவர்களது அரசியல் என்றுமில்லாதவாறு மிக்க பாதுகாப்பாய் இருக்கிறது!

நாள்தோறும் கொளுத்தப்படுகிற தீச்சுவாலையில் வந்து மடிகிற புகையினை தங்களது எதிர்கால தேர்தல்களுக்கான முதலீடாக கவனமாக சேமித்துக்கொண்டிருக்கிறார்கள்!

நடக்கிற கொடூரங்களை கட்டுப்படுத்த நாதியற்ற இந்தக் கோழைகள் வெளிநாட்டு சதிகளிலும், மஹிந்தவின் கும்பலிலும் பழியை போட்டு நழுவுகிற வழமையான பல்லவிகளையே பாடிக்கொண்டிருக்கிறார்கள்! அவர்கள் அனைவரும் ஒரே பக்கத்தில் அதிலும் பாதுகாப்பான அரச பக்கத்தில் பக்குவமாக பதுங்கியிருக்கிறார்கள்!

இவர்களில் முதுகெலும்புள்ள ஒருவனாவது ஒரு நாளைக்காவது எதிர்த் தரப்பில் அமர மாட்டானா? என்ற நப்பாசையில்தான் இலங்கை முஸல்மான்களின் தீயின் மேலான சுடுகிற மூச்சுக் காற்று நகர்ந்து கொண்டிருக்கிறது!

கடந்த அரசில் படுமோசமான அனுபவங்களை பெற்ற இலங்கை முஸ்லிம் சமூகம் மீண்டும் அதே விதமான நெருக்கு வாரங்களுக்கு இலக்காகிற போது இன்னொரு தேர்தலில் அவர்களால் என்னதான் செய்துவிட இயலும்?

பேயில் பயந்து பிசாசில் விழுந்தோம்!
மீண்டும் பிசாசில் பயந்து பேயில் விழுவதா?

இந்த சூத்திரத்தினை இப்போது இரண்டு பெருந் தேசியவாத கட்சிகளின் தலைமைகளும் வடிவாகப் புரிந்து வைத்திருக்கிறார்கள்!

தமிழனுக்கு அடுத்ததாக சோனகனை ஒடுக்க வேண்டும் என்று யாரோ கண்ணுக்குத் தெரியாத சக்தி எழுதிக் கொடுத்த Script இனை செயல்படுத்த வேண்டிய தேவை அவர்களுக்கு உண்டு!

இலங்கை போன்ற பாவப்பட்ட தேசங்களில் நின்று போயுள்ள ஆயுத பெரு வணிகத்தைத் தொடர வேண்டிய தேவை அந்த Script இனை எழுதிக் கொடுத்தவர்களுக்கு இருக்கிறது!

ஆகையால் சோனகர் மீதான நெருக்குவாரங்களுக்கு கடும் அவசரப்பட்டெல்லாம் நீதி வழங்க வேண்டிய தேவை இங்கே யாருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை!


அடுத்த முறை முஸ்லிம் வாக்குகளை wholesale ஆக முஸ்லிம்களின் காவலன் மஹிந்த ராஜபக்ஷ என்ற கோசத்துடன் வெற்றிகரமாக கொண்டு சேர்க்க இப்போதே ஆயத்தமாகும் 'தேசியத் தலைவர்கள்' இருக்கும் வரை சதிகளை வரைகிற சர்வதேச எழுத்தாளர்களும், வியாபாரிகளும் தங்கள் முயற்சியில் சோர்ந்து விடப்போவதில்லை!

அடுத்த தேர்தலில் 'நாங்கள் மோசம் போய் விட்டோம், இனி மஹிந்தவே எம்மைக் காப்பார்' என்ற முழக்கங்களோடு அமைச்சுக்கும், அரை அமைச்சுக்கும், திணைக்கள தலைமைகளுக்கும் என ஆளுக்காள் போட்டி போட்டு பேரம் பேசப் போகும் சோனக அரசியல் தலைவர்களின் 'பலத்தினை' இரு பெருங்கட்சிகளின் தலைவர்களும் நன்றாகவே அறிந்து வைத்திருக்கும் பின்னணியில் நமக்கான நீதி கிடைத்து விடப்போவதில்லை!

ஆகையினால் மக்களே!
தினந்தோறும் தீயில் வெந்து வெதும்பி
ஆத்திரங்களை பொது வெளியில் கொட்டி....
ஜனாதிபதியை, பிரதமரை, அரசை, 21
நாயகர்களை திட்டி வசைபாடி...
எதுவும் நடந்துவிடப்போவதில்லை!

ஒரே ஒரு வழிதான் இருக்கிறது.
இறைவனிடம் முறையிடுங்கள்.
மீண்டும் மீண்டும் முறையிடுங்கள்.....
ஆத்திரம் வருகிற போதெல்லாம் அவனிடமே
முறையிடுங்கள்.
நெருப்புக்குள் நபி இப்ராஹிமை காத்த
இறைவன். நமக்கு நிச்சயமாக நீதியை தருவான்.
அதை தவிர வேறெந்த தெரிவுமில்லை.

# சிறு துளி பெரு வெள்ளம்




- பஹத் ஏ. மஜீத்

அண்மைக் காலமாக அதிகம் முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்கள் தீக்கிரையாக்கப்பட்டது. அதிலும் மஹியங்கனையில் காத்தான்குடி வர்த்தகரின் கடை எரிந்து சாம்பல் ஆகியதில் அவரின் அனைத்து உழைப்புக்களும் சாம்பலாகின. இதனால் அவருடைய 6 பெண் பிள்ளைகளின் வாழ்வு கேள்விக்குறியாகியது.

இந்த சம்பவத்தை தந்தையின் பேஸ்புக் மூலம் அறிந்த மாவனல்லை பதுறியா பாடசாலையில் தரம் 7 இல் கல்வி பயிலும் முஹம்மட் பவ்மி முஹம்மட் இஹ்ஹாப் என்ற சிறுவன் அடுத்த நாள் பாடசாலை சென்று தனது நண்பர்களிடம் ரூபா 10 ஐ அறவிட்டுள்ளார்.

நண்பர்களும் காரணம் கேட்டுக் கவலையடைந்தனர். பாடசாலை முழுதும் இந்தச் செய்தி பரவியது. இதுவரை 2800 ரூபா சேமித்துள்ள இந்தச் சிறுவனின் முயற்சி பாராட்டத்தக்கது. இந்தச் சிறுவன் உங்களிடம் கேட்பதெல்லாம் ரூபா 10 ஐதான். முடிந்தால் உதவி செய்து தீக்கிரையான கடை உரிமையாளருக்கு ரமழானில் உதவிடுங்கள்.

இலங்கை முழுவதும் உள்ள முஸ்லிம்கள் 10 ரூபா கொடுத்தால் [illegible] வரும். அவருக்கு [illegible] இதுவே அந்த சிறுவனின் இலட்சியம்.

# மதத் தலைவர்களின் பிரதிநிதித்துவதத்துடன் கூடிய மாவட்ட மட்டத்திலான நல்லிணக்க குழுக்களை அமைத்தல்

நாட்டின் தற்போதைய நிலையினை கருத்திற் கொண்டு மாவட்ட செயலாளர் அவர்களை அழைப்பாளராக கொண்ட மதத் தலைவர்கள், பிரதேச பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் தெரிவு செய்யப்பட்ட வேறு தகைமையானவர்களின் பிரதிநிதிகளுடன் கூடிய மாவட்ட மட்டத்திலான நல்லிணக்க குழுக்களை அமைப்பதற்கும், மதங்களிடையேயும், இனங்களிடையேயும் தொடுக்கப்படும் மோதல்களை தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு குறித்த குழுவுக்கு அதிகாரத்தை வழங்குவதற்கும், மாவட்ட குழுக்களுக்கு மேலதிகமாக தேசிய நல்லிணக்க குழுவொன்றை நியமிப்பதற்கும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சர் எனும் ரீதியில் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

- அஸீம் ஸ்ரீலங்கீ

பிறை விடயத்திலும், ஹலால் விடயத்திலும், பெண்கள் முகமூடும் விஷயத்திலும், டீவிக்கு முன் தோன்றியவர்கள்....
எம் சொத்துக்கள் தீக்கிரையாக்கப்படுகிற போது மட்டும் கோட்டைக்குள் ஒழிந்திருப்பது ஏன்?




டுபாயில் நடைபெற்ற 89 நாடுகள் பங்கு பற்றிய சர்வதேச கிராஆத் போட்டியில் கண்டி அல் ஹாமிழ் அர்கம் ஹுசைன் 4 ஆம் இடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவை: உடனடியாய் ஓர் எதிரி

• நேசன்


எமது அரசாங்கங்கள் எதிரி மைய வியூகத்தினையே (Enemy - Centered Strategy) ஊக்குவித்து வந்துள்ளன. பயங்கரவாதத்தை வேறுபடுத்தி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற மேற்கு நாடுகளின் மக்கள் மைய வியூகங்கள் (Pop Ulation - Centered Strategy) வெற்றியளிக்கவில்லை. ஆனாலும் எமது வியூகம் வெற்றி பெற்றிருக்கிறது என மெகா பொலிஸ் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க டெய்லி மிரர் பத்திரிகைக்கு அண்மையில் வழங்கிய செவ்வியொன்றில் தெரிவித்துள்ளார்.

உலகின் ஆளும் வர்க்கங்கள் தமது இருப்பைப் பலப்படுத்திக் கொள்வதற்கு தனது மக்களுக்கு ஒரு எதிரியைக் கண்டு பிடித்துக் கொடுத்து ஆட்சி செய்ய வேண்டிய நிலையில்தான் உலக ஒழுங்கு மாறிப்போயிருக்கிறது. பாகிஸ்தானை எதிரியாகக் காட்டிக் காட்டியே ஒவ்வொரு இந்திய அரசாங்கமும் தனது அரசியல் இருப்பை உறுதிசெய்து கொள்கிறது. எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் பாகிஸ்தானிய எதிர்ப்புணர்வை விதைப்பதை தனது கடமையாகக் கொண்டு செயற்படும் போக்கு இந்திய அரசியலில் இருக்கிறது.

இது படிப்படியாக வளர்ந்து பரிணாமமடைந்து எந்தப் பாகிஸ்தானியரைக் கண்டாலும் வெறுப்பை உமிழ்வதாக மாறி, பின்னர் எந்த முஸ்லிமைக் கண்டாலும் எதிரியாகச் சித்திரிப்பதாக வளர்ந்து, கடைசியில் முஸ்லிமை கொத்துக் கொத்தாகக் கொன்று குவித்த மோடியை ஆட்சிபீட மேற்றி நாட்டுத் தலைவனாக்கிக் கொண்டாடும் அளவுக்கு வந்திருக்கிறது.

இந்தியா அண்மையில் இருக்கும் ஓர் உதாரணம் மாத்திரம்தான். மொத்த உலக ஒழுங்கும் இப்படித்தான் இயங்கி வருகிறது என்பது இஸ்லாமோபோபியா என்ற புதிய வார்த்தைப் பிரயோகம் உலக ஒழுங்கில் நுழைந்ததில் இருந்து புரியப்பட்ட விடயம்.

இந்த எதிரி மனப்பான்மையை வைத்துத் தான் குடியரசுக்குப் பின்னர் உருவாகிய முதலாளித்துவவாத அரசாங்கம் இலங்கையினுள் செயற்பட்டது. தமது உரிமைகளைக் கோரிய தமிழர்கள் இந்த நாட்டின் எதிரிகளாக்கப்பட்டார்கள். அவர்களைக் கொன்றொழிப்பது தேசிய வாதமாக்கப்பட்டது. பின்னர் வந்த எல்லாத் தலைவர்களும் இந்தத் தீயில் குளிர்காய்ந்தவர்கள்தான்.



மோடியைப் பிரதிபண்ணுவதில் குறிப்பானவராகச் செயற்பட்ட மஹிந்த ராஜபக்ஷ இதில் விஷேடமானவர். அவருடைய ஊழல் மிகுந்த ஆட்சியை மக்களின் கவனத்திலிருந்து திருப்பி தனது இருப்பைப் பலப்படுத்திக் கொள்வதற்கு அவருக்கு ஓர் எதிரி தேவைப்பட்டது. இதற்கு முஸ்லிம் எதிர்ப்பலை அவருக்குக் கைகொடுத்தது. தற்போதைய அரசும் அதே தண்டவாளத்தில் முஸ்லிம் எதிர்ப்புணர்வினை விதைத்து தனது பயணத்தைத் தொடர்கிறது.

அனைத்துக்கும் சர்வதேச வழிமுறைகளைப் பின்பற்றுகின்ற இலங்கையின் கூட்டரசு இந்த எதிரி உருவாக்கத்துக்கான சாதனமாக சர்வதேசம் பயன்படுத்தும் இஸ்லாமோபோபியாவை முன்னெடுத்து வருகிறதா என்ற கேள்விகள் நாட்டில் பரவலாக எழும்பத் துவங்கியுள்ளன. கொழும்பு டெலிகிராபில் இஸ்ஸத் ஹுஸைனின் அண்மைய கட்டுரைகள் இந்த விடயத்தைத் தழுவியதாக அமைந்துள்ளன.

இந்தக் கேள்வி எழும்புவதற்கான முக்கியமான காரணம் உலகில் இஸ்லாமோபோபியாவை சந்தைப்படுத்துவதற்காக தற்போது பயன்படுத்தப்படும் ஐ.எஸ் இலச்சினை பற்றிய கதையாடல்கள் இங்கும் ஆரம்பிக்கப்பட்டிருப்பது தான். மஹிந்த ராஜபக்ஷ தனக்கெதிராக முஸ்லிம்கள் திரும்புவதற்கு சர்வதேச சதியே காரணம் எனப் பல தடவைகள் குறிப்பிட்டிருந்தார். அவரது காலத்தில் அவரது சகோதரர் கோதபாயவினால் வடிவமைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகின்ற பொதுபலசேனாவுக்கும் நோர்வேக்கும், பொதுபலசேனாவுக்கும் மியன்மாருக்கும் இருந்த தொடர்புகளை வைத்துப் பார்க்கும் பொழுது இதில் உண்மை இல்லாமல் இல்லை என்ற கருத்தே மேலோங்குகிறது.

மஹிந்த சொல்வது போல பொதுபலசேனாவின் முஸ்லிம் விரோத செயற்பாடுகள் தனக்கு அப்பாற்பட்ட சர்வதேச விவகாரம் என்பதை ஏற்றுக் கொண்டாலும் கூட இஸ்ரேலுக்கு விஜயம் செய்த முதல் ராஜதந்திரியாக அவர் தனக்கு மகுடம் சூடிக் கொண்டமை, அவர் குறிப்பிடுகின்ற சர்வதேசச் சதி வலையில் அவரையும் பங்காளியாக்குகின்றது.

சர்வதேச ஒழுங்கில் பேசப்படுவது போல பொதுபலசேனாவின் வஹ்ஹாபிஸத்துக்கு எதிரான கோஷங்கள் இங்குள்ள தௌஹீத் ஜமாஅத்தை அடையாளப்படுத்துவதற்கு முன்வைக்கப்பட்டதல்ல என்பது தற்போதைய உலகப் பொதுமொழியை பெயர்த்துப் பார்க்கும் போது புரிகிறது. சுருங்கச் சொன்னால் உலக அரங்கில் வஹ்ஹாபிஸம் என்பது ஐ.எஸ்க்கு முன்னரான தீவிரவாதக் கட்டம்.

தௌஹீத் ஜமாஅத்தைக் குறிப்பதற்கு, முன்னர் பாரம்பரிய முஸ்லிம்களால் பயன்படுத்தப்பட்டு வந்த வஹ்ஹாபிகள் என்ற சொல்லாடலை வைத்து இலங்கையிலுள்ள தௌஹீத் ஜமாஅத்துக்களை இந்தத் தீவிரவாத வட்டத்துக்குள் அடக்குவதற்கு இவர்கள் முயற்சித்த போதும் கூட, ஸ்ரீலங்கா தௌஹீத் ஜமாஅத் தவிர்ந்த ஏனைய தௌஹீத் ஜமாஅத்துக்கள் இதற்குள் சிக்கவில்லை. இது போன்ற முஸ்லிம் விரோத செயற்பாடுகளே கடந்த ஆட்சியை தக்க வைத்தன என்பது வெள்ளிடைமலை.

பொதுபலசேனா சூடாக்கி வைத்த சட்டி புதிய அரசாங்கத்துக்கு ரொட்டி சுட்டுக் கொள்வதற்கு தோதாக அமைந்திருக்கிறது. நாட்டில் சட்டம் இயற்றுவதிலிருந்து அனைத்தையும் சர்வதேசத்துக்கு தாரைவார்த்துள்ள புதிய அரசாங்கம் தனக்கான எதிரியையும் சர்வதேசத்தில் இருந்தே பெற்றுக் கொள்ள முயற்சித்தால் அது ஆச்சரியப்படத்தக்க விடயமல்ல.

சர்வதேச எதிரியான ஐ.எஸ்ஐ இலங்கைக்குள் கொண்டுவருவதற்கான கதையாடல்கள் நாட்டிலே பரவிவருவது இதுபோன்றதொரு சந்தேகத்தை மக்கள் மத்தியில் வளர்த்து விட்டுள்ளது. பொதுபலசேனா இலங்கைக்கு ஐ.எஸ் பயங்கரவாதத்தை அழைப்பது போன்று நடந்து கொண்டிருக்கிறது என கலாநிதி லக்சிறி பெர்னாண்டோ தனது கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

2015 இல் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் முதல் ஐ.எஸ் போராளியாக அபூசுரையா ஸைலானி அடையாளம் காணப்பட்டார். முகம் தெரியாத இந்தப் போராளி யார், எவர் என்ற எந்தத் துப்புக்களும் இன்றியே இவர் தொடர்பான ஜோடனைகள் பரவலாக்கப்பட்டு இலங்கை முஸ்லிம்களில் ஐ.எஸ் தீவிரவாதிகள் இருக்கின்றார்கள் என்ற கதையை ஊர்ஜிதப்படுத்த முயற்சிக்கப்பட்டது. இதற்கிடையில் மேலும் 32 பேர் இலங்கையில் இருந்து ஐ.எஸ் இல் இணைந்து கொண்டதாக தகவல்கள் பரவின. ஊடுருவுவதற்கு மிகவும் இலகுவான முஸ்லிம் சமூகத்தில் இருந்து இவர்கள் யார் என்பதைக் கண்டுபிடித்து அடையாளப்படுத்த முடியாதிருந்த நிலையில் இலங்கையின் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ இந்தத் தகவல்களை உறுதிப்படுத்துவதற்கு அண்மையில் முயற்சி எடுத்திருந்தார்.

இந்த நிலையிலேயே மீண்டும் ஐ.எஸ் தொடர்பான கதைகள் சூடாகிக் கிளம்பியிருக்கின்றன. அல்ஜிஹாத்-அல்கைதா, அல்லாஹு அக்பர் போன்ற நூல்களினூடாக இஸ்லாமிய பயங்கரவாதம் தொடர்பான கருத்துக்களை வெளியிட்ட அமைச்சர் சம்பிக்க ரணவக்க இவற்றின் விளைவுகளை அறுவடை செய்வது போல் அறிக்கை ஒன்றை விடுத்திருந்தார். அதில், மேற்கத்தேய நாடுகளில் இடம்பெறும் பயங்கரவாத நகர்வுகள் ஆசியாவையும் இலக்கு வைத்துச் செயற்படுகின்றன.

இந்தியா, பங்களாதேஷ், மியன்மார் நாடுகள் எதிர்கொள்ளும் பயங்கரவாதச் சூழல் இலங்கைக்கும் உள்ளது. இலங்கையிலும் அடிப்படைவாத செயற்பாடுகள் உள்ளன என்பதை மறந்துவிடக் கூடாது. மேற்கத்தேய நாடுகளுக்கு மாத்திரம் அச்சுறுத்தலாக உள்ள ஐ.எஸ் பயங்கரவாதம் இன்று உலகம் முழுவதும் பரவியுள்ளது. எமக்கும் இந்தப் பாதிப்பு உள்ளது என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

இலங்கையில் பொதுபலசேனா போன்ற அமைப்புக்களுக்கும் சில பௌத்த தேரர்களுக்கும் எதிராக சிலர் கருத்துக்களை முன்வைக்க முடியும். அதேபோல இவர்கள் சில இனவாதக் கருத்துக்களை முன்வைப்பதை மறுக்கவும் முடியாது. ஆனாலும் இவர்களது சில கருத்துக்களை நாங்கள் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டிய தேவை உள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

டெய்லி மிரர் பத்திரிகைச் செவ்வியில் அவர் இதனை மேலும் விளக்கமாக விபரித்திருக்கிறார். தீவிரவாதமயப்படுத்தப்பட்ட இளைஞர்களே மன்செஸ்டர் தாக்குதலை நடத்தினார்கள். இது போன்ற ஒற்றை நரிகள் (Lonely Wolf) இந்நாட்டில் எத்தனை இயங்கி வருகின்றன? (பக்.14)

# மூதூர் மாணவிகள் பாலியல் துஷ்பிரயோகம்: சமூகக் குற்றங்களுக்கு போடப்படும் இனவாத முடிச்சு?

கடந்த மே மாதம் 28 ஆம் திகதி திருகோணமலை, மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்லிகைத் தீவிலுள்ள பெருவெளிக் கிராமத்தில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

மல்லிகைத்தீவு பெருவெளி தமிழ் கலவன் பாடசாலையில் முஸ்லிம் ஒப்பந்தக்காரரினால் ஒப்பந்த வேலை இடம்பெற்று வருகின்ற நிலையில், குறித்த ஒப்பந்தக்காரர் மீதும் அவரோடு சம்பந்தப்பட்டவர்கள் மீதும்; எவ்வித ஆதாரங்களுமின்றி குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

துஷ்பிரயோக சம்பவம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் ஒப்பந்தக்காரரோ அவரோடு சம்பந்தப்பட்டவர்களோ குறித்த இடத்தில் இருக்கவில்லை. அங்கு வேலை செய்து கொண்டிருந்த இருவரும் வெளியில் இளைப்பாறிக் கொண்டிருந்த சமயம்தான் மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஞாயிற்றுக் கிழமை அறநெறிப் பாடசாலை மற்றும் ஆங்கில வகுப்பு என்பன நடந்து முடிந்தவுடன் நீட்டமான சட்டை அணிந்த ஒரு நபர் உள்ளே சென்றிருக்கிறார். அதனை ஆசிரியர் கண்டிருந்தாலும் சரியாக ஞாபகமில்லை என பின்னர் பொலிஸில் குறிப்பிட்டிருக்கிறார். அதற்குப் பிறகு இந்த மாணவிகள் நடந்த விடயங்களை வீட்டிற்குப் போய்ச் சொன்னபோது பெற்றோர்கள் பாடசாலையை நோக்கிப் படையெடுத்தனர். இதன்போது இங்கு வேலை செய்து விட்டு இளைப்பாறிக் கொண்டிருந்த இருவரையும் பொது மக்கள் பிடித்து அடித்திருக்கின்றனர்.

விடயத்தின் பாரதூரத்தை அறிந்து பாடசாலையின் அதிபர் பிரதான ஒப்பந்தக்காரரான யூனுஸ் ஹாஜியாருக்கு தொலைபேசியில் அழைப்பை ஏற்படுத்தி அவரை அவசரமாக பாடசாலைக்கு வருமாறு அழைத்திருக்கிறார். அவர் அந்த இடத்துக்கு பொலிஸ் பாதுகாப்போடுதான் சென்றார். என்றாலும் அங்கிருந்த மக்கள் பொலிஸாரின் அதிகாரத்தையும் மீறி அவரைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர். இதனைத் தொடர்ந்து மாகாண சபை உறுப்பினர் லாஹிர், முன்னாள் தவிசாளர் பாயிஸ் ஆகியோர் குறித்த இடத்துக்குச் சென்று ஓரளவுக்கு நிலைமையைக் கட்டுப்படுத்தினர்.




வகுப்பிற்காக பாடசாலைக்குச் சென்ற மாணவிகள் மீது பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமையினால் ஆத்திரமடைந்த பொது மக்கள் மல்லிகைத் தீவில் பாரிய ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர். அந்த ஆர்ப்பாட்டத்தில் மாடு தின்னிகள், சோனிகள், காடையர்கள், நோன்பை பிடித்துக் கொண்டு இதனை செய்யலாமா போன்ற வார்த்தைகள் தமிழ் மக்களால் பாவிக்கப்பட்டன. முற்று முழுதாக அத்தனை கோஷங்களும் முஸ்லிம்களுக்கும் இஸ்லாத்திற்கும் எதிரானவைகளாகவே காணப்பட்டன.

உண்மையிலேயே இந்த சம்பவத்திற்கு காரணமானவர்கள் யார் என்பதை உறுதிப்படுத்தாமலே இந்த ஆர்ப்பாட்டங்கள் முஸ்லிம்களுக்கெதிராக கிழக்கு மாகாணம் பூராகவும் பரவியது. இறுதியாக கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு முன்னாலும் இத்தகைய இனவாதக் கோஷங்களோடு ஆர்ப்பாட்டமொன்று இடம் பெற்றது. தோப்பூரை மையப்படுத்தி அண்மைக் காலமாக சில முஸ்லிம் விரோதப் போக்குகள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த 27 ஆம் திகதியும் வீகரமான் நகர் எனும் கிராமத்தில் தோப்பூரைச் சேர்ந்த முதலாளிமார் காணிகளை அடாவடித்தனமாக அபகரிக்கின்றனர் என்று 18 கிராமங்களைச் சேர்ந்த ஆதிவாசிகள் சேர்ந்து ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர். அதற்கு முன்னரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்காக வந்த ஒரு நோயாளி காணாமல் போனதாக தோப்பூருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெற்றது.

தோப்பூர் பிரதேசத்தைப் பொறுத்தவரை முஸ்லிம்களும் தமிழர்களும் பல காலமாக அன்னியோன்னியமாக பழகி வருகின்றனர். அப்படியிருக்கும்போது இந்த மக்கள் திடீரென முஸ்லிம்களுக்கெதிராக செயற்படுகின்றமைக்குப் பின்னால் வேறு சக்திகள் செயற்படுகின்றன என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக இத்தகைய செயற்பாடுகளை டயஸ்போராக்கள் பின்னாலிருந்து இயக்குகின்றார்களா என்ற சந்தேகமும் வலுவாகக் காணப்படுகின்றது. ஏனெனில் அவர்கள் அண்மைக்காலமாக சமூக வலைத்தளங்களில் பகிரங்கமாகவே முஸ்லிம்கள்தான் எமது பொது எதிரி. அவர்களை சிங்களவர்களோடு சேர்ந்து தாக்குவோம் என குறிப்பிட்டிருக்கின்றனர். இதற்குத் தேவையான ஆதாரங்களும் உள்ளன.

அதேசமயம் மாணவிகளின் பாலியல் துஷ்பிரயோக சம்பவத்தை பிரபல்யமாக்கியதும் லாவன்யா லாவன்யா என்ற போலி முகநூல் நபராகும். இந்த நபர் மூன்று தமிழ் சிறுமிகளை முஸ்லிம் காடையர்கள் கற்பழித்து கொலை செய்து விட்டனர் என வேறு புகைப்படங்களை முகநூலில் பதிவேற்றியிருந்தார். இதனை 3000 இற்கும் அதிகமானோர் செயார் பண்ணியிருந்தனர்.

உடனே இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் முஸ்லிம் தரப்பு உண்மையான சிறுமிகள் உயிருடன் இருக்கின்றனர் என சமூக வலைத்தளங்களில் பரவ லாக்கினர். கடந்த 5 ஆம் திகதி அடையாள அணி வகுப்பு இடம்பெற்ற நிலையில், சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள யாரையும் நோக்கி பாதிக்கப் பட்ட சிறுமிகள் விரல் நீட்டவில்லை. இருந்தும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட அறுவருக்கும் கடந்த 12 ஆம் திகதி டீ.என்.ஏ அறிக்கைவரும் வரை பிணை வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை பிரதான ஒப்பந்தக்காரரின் வீட்டைச் சூழ சில மர்ம நபர்கள் நடமாடியிருக்கின்றமையும் சந்தேகத்தை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

30 வருட யுத்தம் முடிவடைந்து முஸ்லிம்- தமிழ் சமூகங்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்ற நிலையில் மீண்டும் இந்த சமூகங்களுக்கிடையில் பிரிவினையை ஏற்படுத்த சில சக்திகள் முனைகின்றமை கவலை தரும் விடயமாகும்.

எனவே பிரிவினைவாதத்திற்கு இடமளிக்காமல் இப்பிரதேசத்தில் வாழ்கின்ற தமிழ், முஸ்லிம் மக்கள் இத்தகைய சமூகக் குற்றங்களை யார் செய்தாலும் தவறுதான் என்ற மனோநிலையில் அணுகி, இதனை மத ரீதியாகவோ அல்லது இன ரீதியாகவோ நோக்காமல் ஒற்றுமையாக செயற்பட வேண்டியது அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




49, Sri Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258 077 222 7569
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## இடைவெளிகள் நிரப்பப்பட வேண்டும்

ஏப்ரல் 16 முதல் முஸ்லிம் விரோத செயற்பாடுகள் 20க்கு மேல் நடந்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஒவ்வொரு நாள் விடியும் போதும் முஸ்லிம் வர்த்தக நிலையமோ முஸ்லிம்களின் புனிதஸ்தலமோ தாக்கப்பட்ட செய்தியுடன் தான் துவங்குகின்ற அளவுக்கு முஸ்லிம் விரோத செயற்பாடுகள் மேலோங்கியிருந்தன. அளுத்கமையில் நடந்த கறுப்பு ஜூன் நிகழ்வுகளின் சிதறிய வடிவமாக இதனைப் பார்க்க முடியும். சரியாகக் கணக்கிட்டுப் பார்த்தால் அளுத்கம இழப்புக்களை விட இந்தச் சிதறிய தாக்குதல்களின் இழப்பு அதிகமாகவும் இருக்க முடியும்.

அளுத்கம நிகழ்வு ஒரே இரவில் நடைபெற்று முடிந்த இனக்கலவரமாகவே நடந்து முடிந்தது. அதன்போது சமூக ஊடகங்கள் இந்த அநியாயத்தை வெளிஉலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவதில் பெரும் பங்காற்றின. வெளிநாடுகளில் உள்ள இலங்கை முஸ்லிம்களும் இதற்கெதிராக ஏதோவொரு வகையில் தமது எதிர்ப்புக்களை வெளிப்படுத்தியிருந்தார்கள். ஜெர்மனியில் ஒரு இலங்கை முஸ்லிம் தனியாக தன் பங்குக்கு பதாதைகளை ஏந்தி கவனயீர்ப்பைப் பெற்றார்.

இறுதியில், நடந்த அநியாயங்களுக்கு அரசாங்கமே நஷ்டஈடு கொடுப்பதற்கும் தனது இராணுவத்தை வைத்தே சேதங்களைப் புனரமைப்பதற்கும் தள்ளப்படும் அளவுக்கு இந்த அழுத்தங்கள் பாதிப்புச் செலுத்தின. அவ்வேளையில் பயந்தாங்கொள்ளிகளாகப் பதுங்கியிருந்த முஸ்லிம் அரசியல்வாதிகளின் அதிகாரத்தை விட மக்களின் செயற்பாடுகள் காத்திரமான பங்களிப்பைச் செய்திருந்தன.

மூன்று வருடங்களுக்குப் பின்னர் கறுப்பு ஜூன் புதிய வடிவில் மீள்பதிப்புச் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. நாளும் பொழுதும் முஸ்லிம்களது உடைமைகள் தாக்குதலுக்குள்ளாகி வருகின்றன. குறிப்பாக முஸ்லிம்கள் புனிதமாகக் கருதுகின்ற ரமழானுடைய காலப்பிரிவில் இந்தக் கைங்கரியங்கள் நடந்தேறியுள்ளன. இருந்த போதிலும் முஸ்லிம் சமூகத்திடமிருந்து எந்த மறுமொழியையும் காணக்கிடைக்காமை இந்தச் சமூகத்தை அவர்களின் சொந்த மக்களே கைவிட்டு விட்டார்களோ என்ற அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது.

தேர்தல் காலங்கள் வரும்போது களத்திலே குதித்து ஷஹீதாகி, பெரியதொரு போராட்டம் நடத்திவிட்டு, தமது மொத்த எதிர்பார்ப்புக்களையும் தேவைகளையும் அரசியல்வாதிகளிடம் ஒப்படைத்து விட்டு ஓய்வெடுக்கின்ற நிலையையே தொடர்ந்தும் முஸ்லிம் சமூகத்தில் காண முடிகின்றது. அடுத்த தேர்தலை எதிர்பார்த்து அரசியல்வாதிகளாக ஏதாவது செய்தால் உண்டு எனும் நிலையில் அவர்கள் எதுவுமே செய்யாவிட்டால் இதுதான் நமது விதி என்று சுருண்டு படுத்துறங்கும் சமூகமாக முஸ்லிம் சமூகம் இயைபாக்கம் அடைந்திருக்கிறது.

செயற்பாடு மந்தமான அரசியல்வாதியை செயற்படச் செய்வதற்கோ அல்லாத பட்சத்தில் தாமாக களத்தில் இறங்கி அரசியல்வாதிகளுக்குப் பாடம் புகட்டும் அளவுக்கு எதையாவது சாதித்துக் காட்டுவதற்கோ இந்தச் சமூகம் முயல்வதாக இல்லை என்பதையே அண்மைய நிகழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.

அரசியல்வாதிகள் தமது அரசியல் இலக்குகளை அடைந்து கொள்ளும் விதமாகவே தமது செயற்பாடுகளை அமைத்துக் கொள்கிறார்கள். இதற்கும் மேலால் பற்றி எரிகின்ற பிரச்சினைகளுக்கு மக்களே முகம் கொடுக்கிறார்கள் என்ற வகையில் மக்களிடமிருந்து குரல்கள் எழுப்பப்பட்டிருக்க வேண்டும். ஆங்காங்கே சேதப்படுத்தப்படுகின்ற உடைமைகளுக்கு எதிராக பாரிய மக்கள் சக்தி ஒன்று திரட்டப்பட்டு மக்களின் பாதுகாப்பு உறுதி செய்யும் வண்ணம் உரிய தரப்பினருக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டிருக்க வேண்டும்.

பிரச்சினையும் தெரிந்து அதனை அடைவதற்கான வழிமுறையும் தெரிந்திருந்தும் களத்திலே இந்தக் கருத்துள்ளவர்களை ஒன்றுதிரட்டும் பலமான சிவில் அமைப்பு ஏதும் முன்னிறங்காததால் ஒரு சமூகத்தின் பிரச்சினை வெறும் சம்பவமாக ஓரம் கட்டப்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இதற்கும் முஸ்லிம் சமூகம் அரசியல்வாதிகளின் தலையில் அனைத்தையும் வாரிப் போட்டு விட்டு தப்பிக்க முடியாது. சமூகத் தளத்தில் இருக்கின்ற அரசியல்வாதியையோ அல்லது சிவில் அமைப்புக்களையோ இயங்க வைப்பது மக்களது பொறுப்பு. மக்கள் தமது கடமையைச் செய்யாமல் விளைவை எதிர்பார்ப்பது வடிகட்டிய முட்டாள்தனம். இயற்கை அனர்த்தங்களின்போது நிவாரணங்களை ஒன்று திரட்டி கச்சிதமாக தனது கடமையைச் செய்த சமூகத்துக்கு தமது உரிமைகள் பறிக்கப்படும் போதும் வெகுண்டெழுவதற்கு சொல்லிக் கொடுக்க வேண்டிய தேவைப்பாடு இருக்காது.

சிவில் சமூகம் தனது சாத்வீகப் போராட்டத்தைத் தொடங்காமல் விட்டு விடுமானால் மக்கள் வன்முறைக் கலாச்சாரத்துக்குத் தள்ளப்படுவது தவிர்க்க முடியாமல் போய்விடும்.

# அரசியல் காலநிலையும் காலநிலை அரசியலும்

• திஸரணீ குனசேகர

2016 மே மாத மழையின் பின்னர் மீண்டும் கடும் வரட்சி நிலை ஏற்பட்டுள்ளது. சாதாரண பருவ மழைக் காலம் செயல்படாததினால் அநுராதபுரம் போன்ற உலர் வலய மாவட்டங்கள் மாத்திரமல்லாமல், கம்பஹா போன்ற ஈர வலய மாவட்டங்களிலும் குடிநீர் பற்றாக்குறை நிலவியது. 2017 பெப்ரவரி, மார்ச் மாதமாகும் பொழுது வரட்சி நிலைமை காரணமாக 10 லட்சத்தினை அண்மித்த இலங்கையர்களுக்கு அவசர உணவு உதவிகள் தேவைப்பட்டன.

2016 இல் ஏற்பட்டது போன்று 2017 இலும் வரட்சி, பெரு மழையுடன் முற்றுப் பெரும் என்றும் சிறியதொரு காலப்பகுதிக்குள் மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு அனர்த்தங்களை தடுத்துக் கொள்ளலாம் என்றும் வளிமண்டளவியல் ஆராய்ச்சியாளர்கள் ஒரு சில மாதங்களுக்கு முன்பு எச்சரிக்கை விடுத்திருந்தார்கள்.

புவி வெப்பம் அதிகரித்தல், இந்து சமுத்திரத்தின் வெப்பம் அதிகரித்துச் செல்லல் போன்ற காரணங்களினால் பிராந்திய நாடுகளில் பருவப் பெயர்ச்சி மழை ஒழுங்கில் பாரிய மாற்றம் ஏற்படலாம் என்று Indian Institute of Tropical Meteorology வளிமண்டலவியல் ஆராய்ச்சியாளரான கலாநிதி ரொக்டி மெதிவ் கோல் தெரிவித்ததாக 2017 பெப்ரவரி 13ம் திகதி (Roar) இணையத்தளம் செய்தி வெளியிட்டது. இதன் விளைவாக வருடாந்தம் இலங்கை நீண்ட கால வரட்சிக்கு முகம் கொடுக்க நேரிடும் எனவும் கலாநிதி கோல் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

கடந்த சில தினங்களாக நாம் கேள்விப்பட்ட பல்வேறு விடயங்களின் மூலம் புலப்படுவது என்னவெனில், வளிமண்டலவியல் ஆராய்ச்சியாளர்களின் இத்தகைய அறிவியல் எதிர்வுகூறல்களை இலங்கை அரசாங்கம் குறிப்பாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சு இம்மியளவும் கவனத்திற் கொள்ளவில்லை என்பதாகும். இம்முறை சண்டே டைம்ஸ் பத்திரிகை அனர்த்த நிலைமைகளுக்கு முகம் கொடுப்பதற்கு தேவையான அடிப்படை விடயங்களை கூட அமைச்சு தயார்படுத்தி வைத்திருக்கவில்லை என முதற் பக்கத்தில் செய்தி வெளியிட்டிருந்தது.

அமைச்சின் செயற்பாடுகள் மிகவும் மந்த கதியில் இடம்பெற்றாலும் அவர்கள் வாய்ச் சொல்லில் வீரர்களாகவே உள்ளார்கள். வளிமண்டலவியல் ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கை விடுத்ததற்கமைய 2016 மே மாதத்தில் ஏற்பட்ட அனர்த்தம் 2017 மே மாதத்திலும் மீள ஏற்பட்டபோது அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா மெக்ஸிகோவில் இருந்தார். 2017 Global Platform for Disaster Risk Reduction எனும் மாநாட்டில் கலந்துகொண்டு இலங்கைக்கு ஏற்படக்கூடிய அனர்த்த நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்து அவற்றிற்கு முகம்கொடுப்பதற்கு குறுகிய மற்றும் நீண்டகால தீர்வுகளைத் தயாரிப்பதற்கு தமது அமைச்சு நடவடிக்கை எடுத்திருப்பதாக அமைச்சர் குறித்த மாநாட்டில் தெரிவித்திருந்தார்.

நூற்றுக்கணக்கான உயிர்களைக் காவு கொண்ட பெரு மழை ஆரம்பித்த பொழுதே அவர் மே மாதம் 24ம் திகதி தமது வெற்றி குறித்து பெருமை பாராட்டியிருந்தார். அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா திறமையற்றவர்கள் நிறைந்த அமைச்சரவையில் அதி திறமையற்றவர். பெரு மழைக்கும் கடும் வரட்சி நிலைமைக்கும் முகம்கொடுப்பதில் அவரது அமைச்சு தெளிவான பின்னடைவைச் சந்தித்துள்ளது. சுயகௌரவமுள்ள அமைச்சரொருவராக இருந்தால் தனது இயலாமையை ஏற்று பதவி விலகியிருக்க வேண்டும். பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு முக்கியத்துவம் அளிக்கும் அரசாங்கமாக இருந்தால் அமைச்சரை பதவி விலக்கியிருக்க வேண்டும்.

ஆனால் இலங்கையில் அவையிரண்டும் நடைபெறுவதில்லை. 2018 மே, ஜூன் மாதங்களில் வெள்ளப் பெருக்கும் மண்சரிவும் ஏற்படும் பொழுதும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சுப் பதவியில் அநுர யாப்பா அவர்களே பதவி வகித்துக் கொண்டிருப்பார்.

### வெள்ளப் பெருக்கு, மண்சரிவு மற்றும் வாகனக் கொள்வனவு

2017 ஏப்ரல் மாதம் அமெரிக்காவின் 'யேல்' பல்கலைக்கழகத்தில் ஒன்றுகூடிய அந்நாட்டின் முதற்தர மனோதத்துவவியலாளர்கள் தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் மனநிலை குறித்து கலந்துரையாடலொன்றை நடாத்தியிருந்ததாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. ட்ரம்ப் Paranoia (சித்தப் பிரமை சார்ந்த, எதிரிகளை ஏற்படுத்திக் கொள்ளல்) மற்றும் Delusion (தவறான நம்பிக்கை, மாயத் தோற்றம்) ஆகிய உளநோய்களால் பாதிக்கப்பட்டிருப்பதாக முடிவுக்கு வந்தார்கள்.

இலங்கையின் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பிலும் இது போன்றதொரு ஆராய்ச்சியை மேற்கொள்ளும் காலம் எழுந்திருப்பதாக மே மாதம் 26 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவத்தின் மூலம் தெளிவாகிறது.







சண்டே டைம்ஸ் பத்திரிகை தெரிவிப்பதன் படி, மே 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை இலங்கை பாராளுமன்றம் சிறிது நேரமே ஒன்றுகூடியது. நாட்டில் ஏற்பட்டுள்ள அவசர நிலைமைக்கான நிவாரணப் பணிகளில் அமைச்சர்கள் ஈடுபட வேண்டும் எனக் குறிப்பிட்டு பாராளுமன்ற அமர்வு அவசரமாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. ஆனாலும் இக்குறுகிய காலப்பகுதியில் அவசர நிதித் தேவையொன்றிற்கான மதிப்பீட்டறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கு ஆளும்கட்சி உறுப்பினர்கள் நடவடிக்கை எடுத்திருந்தார்கள். அமைச்சர்கள், எம்பிக்கள், உயர் அதிகாரிகளுக்கு வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு 369 மில்லியன் ரூபா நிதி இம்மதிப்பீட்டறிக்கையின் மூலம் வேண்டப்பட்டது.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுமாறு சர்வதேச நாடுகளிடம் மண்டியிடும் அரசாங்கம் நாட்டின் செல்வத்தை தமக்கான வாகன இறக்குமதிக்கு செலவழிக்கிறது. இதுவென்றால் நல்லாட்சியல்ல. ராஜபக்ஷ ஆட்சியை வேறொரு பெயரில் முன்கொண்டு செல்வதாகும்.

சண்டே டைம்ஸ் பத்திரிகை குறிப்பிடுவதன் படி, 2017 ஆம் ஆண்டில் மாத்திரம் அமைச்சர்களுக்கும் அரச அதிகாரிகளுக்கும் சொகுசு வாகன இறக்குமதிக்காக வேண்டி ஒதுக்கப்பட்டுள்ள முழுத்தொகை 1200 மில்லியன் ரூபாவாகும். அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு 2017 ஆம் ஆண்டிற்காக வேண்டி ஒதுக்கப்பட்டுள்ள நிதித்தொகை 4600 மில்லியன் ரூபாவாகும். அதில் 46 வீதமே அனர்த்த நிவாரணத்திற்கு ஒதுப்பட்டுள்ளது. அதாவது 2116 மில்லியன் ரூபா.

2016 இல் கேகாலை மாவட்டத்தில் பாரிய மண்சரிவினாலும் வெள்ளப்பெருக்கினாலும் அழிந்த வீடுகளை நிர்மாணிப்பதற்கு 1000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டு சாமசரகந்த மண்சரிவு மற்றும் ஏனைய அனர்த்தங்கள் காரணமாக வீடுகளை இழந்த கேகாலை மாவட்ட மக்களுக்கு அரசாங்கம் 5 மாதத்திற்குள் வாகன இறக்குமதிக்கு ஒதுக்கிய நிதியை விடவும் குறைந்ததொரு தொகையையே ஒதுக்கியிருப்பதாக சண்டே டைம்ஸ் பத்திரிகை ஊடகவியலாளர் சாந்தனீ கிரிந்தே சுட்டிக் காட்டுகிறார்.

சிறிசேன-விக்கிரமசிங்க ஆட்சி பீடத்தின் உண்மையான முக்கியத்துவம் இதுவென்றால் ராஜபக்ஷ ஆட்சிபீடத்திற்கும் இவர்களுக்கும் உள்ள வேறுபாடுகள் என்ன?

சாமசரகந்த சரியும் அவதானம் இருப்பதாக அப்பிரதேச வாழ் மக்களுக்கு அடிக்கடி பிரதேச அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்திருந்த போதிலும் பெரும்பாலானவர்கள் கவனயீனமாக செயற்பட்டாளர்கள் என அப்போது செய்திகள் வெளியாகின. அதன் பெறுபேறு அழிவாகும். குறிப்பாக உயிர்ச் சேதங்களை குறைத்துக் கொள்வதற்கான வழிகள் இல்லாமல் போனது.

சிறிசேன விக்ரமசிங்க ஆட்சிபீடமும் இதற்கொப்பான வகையிலேயே செயற்படுகிறது. மக்கள் மீது அதிக சுமைகளை சுமத்தி அமைச்சர்களுக்கு சொகுசு வாழ்க்கையை வழங்கி, தொடர்ந்தும் அரசாங்கத்தை முன்னகர்த்தி வந்தால் எதிர்வரும் தேர்தல்களில் தோழ்வி நிச்சயம் என்பது ஏன் இன்னும் இவர்களுக்கு விளங்குவதில்லை. அரசாங்கம் தொடர்பில் மக்கள் அதிருப்தி உக்கிரமடைந்து 2015ல் காணப்பட்ட மக்கள் ஆதரவும் இல்லாமல் போகும் போதே இவர்களுக்கு புத்தி தெளியும்.

வெள்ளப்பெருக்கையும் மண்சரிவையும் அதிகரிக்கச் செய்யும் மனிதச் செயற்பாடுகள் குறிப்பாக பெரியளவிலான பொருளாதார திட்டங்களை அனர்த்த நிலைமைகளின் போதே அரசாங்கம் நிறுத்துவதற்கு வாக்குறுதியளிக்கிறது. வெள்ளம் வடிந்ததன் பின்பு இவ்வாக்குறுதிகள் அனைத்தும் கிடப்பில் போடப்படுகிறது.

அடுத்த அனர்த்தம் நாட்டை சூழ்ந்ததன் பின்பே எல்லோருக்கும் அனர்த்த முகாமைத்துவம் நினைவுக்கு வருகின்றது. 2016 மற்றும் 2017 மே மாதங்களில் ஏற்பட்ட அனர்த்த நிலைமைகள் எதிர்கால காலநிலை ஒழுங்கின் துவக்கமாக இருக்கலாம். 2016-2017 ஆகிய வருடங்களில் நாம் எதிர்கொண்ட, எதிர்கொண்டிருக்கின்ற கால நிலை Bipolar Weather என்பதாக அறிமுகப்படுத்தப்படுகின்றது. இதன் பொருள் 'இரு துருவ கால நிலை' என்பதாகும். மிகவும் குறுகியதொரு காலப்பகுதியில் அதிக குளிர் நிலையிலிருந்து அதிக உஷ்ண நிலைக்கு மாறுதல் அல்லது அதிகூடிய வெப்ப நிலையிலிருந்து கடுமையான குளிர் நிலைக்கு மாறுதல் இதற்கு உதாரணமாகும்.

இந்து ச்முத்திரம் மிக வேகமாக வெப்பமடைவதன் காரணத்தினால் பருவ காலம் மாற்றமடைகிறது. இதனால் எமது வலயத்தில் இரு துருவ காலநிலை அழிவுகள் ஏற்பட்டுக்கொண்டிருப்பதாக வளிமண்டலவியல் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். இதன் பெறுபேறாக பல மாதங்கள் பூராக நிலவும் கடும் வரட்சி சில நாட்களுக்குள் மட்டுப்படும் கடும் ம்ழையை ஏற்படுத்துகிறது. 2016 இலும் 2017 இலும் நாம் இவ்வாறான ஆபத்துமிக்க காலநிலையையே எதிர்கொண்டு வருகிறோம். இந்நிலைமை எதிர்வரும் காலத்திலும் நீடிப்பதற்கான சாத்தியம் இருப்பதால் அவ் அவதானத்தை புரிந்துகொண்டு அதற்கு முகம்கொடுக்க தயாராவது சிறந்ததொரு தூரநோக்குள்ள ஆட்சி பீடத்தின் பொறுப்பாக உள்ளது.

இலங்கையின் நிலக்கீழ் நீர்மட்டம் பல்வேறு மனிதச் செயற்பாடுகளின் காரணமாக குறைந்திருப்பது ஒன்றும் இரகசியமல்ல. கம்பஹா மாவட்டத்தில் ஏற்பட்ட கடுமையான நீர்ப்பற்றாக்குறைக்கு காரணம் பெரியளவிலான காடுகள் அழிக்கப்பட்டு கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படுவதும் கட்டுநாயக்க கொழும்பு அதிவேக வீதியும் என சுட்டிக் காட்டப்படுகிறது.

சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனத்தின் இலங்கை அபிவிருத்தி திட்டத்தின் பிரதானி ஹேரத் மன்த்ரீ திலக அவர்கள் 2017 பெப்ரவரி மாதம் இணையதளமொன்றில் சிறிய காலத்தில் பொழிகின்ற பெரு மழை காரணமாக நிலக்கீழ் நீர்மட்டத்தில் அதிகரிப்பு ஏற்படுவதில்லை என தெரிவித்துள்ளார்.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavahaham.org

# தீவிரவாத மோதல்களின் நிழல்

• திஸரணி குணசேகர

சவூதி அரேபியா தலைமையிலான நாடுகளுக்கும் கத்தாருக்குமிடையிலான பிரச்சினை எங்களுக்கு முக்கியமாவது இரண்டு மில்லியன் இலங்கையர்கள் அங்கு வேலை செய்வதனால் அன்றி இது எதிர்கால சுன்னி ஷீஆ மோதலாக ஆரம்பிப்பதற்கான சாத்தியம் இருப்பதனால் தான். அப்படி நடக்குமாக இருந்தால் மத்திய கிழக்கையும் தெற்காசியாவையும் மையப்படுத்தியே இது நிகழ்வதால் அதனால் முழு உலகுமே பாதிக்கப்படப் போகிறது.

பௌத்த மதம் தேரவாதம், மஹாயான என்றும், கிறிஸ்தவம் கத்தோலிக்கம், பழமைவாதிகள் என்றும் பிரிந்திருப்பது போல இஸ்லாமும் ஷீஆ சுன்னி என்ற இரு பிரிவுகளாகப் பிரிந்துள்ளது. சவூதி மத்திய கிழக்கின் பிரதான சுன்னி நாடாகவும், ஈரான் உலகின் பிரதான ஷீஆ நாடாகும் உள்ளன.

இந்த இரு நாடுகளுக்குமிடையில் பல தசாப்தங்களாக நடந்த மத, அரசியல் போட்டிகள் தற்போது உக்கிர நிலையை அண்மித்துள்ளது. கத்தார் பிரச்சினை இந்த மோசமான எதிர்காலத்துக்கு கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளது.

சவூதியைப் போலவே கத்தாரும் ஒரு சுன்னி நாடு. இருந்தபோதிலும் ஷீஆ ஈரானுடன் கத்தார் நல்லுறவைப் பேணிவருகிறது. எரிவாயு உற்பத்தியில் உலகின் முன்னணி நாடாக கத்தார் திகழ்கிறது. வளைகுடாவில் உள்ள பாரிய ஸவுத் பரிஸ்/நோர்த் டோம் பீல்ட் எரிவாயு வளம் கத்தாருக்கும் ஈரானுக்கும் இடையில் ஒத்துழைப்புடன் பயன்படுத்தப்படுகிறது. இஸ்லாமிய உலகின் தலைமைத்துவத்துக்காக ஈரானுடன் போட்டியிடும் சவூதி, எப்போதும் இந்த ஈரான் கத்தார் உறவை ஓரக்கண்ணாலேயே பார்த்து வந்தது.

கட்டாருடன் சவூதிக்குள்ள மற்றொரு பிரச்சினைதான் கத்தார் அரச குடும்பங்களில் சவூதி அரச குடும்பத்தினை விட வஹாபிய தீவிரவாதிகள் இருக்கவில்லை. அவர்களில் பிற்போக்குவாதிகளும் அரசியல் சாணக்கியமற்றவர்களும் இருக்கவில்லை. கத்தாரின் சட்டதிட்டங்கள் சவூதியை விட நெகிழ்வாகவே காணப்பட்டது. மத்திய கிழக்கில் ஓரளவு ஜனநாயகத்திற்காக குரல் கொடுக்கும் அல்ஜஸீரா அலை வரிசையின் உரிமை கத்தார் அரச குடும்பத்துக்குரியது. ஆதலால் சவூதி அரேபிய ஆட்சியாளர்கள் கத்தாரை உண்மையான நண்பராகப் பார்க்கவில்லை.

கத்தாருக்கு எதிரான பனிப்போரொன்றுக்காக சவூதி அரேபியா எடுத்த தீர்மானத்தில் புதிய அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் விவேகமற்ற, சிறுபிள்ளைத்தனமான அரசியல், தீர்க்கமான தாக்கத்தை செலுத்தியதாக அனேகமான ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ட்ரம்ப் சவூதிக்குச் சென்றபோது வேறு எந்த நாட்டிலும் கிடைக்காத வரவேற்பு அவருக்குக் கிடைத்தது. விமர்சையான வரவேற்புத் தந்திரத்தின் மூலம் தன்னுடைய கருத்துக்கு வளைந்து கொடுக்க சவூதி ஆட்சியாளர்கள் முயற்சித்ததாகவே தெரிகிறது. ட்ரம்ப் அனுப்பிய ட்விட்டர் செய்திகளில் கத்தார் அரசுக்கு எதிரான பனிப்போரினை மேற்கொள்வது தொடர்பில் இப்பயணத்தின் போது பேசப்பட்டதாகவும், அதற்கு ட்ரம்பின் அங்கீகாரம் கிடைத்ததாகவும் குறிப்பிடப்பட் டுள்ளது.

சவூதி, ஈரானுக்கிடையிலான பதிலி யுத்தம் (Proxy war) தற்பொழுது மத்திய கிழக்கில் சூடுபிடித்து வருகிறது. அது யெமனிலிருந்து ஆரம்பிக்கிறது. யெமனின் ஹோனி கிளர்ச்சியாளர்களுக்கு ஈரான் உரமூட்டுகின்றது. சவூதி உட்பட வளைகுடாநாடுகள் அதிகமானவை ஹோனி கிளர்ச்சியாளர்களை தாக்குகின்றார்கள். இந்த யுத்தத்தை பனிப்போர் காலத்தில் அதிகமான ஆபிரிக்க நாடுகளில் அமெரிக்க ஆதரவாளர்களுக்கும் சோவியத் ஆதரவாளர்களுக்கும் இடையிலான ஆயுதப் போராட்டத்துக்கு நிகராக ஒப்பிட முடியும்.

கடந்த வாரத்தில் ஈரான் பாராளுமன்றத்துக்கும் ஆயத்துல்லா கொமைனியின் மையவாடிக்கும் நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலை எதிர்கால சுன்னி ஷீயா யுத்தமொன்றுக்கு கட்டியம் கூறுவதாக கருதமுடியும். மத்திய கிழக்கின் பாரிய யுத்தத்தினை அமெரிக்கா என்ற வல்லரசு நாட்டினால் மட்டுமே தடுத்து நிறுத்த முடியுமாக உள்ளது.

அவ்வாறான அழிவொன்றை தடுப்பதில் எம்மைப் போன்ற சிறிய நாடொன்று செய்வதற்கு எதுவுமில்லை. எம்மால் செய்ய முடியுமானது அவ்வாறான அழவின்போது எமக்கு ஏற்படும் சேதத்தினைக் குறைத்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுப்பது மாத்திரமே.

### இன்னுமொரு அளுத்கம உருவாகுமா?

இலங்கை ஒருபோதும் தமிழ் நாட்டு அரசியலின் பிரதான பங்காக இருந்ததில்லை. இலங்கையின் அரசியல் நிலமை தமிழ்நாட்டின் அரசியல் விடயமாக மாறியது இந்நாட்டின் தமிழ் விரோத வன்முறைகள் தொடங்கியதில் இருந்தே. 83 கறுப்பு ஜூலையின் பின்னர் அது உச்ச நிலையை அடைந்தது. அதன் பின்னர் தமிழ் நாட்டின் பிராந்தியங்கள், மற்றும் மத்திய அரசின் அடிப்படைத் தீர்மானிக்கும் விடயமாக இலங்கையே காணப்பட்டது. அந்நிலைமை உருவாவதற்கு மொழியும் இனமுமே அதிக பங்களிப்பு வழங்கியது.

1956 களில் சிங்களம் மட்டும் அரசியல் போராட்டத்தினூடாக இல்லாத மொழிப் பிரச்சினையை உருவாக்காதிருந்தால், பண்டாரநாயக்க செல்வநாயகம் ஒப்பந்தம் அல்லது டட்லி-செல்வா ஒப்பந்தம் செயற்படுத்தப்பட்டிருந்தால், இனப் பற்றின் காரணமாக நிராயுத தமிழர்களை ஓட ஓடத் தாக்காதிருந்தால், இலங்கைப் பிரச்சினை தமிழ் நாட்டுக்கும் தமிழ் நாட்டுப் பிரச்சினை இலங்கைக்கும் வந்திருக்காது.

இரவில் விழுந்த குழியில் பகலும் விழக் கூடாது என்று முன்னோர்கள் எச்சரித்தது சும்மா வல்ல. என்றாலும் இறுதியில் இரவில் விழுந்த குழியினைவிட பாரிய குழியில் பட்டப்பகலில் பாய்வதற்கு இந்நாட்களில் முயற்சிகள் நடக்கின்றன. முப்பது வருட வட கிழக்கு யுத்தம் நிறைவுற்று நான்கு வருடங்கள் கழிவதற்கு முன்னரே பௌத்த இஸ்லாம் மோதலொன்றை உருவாக்குவதற்கு ராஜபக்ஷ அரசும் அவ்வரசுடன் சமதொடர்புடன் செயற்பட்ட பொதுபலசேனா போன்ற கடும்போக்கு அமைப்புக்களும் நடவடிக்கைகளை மேற்கொண்டன. இந்தப் பித்தலாட்டமான முயற்சியின் சந்தர்ப்பவாத அரசியல் போட்டியின் விளைவாக அமைந்தது தான் 2013 அளுத்கம முஸ்லிம் விரோத தாக்குதல்கள்.

மக்கள் உழலும் உண்மையான சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைகளை மறக்கடிப்பதற்காக போலியான பிரச்சினைகளையும் போலியான எதிரிகளையும் கற்பிதம் செய்வது உலகின் எல்லா நாடுகளிலும் ஆதிகாலம் தொட்டே வருகின்ற பழக்கம். சுன்னி-ஷீயா யுத்தமொன்றை உருவாக்குவதற்கு சவூதி அரசர்கள் காட்டும் ஆர்வத்துக்கு அந்த நாடு எதிர்நோக்குகின்ற பொருளாதார வீழ்ச்சி ஒரு காரணமாக இருக்கலாம்.

சவூதி அரசு மக்களுக்குப் பலவிதமான பொருளாதார நலன்களை முன்வைத்தே மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றது. எண்ணெய் வளத்தின் காரணமாக கடந்த காலங்களில் இது சாத்தியமாகியது. ஆனால் இன்று சவூதி பலமான பொருளாதார வீழ்ச்சிக்கு உட்பட்டுள்ளது. உலக சந்தையில் எண்ணெய்யின் விலைச் சரிவு இதற்கு முக்கிய காரணமாகும். உள்நாட்டு எண்ணைய்ப் பாவனை அதிகரித்தமை இன்னொரு காரணியாகும். 2032 ஆகும் போது சவூதி எண்ணெய் ஏற்றுமதி நாடு என்ற நிலையிலிருந்து எண்ணெய் இறக்குமதி செய்யும் நாடாக மாறும் என Brookings Institute 2015 இல் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருந்தது.

சவூதி எதிர்நோக்கும் நிதிப்பிரச்சினைக்கு, குறிப்பாக துண்டு விழும் பட்ஜட்டுக்கான தீர்வாக அரச செலவினங்களை குறைக்கின்ற பொருளாதார சீர்திருத்தமொன்று நடைபெற வேண்டுமென நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். நிதிச் சந்தையில் பெறப்பட்ட கடன்களினாலேயே 2016 இல் சவூதியின் நிதிப்பிரச்சினை வெடிக்காமல் தடுக்கப்பட்டது. வரவு செலவுப் பற்றாக்குறையை குறைப்பதற்கு மானியங்களையும் சலுகைகளையும் குறைப்பதற்கு அரசு எடுத்த தீர்மானம் மக்களின் அதிருப்திக்கு அஞ்சியே நடைமுறைப்படுத்தப் படாமல் இருக்கிறது. இளைஞர்களின் வேலை வாய்ப்பின்மை பிரச்சினையும் கூர்மையடைந்து வரும் மற்றுமொரு பிரச்சினையாக உள்ளது.

சுன்னி-ஷீஆ ஆயுத மோதலொன்றை உருவாக்குவதை நாட்டில் தாம் எதிர்நோக்குகின்ற பொருளாதார வீழ்ச்சியை மறைப்பதற்கான கேடயமாக சவூதி ஆட்சியாளர்கள் கருதி இருக்கலாம்.

2013-14 காலத்தில் ராஜபக்ஷாக்களும் முஸ்லிம் அச்சுறுத்தல் ஒன்றை உருவாக்கி சிங்கள பௌத்த மக்களிடமிருந்து உண்மையான பொருளாதாரப் பிரச்சினையை மறைக்கவே முயற்சித்தனர். ராஜபக்ஷக்களின் தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்காக வேண்டி பொதுபலசேனா பூதமாக பெருப்பிக்கப்பட்டது.

2015 ஜனாதிபதித் தேர்தலில் தோற்றம் பெற்ற அரசியல் மாற்றத்தில் நடந்த முக்கியமான மாற்றம், இந்த முஸ்லிம் விரோத பித்தலாட்டம் அரசியல் அரங்கிலிருந்து துடைத்தெறியப்பட்டது தான்.



> இறுதியாக ஒரு கேள்வியை தொடுக்க வேண்டியுள்ளது. அரசாங்கத் தின் இயலாமைக்கும் மௌனத்திற்கு மான காரணம் என்ன? அரசாங்கம் சிங்கள பௌத்த தீவிரவாதிகளுக்கு பயப் படுகின்றதா? இல்லாவிட்டால் அரசாங்கத்திலேயே உள்ள ஒரு சிலர் அரசங்கத்திற்கு அவப்பெயரை கொடுத்து ராஜபக்ஷாக்களுக்கு வழியமைக்கும் நோக்கில் மத வன்முறையை ஏற்படுத்துபவர்களுக்கு பாதுகாப்பையும் ஒத்துழைப்பையும் வழங்குகிறார்களா?

ராஜபக்ஷாக்கள் அதிகாரத்திலிருந்து நீக்கப்பட்டதும் பொதுபலசேனாவின் அசுர பலம் ஒழிந்தது. ஞான சாரவின் சட்டத்தை கையிலெடுக்கும் அதிகாரம் முடிவுக்கு வந்தது.

இரண்டரை வருடங்களாக நிலவி வந்த அமைதி நிலை தற்பொழுது மாறியுள்ளது. அவரைக் கைது செய்வதற்கு பொலிசாரால் முடியாமல் போயிருக்கிறது. அதுமட்டுமன்றி முஸ்லிம்களுக்குச் சொந்தமான

வர்த்தக நிலையங்கள் மீதான தாக்குதல் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மஹியங்கனை போன்ற தூரப் பிரதேசங்களில் மாத்திரமல்லாமல் கொழும்பு மற்றும் அதனை அண்டிய விஜேராம போன்ற பிரதேசங்களிலும் இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவ்வாறான சில தாக்குதல்களுக்கு பொறுப்புச் சொல்ல வேண்டும் என சந்தேகிக்கப்படும் நபரொருவர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட போதிலும் தாக்குதல்கள் இன்னும் ஓயவில்லை.

இச்சம்பவங்கள் தொடர்பில் நேரடியாக கருத்துத் தெரிவிப்பதற்கோ அல்லது உத்தரவு பிறப்பிப்பதற்கோ ஜனாதிபதியும் பிரதமரும் இதுவரையில் முன்வரவில்லை என்பது மிகவும் பாரதூரமான விடயமாக உள்ளது. இம்மௌன நிலைப்பாட்டினால் பௌத்தத்தின் பெயரால் பௌத்த மதத்தை அழிக்கும் காடையர்கள் இன்னும் உற்சாகமடைந்து நாட்டின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் செயல்கள் அதிகரிப்பதுடன் தற்போதைய ஆட்சிபீடத்தை அதிகாரத்திற்கு கொண்டு வருவதற்கு பேருதவி புரிந்த சமுதாயக் குழுக்கள் அரசை விட்டும் தூர விலகிச் செல்லும் நிலையே ஏற்படுகிறது.

நாட்டில் சட்டத்தை அமுல்படுத்துவதின் மூலம் இந்நிலையைக் கட்டுப்படுத்துவதற்கும் அதற்கு பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களை கைதுசெய்து சட்டத்தை நிலைநாட்டுவதற்கும் ஆட்சியாளர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் வன்முறைகள் இன்னும் புரையோடி, இன்னுமொரு அளுத்கமையை உருவாக்கி விடும். அரச தலைவர்கள் கண்ணை மூடிக் கொண்டிருப்பது அவ்வாறானதொரு அழிவு இடம்பெறும் வரையிலா? தற்போது இடம்பெற்றுக்கொண்டிருக்கும் வன்முறைகள் நாட்டினதும் மக்களது சிறந்த எதிர்காலத்திற்கும் மாத்திரமல்லாமல் தமது அடுத்த கட்ட அரசியல் நகர்வுகளுக்கும் கூட ஆபத்தாக அமைந்துவிடும் என்பதை புரிந்துகொள்ளாமல் இருக்கும் அளவுக்கு ஆட்சியாளர்களின் புத்தி பேதலித்துள்ளதா?

### பயங்கரவாதிகளை அழைக்கும் செயல்

மத்தியகிழக்கு வலயத்தை தமது கட்டளைக்கிணங்க அடியபணிய வைத்து கிலாபத்தொன்றை (caliphate) உருவாக்கும் ஐஸிஸ் இன் கனவு தற்பொழுது சிதைந்துகொண்டுள்ளது. ஐஸிஸ் அமைப்பு தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த பெரும்பாலான பிரதேசங்கள் அவர்களை விட்டும் கைநழுவிப் போயுள்ளது. ஐஸிஸ் இன் கட்டுப்பாட்டிலுள்ள ஈராக்கின் மௌசூல் நகரத்தை மீட்கும் போராட்டத்திலும் அவர்கள் தோல்வியடைவார்கள் என்று அரசியல் விமர்சகர் கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

உத்தியோகபூர்வமற்ற தேசமாகவும் இராணுவமொன்றாகவும் காணப்படும் ஐஸிஸ் இன் நிலவுகை முற்றுப்பெற்றதன் பின்னர் பலிவாங்கும் எண்ணத்துடன் கூடிய தற்கொலை தீவிரவாதிகளே எஞ்சுவார்கள். பேராசிரியர் சுசரித கம்லத் 'சிது சிதுமினி' என்னும் கட்டுரைத் தொடரில் அடிப்படைவாதம் என்பது ''அது வேறொன்றுமில்லை பைத்தியம். நல்லெண்ணம் சிதைந்து போவது. மத நம்பிக்கையினால் இப்பைத்தியம் ஏற்படுகிறது. இல்லாவிட்டால் வேறு நம்பிக்கையினால் ஏற்படுகிறது. இப்பைத்தியம் பிடித்தால் எதிர்கருத்துக்களை அழிப்பதற்கும் அக்கருத்துடையவர்களை கொலைசெய்வதற்கும் எண்ணம் பிறக்கும்'' என தெரிவித்துள்ளார்.

ஐஸிஸ் அமைப்பு தோழ்வியுற்றதன் பின்பு இவ்வாறான பித்துப்பிடித்தவர்களே மீதமாவார்கள். அவர்களுக்கு இல்லாமல் போவதற்கும் ஒன்றும் இருக்காது. அவர்களுள் பெரும்பாலானவர்கள் உயிராபத்தை விளைவிக்கும் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு உலகின் வெவ்வேறு நாடுகளுக்கு செல்வார்கள்.

ஐஸிஸ் அமைப்பு பலமாக காணப்பட்ட கடந்த இரண்டு வருட காலத்திற்குள் இலங்கைக்கு பயங்கரவாத அச்சுறுத்தலுக்கு முகங்கொடுக்க நேரிடாமைக்குரிய காரணம் இந்நாட்டில் மதங்களுக்கிடையில் ஒற்றுமை நிலவியமையாகும். ஏனைய பயங்கரவாதிகளைப் போன்று ஐஸிஸ் பயங்கரவாதிகளும் குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பவர்கள்.

ராஜபக்ஷ காலப்பகுதியில் பொதுபல சேனாவினால் குழப்பிவிடப்பட்ட அரசியல் நீரோட்டம் 2015 சிறிசேன விக்கிரமசிங்க ஆட்சிபீடம் அதிகாரத்திற்கு வந்ததினைத் தொடர்ந்து சாதாரண நிலைமைக்கு மாறியது. அதனால் இலங்கை ஐஸிஸின் அவதானத்திற்கு உட்படவில்லை. இலங்கையின் ஒரு சிலர் ஐஸிஸ் அமைப்பில் இணைவதற்கு சிரியா சென்ற போதிலும் இலங்கை ஐஸிஸ் ரேடார் கருவியில் அகப்படவோ ஐஸிஸ் சிந்தனை இந்நாட்டில் பிரபலமாகவோ இல்லை.

இந்நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தாக்குதல்களை நிறுத்துவதற்கு ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுக்காவிட்டால் இந்நிலைமை மாற்றமடையலாம். இலங்கைக்குள் முஸ்லிம்கள் பாதுகாப்பின்றி இருப்பார்களென்றால் தமது பயங்கரவாத நடவடிக்கைகளுக்கான இலக்கினை தேடிக்கொண்டிருக்கும் ஐஸிஸ் உறுப்பினர்களுக்கு இலங்கை விரும்புவதற்கான வாய்ப்பு அதிகமாகக் காணப்படும்.

83 ஜூலை மாதமாகும் போது புலிகள் அமைப்பு உள்ளிட்ட தமிழ் ஆயுதக் குழுக்கள் மிகவும் பலவீனமானதொரு நிலையில் காணப்பட்டன. அவர்களுக்கு நிதி, ஆயுத உதவிகளோ மக்களின் ஒத்துழைப்புக்களோ கிடைக்கவில்லை. அத்துடன் இந்தியாவும் சர்வதேச நாடுகளும் அவ்வமைப்பை அங்கீகரித்து இருக்கவுமில்லை. எல்.ரீ.ரீ.ஈ முன்னெடுத்த Four Four Bravo தாக்குதலின் பின்னர் கறுப்பு ஜூலை உருப்பெற்றதனால் இந்நிலைமை முற்றுமுழுதாக மாற்றத்திற்குள்ளானது. இதனைத் தொடர்ந்து புலிகள் அமைப்பு உள்ளிட்ட ஏனைய குழுக்களுக்கு நிதி, ஆயுத, அங்கத்தவர் மற்றும் வெளிநாட்டு உதவிகள் கிடைக்க ஆரம்பித்தது. (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்

## ஜனநாயக வழிமுறையில் ஆர்வம் காட்டும் பிரித்தானியா

''நீங்கள் ஏழையாக இருக்கலாம். ஆனால் நீங்கள் எப்பொழுதும் ஏழையாக இருக்க வேண்டியதில்லை.'' Jeremy corbyn

அண்மைய வரலாற்றில் பிரித்தானிய பிரதமர் பதவிக்கு போட்டியிட்ட மூத்த உறுப்பினராக ஜெரமி கோபின் காணப்படுகிறார். தேர்தலில் 70 வீதமான இளைஞர்கள் இவருக்கு வாக்களித்துள்ளார்கள். பொதுவாக பிரித்தானிய தேர்தலில் இவ்வளவு அதிகமான இளைஞர்கள் வாக்குச் சாவடிக்குச் செல்வதில்லை. பிரித்தானியாவின் எதிர்கால சந்ததியினரே இவர்கள். பிரித்தானியாவின் சிறந்ததொரு எதிர்காலப் பயணத்திற்கான அடையாளமாக இளைஞர்களது செயல் நோக்கப்படுகின்றது.

பிரித்தானியப் பாரம்பரியப் பத்திரிகைகள் கோபினுக்கு எதிரான நிலைப்பாட்டில் இருந்தன. 2015ல் அவர் தலைமைத்துவத்தை ஏற்றது முதல் அப்பத்திரிகைகள் இவரை விமர்சிக்க ஆரம்பித்தன. ஆனால் அந்நாட்டின் இளைஞர்கள் சமூக வலைதளங்களிற்கூடாக கோபினின் உரையாடல்களை நகர்த்தி வந்தார்கள். மாணவர்களின் உயர்கல்விக்கு நிதி அறவிடுவதற்கு எதிராக இவர் குரல் எழுப்பினார். சுகாதார வசதிகள் குறித்துப் பேசினார். பிரித்தானியாவுக்கான நலன்புரி திட்டங்கள் குறித்தும் பேசினார்.

கோபின் போருக்கு எதிரானவர். ஆப்கான், ஈராக் ஆக்கிரமிப்பை எதிர்த்து கடுமையாக பேசியுள்ளார். ஆப்கான், ஈராக் ஆக்கிரமிப்பு பிரித்தானியாவிற்குள் பயங்கரவாதம் உருவாவதற்கு தூண்டுகோளாக அமையும் என குறிப்பிட்டார். இவர் போரினால் இடம்பெயர்ந்து வரும் மக்களுக்கு தயவு காட்டும் ஒருவர். கோபின் பெரியளவில் ஆளுமை படைத்த ஒருவராக காணப்படாவிடினும் அவர் முன்வைத்த கருத்துக்களும் சிந்தனைகளும் இளைஞர்களை வெகுவாக கவர்ந்தன.

தேர்தல் ஆரம்பிப்பதற்கு முன்னர் லேபர் கட்சிக்கும் கன்சர்வர்டிவ் கட்சிக்கும் இடையில் 17 வீதமான வித்தியாச இடைவெளி காணப்பட்டது. ஜெரமி கோபின் ஒரு பலவீனமான தலைவர் என தெரேசா மே சுட்டிக்காட்டியிருந்தார். தேர்தல் நடைபெறுவதற்கு இன்னும் இரண்டு மூன்று வருடங்கள் காணப்பட்ட நிலையில் தற்போது கன்சர்வேடிவ் கட்சிக்குள் பலவீனமானதொரு தலைவராக இருந்து வரும் தனக்கு (தெரேசா) பெரியதொரு வாக்கு வித்தியாசத்தில் வெற்றியீட்டலாம் என்ற எண்ணத்தில் தேர்தலை நடாத்தியிருந்தார்.

ஆனால் இறுதியில் நடந்தது வேறொன்று. லேபர் கட்சி 41.36 வீதமான வாக்குகளை பெற்று 262 ஆசனங்களையும் கன்சர்வேடிவ் கட்சி 43.80 வீதமான வாக்குகளை பெற்று 317 ஆசனங்களையும் வென்றது. 2.44 வீத அளவிலான வாக்குகளை மாத்திரமே தெரேசா மே அதிகமாக பெற்றுள்ளார். இது பாரியதொரு வீழ்ச்சியாகவே நோக்கப்படுகின்றது.

தேர்தலின் போது தெரேசா மே ''இந்தத் தேர்தலில் நான் தோழ்வியுற்றால் பிரித்தானியாவின் பிரதமராக கோபின் வருவார்'' என மக்களை அச்சமூட்டினார். அதாவது கோபின் போன்ற ஒருவர் தான் பிரதமராக வருவார் என கேலியாக கூறினார். இறுதியில் கன்சர்வேர்டிவ் கட்சி பாரிய பின்னடைவை சந்தித்தது. மிதக்கும் பாராளுமன்றமே உருப்பெற்றது. அயர்லாந்தின் சிறியதொரு கட்சியுடன் இனைந்தே அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்ள முடிந்தது.

கன்சர்வேர்டிவ் கட்சி அமைச்சகர்கள் இறுதியில் மன்னிப்பு கோரினார்கள். தெரேசாவின் எதிர்காலமும் பிரச்சினைக்குரியதாக உள்ளது. சிலவேளை கட்சிக்குள்ளாளேயே அவருக்கு எதிராக புரட்சி வெடிக்கும் சாத்தியமுள்ளது. கோபினை இழிவுபடுத்திய தெரேசாவினை பதவி விலகுமாறு கோரி வருகிறார்கள். பல வருடங்களாக தோழ்வியை சந்தித்து வந்த லேபர் கட்சிக்கு கன்சர்வேடிவ் கட்சியை விளிம்பு நிலைக்கு கொண்டு வர முடிந்தது. கோபினின் செயற்பாடுகளே இதற்கு காரணம். கோபினுக்கு எதிராக கட்சிக்குள் பாரிய எதிர்ப்பு நிலவி வந்தது.

யுத்தத்து ஆதரவாக செயற்பட்ட டொனி பிளேயர் போன்ற வலதுசாரிகள் கோபினை பலவீனமானதொரு தலைவராக நோக்கினார்கள். ஆனால் கோபினால் 7 வார காலத்திற்குள் கட்சியை பாரிய மாற்றத்திற்குள்ளாக்க முடிந்தது. இது பிரித்தானிய எதிர்காலத்திற்கு மாத்திரமல்ல, ஐரோப்பிய எதிர்காலம் குறித்தும் முக்கள் மத்தியில் நேர்மறையான பார்வையை தோற்றுவித்துள்ளது.

ஒரு புறத்தில் ஜெஸ்டின் புருடொ போன்ற தலைவர்கள் கனடாவினை ஜனநாயக பாதையில் செலுத்தி வருகின்ற போது மறுபுறத்தில் பிரித்தானியாவும் அப்பாதையில் வீழ்ந்திருப்பது மகிழ்ச்சியான விடயமாக உள்ளது. லேபர் கட்சி அப்போது ஆட்சியில் இருந்ததனாலேயே இலங்கைக்கு விரைவாக சுதந்திரத்தை பெற்றுக்கொள்ள முடிந்தது.

பிரித்தானியா சிறந்ததொரு நாடு. அகதிகளை இறக்கத்துடன் அணுகும் நாடு. ஏழ்மைக்கு எதிரான நாடு. பிரித்தானியா உலகில் மனித உரிமைகளை காக்கும் நாடாக மிளிரும் என்பதற்கு கன்சர்வேடிவ் கட்சியின் பின்னடைவும் கோபின் போன்ற தலைவர்களின் எழுச்சியும் சான்று பகர்கின்றன.

# அரச அதிகாரத்தைக் கைப்பற்றுவதனால் மக்களுக்கு விடுதலை பெற்றுத் தர முடியாது

தற்போது இலங்கை ஒவ்வொரு இரண்டொரு மாதங்களிலும் அனர்த்தங்களுக்கு உள்ளாகும் நாடாக மாறியிருப்பதாகவே தோன்றுகிறது. கடந்த வருட வெள்ளப் பெருக்கு, மீதொட்டுமுல்ல குப்பை மேட்டுச் சரிவு, அரநாயக்க மண்சரிவு, சாலாவ ஆயுதக் களஞ்சிய வெடிப்பு எனத் தொடர்ந்து தற்போது மீண்டும் வெள்ளப் பெருக்கினாலும் மண்சரிவினாலும் நாடு பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த அனர்த்தங்களின் போதெல்லாம் அரசியல், ஊடகக் கண்காட்சிகள் இந்தச் சம்பவங்களை வைத்து நடத்தப்பட்டதேயன்றி, பாதிக்கப்பட்ட மக்களுக்கான தீர்வுகள் எதுவும் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது இலங்கைக் கேயுரிய பொது இலட்சணமாக மாறியுள்ளது. இதனூடாக தொலைநோக்குடன் செயற்படத் தெரியாத நாடாக இலங்கை தன்னை அடையாளப்படுத்துகிறது.

அண்மைய வெள்ளப் பெருக்குக்கு அதிகரித்த மழை வீழ்ச்சி காரணமாக இருந்தாலும் இந்தளவு பாதிப்புக்கள் ஏற்படுவதற்கு நிலத்தின் பாவனை முறைகளும் கட்டட நிர்மாணங்களுக்கென தேசியக் கொள்கையொன்று இல்லாதிருப்பதும் முக்கிய காரணங்களாகும். நாட்டிலே காணிகள் இஷ்டம் போல கூறுபோட்டு விற்கப்படுகின்றன. அதிகார வர்க்கத்தினர் ஆறுகள், குளங்களை மறித்து அமைத்துள்ள உண்டிச் சாலைகளும் ஓய்வகங்களும் தற்போது சகஜமான காட்சிகளாகி விட்டன.

கொழும்புத் துறைமுக செயற்கைத் தீவு நிர்மாணத்துக்கெனப் பெயர்க்கப்படும் மண்மேடுகள் மண்சரிவுக்கான சாத்தியங்களை அதிகரித்து வருகின்றன. நாட்டின் இருப்பையே அடகுவைத்து இந்த நிர்மாணப் பணி தொடர்கிறது. இதனால் எதிர்காலத்தை மறந்து அன்றாட விடயங்களில் மட்டுமே கவனம் செலுத்துகின்ற மடமைத் தேசமாகத்தான் இலங்கையைக் கருத வேண்டியிருக்கிறது.

தெற்கின் வெள்ளப் பெருக்குக்கு மத்தியில் மறுமலர்ச்சி இயக்கம் கிழக்கில் தனது கிளைகளை ஆரம்பிக்கும் பணியில் மூழ்கியிருந்தது. தெஹிஅத்தகண்டிய, அம்பாறை மத்திய முகாம், அம்பாறை நகரம், வெல்லவாய ஆகிய இடங்களிலும் திருக்கோவில் தமிழ்ப் பிரதேசத்திலும் கிளைகள் ஆரம்பிக்கப்பட்டன. அதற்கு முந்திய வாரம் நாஉல, கெகிராவ, அநுராதபுரம், ராஜாங்கனய பிரதேசங்களிலும், அதற்கும் முந்திய வாரம் குருநாகல், பொல்கஹவெல, குளியாபிட்டிய பிரதேசங்களிலும் கிளைகள் ஆரம்பிக்கப்பட்டன.

மறுமலர்ச்சியின் முதற்கட்டமான கிளைகள் அமைத்தலினைத் தொடர்ந்து மறுமலர்ச்சி இயக்கத்துடன் இணைகின்றவர்களின் தகவல் வங்கியொன்றை ஸ்தாபித்தல், இணையத்தளமொன்றை ஆரம்பித்தல் போன்றன திட்டமிடப்பட்டுள்ளன. கிளைகள் பலப்படுத்தப்பட்டு அதிலிருந்து தேசிய வேலைத்திட்டத்துக்கான செயற்குழு தீர்மானிக்கப்படவிருக்கிறது.

மறுமலர்ச்சி இயக்கத்துடன் இணைந்தவர்களை அறிவூட்டுவது இரண்டாம் கட்டமாக அமையும். போதுமான கிளைகளைக் கொண்ட மாவட்டங்களில் மாவட்டக் குழுவினை ஸ்தாபிப்பதுவும் உருவாகி வருகின்ற கிளைகளில் கருத்தரங்குகள் நடத்துவதும் மறுமலர்ச்சிச் சிந்தனையை சமூக ஊடகங்களுக்கு ஊடாகப் பரப்புவதும் இந்தக் கட்டத்தில் அடங்கும். இதனுடன் இயக்கத்தின் கட்டமைப்பு வேலைகளை நிறைவு செய்து கொண்டு மக்களுக்கு மத்தியில் செல்லும் வேலைத்திட்டம் ஆரம்பமாகும்.

முதலாவது கட்டத்தின் இணையத்தள உருவாக்க வேலையைத் தவிர கிளைகளை தோற்றுவித்தல், தகவல் வங்கி ஆகியன வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றன. மறுமலர்ச்சி சிந்தனை தொடர்பில் தொடர்ந்து எழுதுவதும் (ராவயவில்) கிளைகளை நிர்மாணிப்பதும் ஊடாக இந்தச் சிந்தனையை உரசிப் பார்ப்பதும் கிளைகளுக்கூடாக உறுதியான அரண் ஒன்றைக் கட்டியெழுப்பதுவுமே முதற்கட்டத்தின் நோக்கமாகவிருந்தது. இதற்கேற்றாற் போல கலந்துரையாடல்களில் மக்களும் பங்கெடுக்க முடியுமான வகையில் கைக்கடக்கமான இடங்களிலேயே கிளைகளின் அங்குரார்ப்பணங்கள் நடந்தேறின. இதனால் இயக்கத்துக்கு பலம் சேர்க்கக் கூடிய ஆட்களை இனம் கண்டு உள்வாங்க முடியுமாக இருந்தது.

விமர்சனங்களை எதிர்கொள்ளல், இந்த விமர்சனங்கள் வந்திருப்பவர்களிடையே ஏற்படுத்தும் தாக்கம், இந்த விமர்சனங்களுக்கு மக்களிடம் கிடைக்கும் அங்கீகாரம் என்பவற்றை அளவிடுவதே இந்த உரசல்களின் நோக்கமாகவிருந்தது. மறுமலர்ச்சிச் சிந்தனை மக்களின் சிந்திக்கும் பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்தாவிட்டால், அந்தச் சிந்தனைக்கு மக்களின் அங்கீகாரம் கிடைக்காவிட்டால் அதனை ஆரோக்கியமான சிந்தனையாகக் கருத [illegible] இருந்து மக்களை மாற்றி அவர்களை தர்க்க நீதி




யாகவும் நியாயமாகவும் புதிதாகவும் சிந்திக்கின்ற கலாச்சாரத்தைக் கொண்ட மக்களாக உருவாக்குவது தான் மறுமலர்ச்சியின் பிரதான இலக்கு.

### இந்த இலக்குக்கான சில அடையாளங்கள்

1. இலங்கை எதிர்கொண்டுள்ள பிரச்சினை தொடர்பில் ஏனைய இயக்கங்களை விட வித்தியாசமான பார்வை மறுமலர்ச்சி இயக்கத்துக்கு இருக்கிறது. தேசிய அரசாங்கம் ஒன்றை உருவாக்கியதன் பின்னர் அந்தத் தேசிய அரசாங்கத்தின் இருப்புக்கு முக்கிய காரணியான தேசத்தைக் கட்டியெழுப்புதல் என்ற விடயத்தில் விட்ட தவறுதான் பிரச்சினைகளுக்கான காரணம் என மறுமலர்ச்சி இயக்கம் கருதுகிறது.

வன்முறை வெடித்து இரத்த ஆறு ஓட்டப்பட்டது இதனால் தான். இதற்கு இனம்,குலம் என்பன முக்கிய காரணிகளாகின. இந்த வன்முறைக் காலங்களில் நிலவிய அநாகரிகச் சூழல் தனி மனிதர்கள், குடும்பங்கள், சமூகம், அரசு, அரச நிறுவனங்கள் அனைத்திலும் மோசமான பாதிப்பைச் செலுத்தின. இவை எல்லாம் சேர்ந்து அனைத்தையுமே சீரழித்துவிட்டன. உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த போதும் தேசத்தைக் கட்டியெழுப்புவதனூடாக அரசாங்கத்தை புனர்நிர்மாணம் செய்யும் பணி நடைபெறாததால் நாட்டின் பிரச்சினைக்கு தீர்வு கிட்டவில்லை.

2. இன, குல வேறுபாடுகள் இப்படியே இருக்கும் நிலையில் அரசியலமைப்பு மாற்றமொன்றினால் மாற்றமொன்றைக் கொண்டுவர முடியாது என்று மறுமலர்ச்சி இயக்கம் கருதுகிறது. பலமான சிந்தனைப் புரட்சியொன்றினூடாகவே இன, குல பேதங்களுக்கு இருக்கின்ற மக்கள் அங்கீகாரத்தை இல்லாமல் செய்ய வேண்டும். வேறுபாடுகள் இன்றி இலங்கை மக்கள் அனைவருக்கும் சமமான அந்தஸ்தும் உரிமையும் வழங்கப்பட வேண்டும். அப்பொழுது தான் இலங்கைத் தேசத்தவர்களை உருவாக்க முடியும். அத்தோடு இந்த இலங்கையர்களுக்குத் தேவையான வகையில் அரசையும் புனர்நிர்மாணம் செய்ய வேண்டும். இப்படி உருவாக்கப்பட்ட மக்களையும் அரசையும் நடத்திச் செல்வதற்குத்தான் புதிய அரசியலமைப்பொன்று தேவைப்படும்.

3. இலங்கையின் பிரச்சினைக்கான காரணங்களில் இனம் என்பதற்கப்பால் குலமும் பாதிப்புச் செலுத்துகிறது என மறுமலர்ச்சி இயக்கம் கருதுகிறது. இலங்கையில் இனவேறுபாட்டுக்கான உரையாடல்கள் நடப்பது போல குல வேறுபாடு தொடர்பான கலந்துரையாடல்கள் நடப்பதில்லை. பாதிக்கப்பட்ட குலத்தினர் விஜேவீரவினதும் பிரபாகரனினதும் இயக்கங்களில் சேர்ந்து அவற்றின் முதுகெலும்பாகத் தொழிற்பட்டாலும் இந்த இருவரும் கூட குலபேதத்துக்கு எதிராகச் செயற்படுவதற்கு அஞ்சினார்கள். பேராசிரியர் ஜயதேவ உயன்கொடவும் அவரது நூலொன்றில் இது தொடர்பாக குறிப்பிட்டுள்ளார்.

எஸ்.டப்.ஆர்.டி. பண்டாரநாயக்க சிங்கள இனவாதியாக இல்லாவிட்டாலும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக சிங்கள இனவாதிகளுடன் இணைந்து செயற்படும் கொள்கையைப் பின்பற்றினார். ஆரம்பத்தில் சிங்கள இனவாதத்துக்கு எதிராகச் செயற்பட்ட சமசமாஜ, கம்யூனிஸ்ட் இயக்கங்களும் பிற்பட்ட காலங்களில் சிங்கள மக்கள் மத்தியில் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக சிங்கள இனவாதத்துடன் இணைந்து செயலாற்றும் கொள்கையைப் பின்பற்றின. கடைசியில் ஜே.வி.பி. பின்பற்றிய கொள்கையும் இதற்கு மாற்றமானதல்ல.

இதற்கு மாற்றமாக சிங்கள இனவாதத்தினால் சிங்கள இனத்துக்கு மட்டுமன்றி நாட்டுக்கே ஏற்பட்டுள்ள விபரீதங்களை சிங்களக் கிராமங்களில் நடக்கின்ற சந்திப்புக்களின் போது மறுமலர்ச்சி இயக்கம் எடுத்துரைக்கின்றது. வெல்லவாயவில் நடைபெற்ற சந்திப்பில் உரையாற்றிய ஒருவர் தனது தாய் 108 வருடங்கள் வரை வாழ்ந்து 16 பிள்ளைகள் பெற்றாலும் தனது மனைவி 64 வருடங்களே வாழ்ந்து 04 பிள்ளைகளே மட்டுமே பெற்றதாகவும் சிங்கள இனம் இப்படியே அழிந்து வருகிறது எனவும் குறிப்பிட்ட போது நாங்கள் அதனை மறுத்துப் பேசினோம்.

பண்டைய காலங்களைப் போல பெண்களை பிள்ளை பெறும் இயந்திரமாக்க வேண்டாம் என்று நாங்கள் கூறியதை வந்திருந்த பெண்கள் ஆமோதிப்பது தெரிந்தது. கூடியிருந்தவர்கள் யாரும் நாங்கள் கூறியதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. சிங்களவர்களுடன் மட்டுமன்றி தமிழ், முஸ்லிம் சமூகங்களுடன் உறவாடும் போதும் அந்தச் சமூகங்களுடன் நாங்கள் இதே விடயத்தை முன்வைக்கிறோம். அவர்களுடைய அனுசரணையைப் பெறுவதற்காக தமிழ், முஸ்லிம் இனவாதத்துக்கு உரமூட்டும் வேலையை மறுமலர்ச்சி இயக்கம் செய்வதில்லை.

கடந்த மாதம் அநுராதபுரவில் நடந்த முஸ்லிம்களின் சந்திப்பொன்றில் கடும்போக்காளர் ஒருவரது கருத்துக்களுக்கு பதிலளிக்க வேண்டி வந்தது. சந்திப்பில் கலந்து கொண்டவர்கள் நடுநிலைக் கருத்தில் இருந்தார்களேயன்றி யாரும் அந்தக் கடும்போக்காளருக்கு ஆதரவாக செயற்படவில்லை. சந்திப்பு முடிவடைந்த பின்னர் என்னை வந்து சந்தித்த மூன்று முஸ்லிம் இளைஞர்களுள் ஒருவர், ஞானசார வகையைச் சேர்ந்தவர்கள் சிங்கள சமூகத்தில் மட்டுமன்றி முஸ்லிம் சமூகத்திலும் தாராளமாக இருக்கிறார்கள். இவர்களை கருத்து ரீதியாக வெல்லாமல் தேசத்தைக் கட்டியெழுப்ப முடியாது என்று கூறினார்.

அதேபோல திருக்கோவிலில் தமிழர்கள் கலந்து கொண்ட சந்திப்பு காத்திரமானதாக அமைந்திருந்தது. தமிழ் இனவாதத்தை விமர்சித்து ஆரம்பமாகிய எனது உரையை அங்கு வந்திருந்த படித்தவர்களில் இருவர் கேள்விக்குட்படுத்தினர். தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பில் சிங்களத் தலைவர்கள் தமிழர்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும், இதற்கெதிரான தமிழர்களின் செயற்பாட்டினால் ஏற்பட்ட இழப்புகளுக்கு தமிழர்கள் சிங்களவர்களிடமும் தமிழர்களிடமும் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும் ஒரு கட்டத்தில் நான் சொல்ல வேண்டியேற்பட்டது. ஆனாலும் இந்த வசனங்களால் அங்கிருந்தவர்கள் கோபமடையவில்லை.

அரச அதிகாரத்தை கைப்பற்றுவதனால் மக்களை விடுதலையடையச் செய்ய முடியுமென மறுமலர்ச்சி இயக்கம் கருதுவதில்லை. மக்களை விடுதலை பெறச் செய்வதாக ஆட்சிக்கு வந்தவர்களெல்லாம் மக்களை அடிமைப்படுத்துவதையே செய்தார்கள். ஆயுதங்கள் மூலம் ஆட்சிக்கு வந்தவர்கள் எல்லோருமே மக்களுக்கு விடுதலை பெற்றுத் தருவதற்குப் பதிலாக மக்களுக்கு சுமைகளை அதிகரிப்பவர்களாகவே வரலாறு நெடுகிலும் இருந்திருக்கிறார்கள்.

மறுமலர்ச்சி இயக்கம் சமூகத்தின் மீது நம்பிக்கை வைக்கிறது. சமூகத்தை பன்மைத்துவச் சிந்தனை கொண்ட நியாயமாகவும் தர்க்க ரீதியாகவும் சிந்தித்து ஒழுங்கமைப்புடன் செயற்படுகின்ற விதமாக மாற்ற முடியுமென்றிருந்தால், உயர்ந்த விழுமியங்கள் உட்பட அனைத்துமே அந்த நவீன சமூகத்துக்குப் பொருத்தமானதாக மாற்றமடையும் எனவும், அல்லது தேவையான மாற்றத்தை சமூகமே முன்னின்று ஏற்படுத்தும் எனவும் மறுமலர்ச்சி இயக்கம் தனக்கேயுரிய தனிப் பாணியாகக் கருதுகிறது.

இந்த வகையில் அரச அதிகாரத்தைக் கைப்பற்றுவதன்றி உயரிய சமூக அறிவு கொண்ட, ஜனநாயக செயற்பாடுகளைக் கொண்ட பண்பாடான நவீன சமுதாயமொன்றைக் கட்டியெழுப்புவதற்குத் தான் மறுமலர்ச்சி இயக்கம் முற்படுகின்றது. அரசியல் இயக்கமொன்றில் இணைபவர் எதிர்பார்க்கும் வரப்பிரசாதங்களை மறுமலர்ச்சி இயக்கத்தில் இணைபவர்கள் எதிர்பார்க்க முடியாது. அவர்கள் மறுமலர்ச்சி இயக்கத்தினூடாக அறிவையும் அமைதியையும் மட்டுமே எதிர்பார்க்க முடியும்.

மறுமலர்ச்சி இயக்கத்துக்கு எதிரிகள் கிடையாது. தான் தான் எதிரி எனவே அது கருதுகிறது. தனிமனிதனின் உள்ளத்தில் புதைந்து கிடக்கும் மோசமான, பிற்போக்கான வழக்காறுகளை உடைத்தெறிந்து நல்ல குணநலமுடைய மனிதனை உருவாக்க மறுமலர்ச்சி இயக்கம் முயல்கிறது. குணநலம் என்பதனை மத ரீதியான குணநலன்களாகவன்றி பௌதிக குணநலன்களாகவே அது பார்க்கிறது. மறுமலர்ச்சி இயக்கத்தில் இணைந்து கொள்பவர்களில் முதலில் தனிநபர் மாற்றத்தையும் பின்னர் குடும்ப மாற்றத்தையும் தொடர்ந்து சமூக மாற்றத்தையும் இயக்கம் எதிர்பார்க்கிறது.

மோசடிகள், இன குல மத பேதங்கள் அற்றிருப்பதே இயக்கம் எதிர்பார்க்கும் முக்கியமான குணநலன். தனது மனைவி உட்பட சகல பெண்களையும் மனிதர்களுக்குரிய சம அந்தஸ்துள்ளவர்களாக மதிப்பதுவும் இயக்கம் எதிர்பார்க்கும் குணநலனாகும். தம்பதிகளுக்கிடையேயும் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையேயும் அறிவு பூர்வமான கலந்துரையாடல் நடக்க வேண்டும். கணவன் வீட்டின் சர்வாதிகாரியல்ல என்பதோடு பெற்றோரும் பிள்ளைகளின் சர்வாதிகாரிகளாக இருக்கக் கூடாது.

பிள்ளைகளின் உற்பத்தித்திறனை வளர்க்கின்ற முக்கிய காரணியான கேள்வி கேட்கும் உரிமையினை பெற்றோர் மதிக்க வேண்டும். கீழ்ப்படிவுள்ள பிள்ளைகளை விட சிறந்த, படைப் பாற்றலுள்ள பிள்ளைகளே நாடப்பட (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தில் சிலர் ஞானசாரவுக்கு அடைக்கலம் கொடுத்துள்ளார்கள்

-காமினி வியங்கொட-
சிரேஷ்ட ஊடகவியலாளர் மற்றும் பிரஜைகள் சக்தி அமைப்பின் ஏற்பாட்டாளர்

நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி



- நல்லாட்சி அரசு முன்வைத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமையினாலும் அரசாங்கத்தின் கீழ் இடம்பெற்று வருகின்ற இனவன்முறைகள் காரணமாகவும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து மக்கள் மத்தியில் அதிருப்தி நிலவி வருகிறது. இது பற்றிய உங்களது அவதானத்தை கூற முடியுமா?

இது துரதிஷ்டமானதொரு நிலை. பொதுவாக எந்தவொரு அரசாங்கமாயினும் ஆட்சிக்கு வந்து இரண்டு மூன்று வருடங்கள் கழியும் போது அரசாங்கம் தொடர்பில் முன்னர் காணப்பட்ட திருப்தியான நிலைமைகள் காணப்படுவதில்லை. இலங்கையின் நிலையும் இப்படித்தான். ஆனால் முன்னைய அரசாங்கங்களை விடவும் நல்லாட்சி அரசாங்கம் குறித்த மக்கள் அதிருப்தி மிக விரைவில் ஏற்பட்டது. இலங்கையின் பிரதான அரசியல் கட்சிகள் இரண்டும் ஒன்றிணைந்து ஆட்சியை முன்னெடுப்பதே அதற்கான காரணம் என நான் நினைக்கிறேன்.

இரண்டு கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சியை நடத்தும்போது பல்வேறு சாதக பாதக விடயங்கள் உருப்பெறுகின்றன. இதற்கு முன்னர் இணக்கம் காணப்படாத பல விடயங்களில் தற்பொழுது இணக்கம் காணப்பட்டுள்ளன. மறுபுறத்தில் இரு கட்சிகளும் ஒன்றாக செயற்படுகின்ற போதும் கட்சிகள் என்ற அடிப்படையில் சிந்திக்கின்ற போதும் சில தாமதங்களும் ஒவ்வாமைகளும் அதிகரிக்கின்றன. இவை பாதகமான விடயங்கள். சில போது தனிக்கட்சி ஆட்சியமைத்திருந்தால் மக்கள் அதிருப்தி இவ்வளவு தூரம் அதிகரித்திருக்காது.

இத்தோடு, நல்லாட்சி அரசாங்கத்தினால் மக்கள் எதிர்பார்த்த பல்வேறு விடயங்கள் நிறைவேற்றப்படுவதில் தாமதம் காணப்படுவதும் மக்கள் அதிருப்திக்கு காரணமாக அமைந்துள்ளது. தவறு செய்தவர்களை தோல்வியுறச் செய்த அரசாங்கத்திற்கே வெற்றியீட்டிய அரசாங்கம் எனக் கூறப்படுகிறது. ஆனால் இம்முறை வெற்றியீட்டிய அரசாங்கத்திற்குள்ளால் தோற்கடிக்கப்பட்ட தவறிழைத்தவர்களும் உள்ளார்கள். எனவே அரசாங்கத்திற்கு அவர்களை பாதுகாத்து, அவர்களது விருப்பு வெறுப்புக்களுக்கு அமைய செயற்பட நேரிடுகிறது. அப்போது அரசாங்கம் வாக்குறுதியளித்த குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தும் நடவடிக்கை தாமதமாகிறது.

- கடந்த அரசாங்கத்தின் கீழ் அரங்கேறியது போன்று நல்லாட்சி அரசின் கீழாலும் முஸ்லிம் மக்களுக்கு எதிரான இனவாதச் செயல்கள் தொடர்ந்த வண்ணமுள்ளன. அரசாங்கத்தினால் ஏன் இவற்றை கட்டுப்படுத்த முடியாதுள்ளது. அதற்கான காரணம் என்னவென நீங்கள் கருதுகிறீர்கள்?

கடந்த அரசாங்கத்தினை போன்று இவ்வரசாங்கத்திலும் அரசியல் சுய நோக்கத்திற்காக வேண்டி மத வன்முறைகள் போன்றவற்றை பொறுத்துக் கொள்ளும் வழிமுறை பின்பற்றப்படுகிறது. கடந்த அரசாங்கம் அரசியல் நோக்கத்திற்காக வேண்டி மத வன்முறைகளை வேண்டுமென்றே பரப்பியது. ஞானசார போன்ற காடையர்களைப் பயன்படுத்தி இந்நாட்டின் முஸ்லிம் மக்களுக்கு எதிராகவும் சிறுபான்மை கத்தோலிக்கர்களுக்கு எதிராகவும் இனவன்முறைச் செயல்களை கோத்தாபய ராஜபக்ஷ நேரடியாகவே தலையிட்டு முன்னெடுத்தமை தெளிவாகவே தென்பட்டது.

இவ்வரசாங்கத்தின் கீழ் அனுசரணை பெற்று ஞானசார செயற்படுவதில்லை. இனவாதப் பித்துப்பிடித்த ஞானசாரவினை பாதுகாக்கும் சிலர் இவ்வரசாங்கத்தில் உள்ளார்கள். ஒரு சில அமைச்சர்கள் அவரைப் பாதுகாக்கும் கொள்கையில் நின்று செயற்பட்டு வருகிறார்கள். உதாரணத்திற்கு சில வாரங்களாக ஞானசாரவை கைதுசெய்ய முடியாமல் போயுள்ளது. இது எப்படி முடியும்? ஞானசாரவை விட பெரும் பயங்கரவாதிகளையெல்லாம் பிடித்த பொலிஸாருக்கு ஏன் இன்னும் அவரை கைதுசெய்ய முடியவில்லை?

நான் இதனை பொலிஸாரின் தவறாக நோக்கவில்லை. அதிகாரம் படைத்த ஒரு சில அமைச்சர்கள் பொலீஸாரின் நடவடிக்கைகளுக்கு மறைமுகமாக தடங்கல் ஏற்படுத்தி வருகிறார்கள். அதனாலேயே ஞானசாரவுக்கு நாட்டில் இனவாதத்தைத் தூண்டிக் கொண்டு சுதந்திரமான முறையில் நடமாட முடிகிறது. ஞானசாரவின் செயற்பாடுகளை நிறுத்தாமை தொடர்பாகவும் அவ்வினவாத நடவடிக்கைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்காமை தொடர்பாகவும் இவ்வரசாங்கம் முழுமையாக பொறுப்புச் சொல்ல வேண்டும்.

- ஞானசாரவின் செயற்பாடுகள் தொடர்பிலும் அவரை கைது செய்ய வேண்டியதன் அவசியம் தொடர்பாக 'பிரஜைகள் சக்தி' (புரவெசி பலய) அமைப்பு எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது?

இது தொடர்பில் நாம் அதிகமாகப் பேசியுள்ளோம். ஓரிரு நாட்களுக்கு முன்னர் பிரஜைகள் சக்தி அமைப்பும் நீதியான சமூகத்திற்குரிய மக்கள் அமைப்பும் முஸ்லிம் ஷூறா கவுன்ஸில் அங்கத்தவர்களும் ஒன்றிணைந்து பொலிஸ்மா அதிபரை சந்தித்து அவரிடம் முறைப்பாடுகளை முன்வைத்துள்ளோம். நாளை (13) நாம் இது விடயம் குறித்து ஜனாதிபதியையும் சந்தித்து உரையாடவுள்ளோம்.

அதனால் தற்பொழுது நாம் இவ்வினவாதக் குழுக்களை அடக்குமாறும் இனவாதத்தைக் கக்கும் ஞானசார போன்றவர்களை சட்டத்தின் முன் நிறுத்துமாறும் கோரி அரசாங்கத்தை வலுயுறுத்தி வருகிறோம்.

- சிறுபான்மை சமூகமொன்றுக்கு எதிராக இனவாதச் செயல்கள் முடுக்கிவிடப்படுகின்றது என்பதை நன்றாகத் தெரிந்து கொண்டும் ஒரு சில புத்திஜீவிகளையும் சிவில் அமைப்புகளை தவிர சிங்கள சமூகத்தின் ஏனைய மட்டங்களிலிருந்து இதற்கெதிராக பலமாகக் குரல் எழுப்பப்படுவதில்லை. அதற்கான கார்ணம் என்ன?

பொதுவாக நோக்கினால் இனவாதம் சிறியதொரு கூட்டத்தினாலேயே தூண்டப்படுகிறது. அதுபோன்று இனவாதத்திற்கெதிராகவும் சிறு தரப்பினரே குரல் எழுப்பி வருகிறார்கள். நாட்டின் பெரும்பான்மையினர் அதற்கு நடுவிலேயே உள்ளார்கள். நாட்டின் பெரும்பான்மையினர் இனவாதிகளல்ல. தமிழ்ப் பிரதேசங்களை எடுத்துப் பாருங்கள் வடக்கில் சொற்ப அளவினரே இனவாதிகளாகச் செயற்படுகிறார்கள். அது போன்று அதற்கெதிராக சிறு தரப்பினரே முன்நிற்கிறார்கள். 90 வீதமான தமிழ் மக்கள் நடுநிலையைப் பின்பற்றுகிறார்கள்.

இது ஒரு நாட்டின் சாதாரண இயல்பு. சிறு தரப்புக்கு இனவாதத்தைத் தூண்ட முடியும் என்றால் மற்றுமொரு சிறு தரப்புக்கு அதற்கு எதிராகப் போராட முடியுமாக இருக்க வேண்டும். பிரஜைகள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாங்கள் சிறு தரப்பு. ஆனால் நாம் எம்மால் இயலுமான வகையில் சகல ஊடகங்களையும் சமூக வலைத்தளங்களையும் பயன்படுத்தி, அரசியல்வாதிகளுக் கூடாகவும் ஜனாதிபதி பிரதமர் ஊடாகவும் அழுத்தங்களைப் பிரயோகித்து இனவாத நடவடிக்கைகளுக்கு எதிராகச் செயற்படுகிறோம். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் எமக்குச் சிறந்த பெறுபேறுகளும் கிடைத்துள்ளன.

- ஒருங்கிணைந்த எதிர்க் கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்களும் ஒரு சில தேரர்களும் ஞானசார கைது செய்யப்பட முன்னர் வடக்கில் இனவாதம் பேசுபவர்கள் கைது செய்யப்பட வேண்டும் என்ற கோஷத்தை வலியுறுத்தி வருகிறார்கள். இது எவ்வளவு நியாயபூர்வமான விடயமாகப் பார்க்கப்பட வேண்டியுள்ளது?

வடக்கில் தீவிரப் போக்குடன் செயற்படுபவர்களுக்கும் தெற்கில் தீவிர மதவாத போக்குடன் செயற்படுபவர்களுக்கும் [illegible] கள் கிடையாது. இரு தரப்பினரும் ஒருவரை வைத்து ஒருவர் பிழைப்பு நடத்துபவர்கள். வடக்கில் சிவாஜிலிங்கம் தெரிவித்து வரும் கருத்துக்கள் தொடர்பில் தெற்கிலுள்ள இனவாதிகள் மகிழ்ச்சியடைகிறார்கள். அதுபோன்று தெற்கிலுள்ள ஞானசார அரங்கேற்றும் இனவாதச் செயல்களைப் பார்த்து வடக்கிலுள்ள தமிழ் இனவாதிகள் மகிழ்ச்சியடைகிறார்கள். தமது இனவாதத்தையும் மதவாதத்தையும் பேணிக்கொள்வதற்கான உந்துசக்தியாக மறுபுறத்திலும் இனவாதம், மதவாதம் இருக்க வேண்டும் என்பது அவர்களின் குறிக்கோளாக உள்ளதே இதற்கான காரணமாகும்.

இதுவே யதார்த்தபூர்வமான விடயம். இரு தரப்பையும் ஒரே கிளையில் வாழும் குருவிகளாகவேப் பார்க்கிறேன். இது மிகவும் பாரதூரமான விடயம். இதனால் நாட்டின் பொதுமக்கள் இதில் தலையிட வேண்டும். சகல இனவாதச் நடவடிக்கைகளுக்கு எதிராகவும் மக்கள் தமது எதிர்ப்பைக் காண்பிக்க வேண்டும். மக்கள் மௌனிகளாக இருக்கும் காலமெல்லாம் வடக்கிலும் தெற்கிலும் உள்ள கடும் போக்குவாதிகள் தமது நிகழ்ச்சி நிரலை ஒழுங்குபடுத்திக் கொண்டேயிருப்பார்கள்.

- முஸ்லிம்களின் பொருளாதாரத்தை மையப்படுத்திய தாக்குதல்கள் நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரிய பின்னடைவை ஏற்படுத்துமல்லவா?

ஆம். வியாபார நிலையங்களுக்கு பாதுகாப்பில்லை என்றால் வியாபாரிகள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை. தேசிய முதலீடுகள் அதிகரிக்க வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம். இதுபோன்ற நடவடிக்கைகளால் தேசிய முதலீடுகள் வருவதில்லை. சகல இனவாதச் செயல்களிலும் பொருளாதாரத்தை வீழ்ச்சியடையச் செய்யும் எண்ணமுள்ளது. நாட்டின் பொருளாதாரத்தை முடக்கும் போது அரசாங்கம் பலவீனமடைகிறது. அப்போது தங்களது இனவாத நிகழ்ச்சி நிரலை இலகுவாக முன்னெடுக்க முடிகிறது.

- நாட்டில் இனவாதச் செயல்களை முறியடித்து, சகவாழ்வை உறுதி செய்து, நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச்செல்ல அரசாங்கமும் மக்களும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் என்ன?

நாட்டை இதுவரை காலமும் முறையாக அபிவிருத்தி செய்துகொள்ள முடியவில்லை. நாட்டில் ஐக்கியத்தை பேணவும் முடியவில்லை. இந்நாட்டில் சிறுபான்மையினருக்கு போதிய அரசியல் அதிகாரம் வழங்கப்படவில்லை. அதனாலேயே நாம் 30 வருட காலமாகப் போரிட வேண்டியேற்பட்டது. தெற்கில் அதிகாரத்திற்கு வரும் ஆட்சியாளர்கள் வடக்குடனும் கிழக்குடனும் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வதை நிராகரித்துள்ளார்கள்.

இலங்கையில் இது போருக்கு முன்பிருந்தே காணப்பட்ட விடயமாக உள்ளது. அதன் பிரதிபலனாகவே நாம் போரை தெரிவுசெய்துள்ளோம். தற்பொழுது யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப் பட்டுள்ளது. எனவே இத்தகைய இருள்மிகு வரலாறு மீள் உருவாக்கப்படக் கூடாது. அதற்கு நாம் வரலாற்றில் இழைத்த தவறுகளை மீளச் செய்யாமலிக்க வேண்டும். அரசியல் அதிகாரத்தை பகிர்ந்துகொள்ளாமையே நாம் இழைத்த மிகப் பெரும் தவறாக உள்ளது.

தற்பொழுதாவது அதை நாம் செய்ய வேண்டும். இதனைச் செய்யாமல் இருக்கும் போதே சகல இனவாதிகளுக்கும் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கும் வாய்ப்பு உருப்பெறுகின்றது. உண்மையில் இது மத்திய அரசின் மீது சுமத்தப் படுகின்ற மிகப்பெறும் பொறுப்பொன்றாக உள்ளது. இதற்கான தீர்மானம் மேற்கொள்ளும் சக்தி தலைமைத்துவத்திடம் காணப்பட வேண்டும். தற்போதைய பிரதமரும் ஜனாதிபதியும் அதிகாரம் பகிரப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப் பட வேண்டும் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் இந்நம்பிக்கை மாத்திரம் இருந்தால் போதாது. அது செயற்பாட்டில் கொண்டு வரப்பட வேண்டும். அதற்கானதொரு அரசியல் விதி எழுதப்பட வேண்டும். அவ்வாறான விதியொன்று எழுதப்படுவதன் மூலமே கடந்த காலத்தில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் எதிர்காலத்திலும் ஏற்படாமல் இருக்கும்.

தேசிய பிரச்சினைக்கு ஒரு சாவியே காணப்பட வேண்டும். தேசிய பிரச்சினைக்கு அதிகாரம் [illegible] அது அரசியல் கொள்கை [illegible]யாக அமைய வேண்டும்.




இஸ்லாத்தில் கட்டாயமான கடமைகள் ஐந்தில் தொழுகை, நோன்பு, ஸகாத் ஆகிய கடமைகள் ரமழான் மாதத்திலே சங்கமிக்கின்றன. ஸகாத் ரமழானில் தான் கொடுக்கப்பட வேண்டும் என்று சமூகம் நினைக்கும் அளவுக்கு ஸகாத் சேகரிப்புக்கள் ரமழானிலே நடைபெறுகின்றன. நோன்பு என்று வரும்பொழுது அது மொத்த சமூகமும் ரமழானிலே நிறைவேற்ற வேண்டிய கடமையாக இருந்தாலும் அது ஒவ்வொருவர் மீதும் தனித் தனியாக விதிக்கப்பட்டதாகும். இதனால் ரமழானுடைய காலத்திலே தராவீஹ் தொழுகைகளும் இப்தாருமே கூட்டுச் செயற்பாடுகளாக அமைகின்றன.

தொழுகையும் ஸகாத்தும் கூட்டுச் செயற்பாட்டை வலியுறுத்துபவை. இந்த வகையில் தொழுகையைக் கூட்டாக நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகள் சமூகத்திலே நடைமுறையில் இருக்கின்றன. இதற்கென ஏராளமான பள்ளிவாசல்கள் தாராளமாக நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. இறுதிக் கடமையான ஹஜ்ஜும் கூட கூட்டாக நிறைவேற்றப்பட வேண்டியதொன்று என்ற வகையில் அதற்கெனத் தனியான ஆயம் நிறுவப்பட்டு அந்தக் கடமை நடைபெற்று வருகிறது.

இலங்கையில் உள்ள பள்ளிவாசல்கள் இந்தக் கடமைகளில் தொழுகையை மட்டுமே தமது ஒரே பணியாகக் கொண்டு இயங்குகின்றன. அல்குர்ஆனிலே பல இடங்களில் தொழுகையும் ஸகாத்தும் இணைத்துப் பேசப்பட்டிருக்கின்றது. ஆனால் பள்ளிவாசல்கள் ஸகாத்தை நடைமுறைப்படுத்துவதில் பின்னிற்கின்றது. மையித்தை அடக்குதல் என்கின்ற பர்ளுகிபாயாவான சமூகக் கடமையை முன்வந்து செய்யும் பள்ளிவாசல்கள் பர்ளான மார்க்கக் கடமையான ஸகாத்தை கைவிட்டு விடுகின்றன.

தொழுகைக்கான இடம் அல்லாஹ்வின் இல்லம் எனப்படுகிறது. இந்த இல்லம் இயங்குவதற்கென அல்லாஹ் வகுத்த ஒரு பொறிமுறையாக ஸகாத் அமைகிறது. சமூகத்தின் செல்வந்தர்கள் பள்ளிவாசலுடன் பிணைக்கப்படுகிறார்கள். சமூகத்தின் தேவையுடைவர்கள் பள்ளிவாசலை நாடி நிற்பார்கள். இப்படி பள்ளிவாசலை மையமாக வைத்து சமூகம் இயங்க ஆரம்பிக்கும். இன்றைய பள்ளிவாசல்கள் இயங்குவதற்குத் தேவையான நிதியையும் இந்தக் கடமை பள்ளிவாசலுக்குப் பெற்றுக் கொடுக்கும். இது தொழுகையும் ஸகாத்தும் பிணைத்துச் சொல்லப்பட்டதற்கான தாத்பரியங்களுள் ஒன்றாகவும் அமைய முடியும்.

இப்படி ஒரு ஒழுங்குமுறை இருந்தும் இஸ்லாமியமயப்படுத்தப்பட வேண்டிய பெரும்பாலான பள்ளிவாசல்கள் ஸகாத்தை ஒரு கடமையாக எடுத்து நடைமுறைப்படுத்து வதில்லை. ஒரு மேலதிகச் சுமையை தம்மீது சுமத்திக் கொள்வதாகவே நிர்வாகிகள் இதனைப் பார்க்கிறார்கள். இந்த வேலையெல்லாம் செய்வதற்குரிய ஆள்பலம் தம்மிடம் இல்லை என்று கைவிரிக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் தாண்டி சமூகத்திலே ஸகாத்தை வெற்றிகரமாக நிறைவேற்றும் ஸகாத் கமிட்டிகள் இயங்கத்தான் செய்கின்றன. ஊர்களிலே இந்தப் பணியைச் செய்பவர்கள் எல்லோருமே ஊரிலுள்ள பள்ளிவாசலுக்கு கட்டுப்பட்டவர்களாகத் தான் இருக்கிறார்கள். ஆள்பலம் இல்லை, மிகைச் சுமை என்று ஸகாத் கடமையை புறமொதுக்குகின்ற பள்ளிவாசல்கள் எல்லாம் இவர்களைப் பயன்படுத்தாமல் விட்டவைகள் தான்.

இந்த வகையில் பள்ளிவாசல்கள் ஸகாத் கடமையை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதற்கான காரணம் பள்ளிவாசலின் முகாமைத்துவத்துவத்தில் இருக்கின்ற குறைபாடேயன்றி வேறில்லை என்பது புலப்படுகிறது. ஸகாத் தொடர்பான விடயங்கள் பொருளியல், பொருளீட்டல் கொள்கைகளுடன் சம்பந்தப்பட்டது. பல இடங்களில் அது பல கொள்கை வகுத்தலுடன் சம்பந்தப்படுகிறது. ஸகாத்தைக் கணக்கிடுதல், சேகரித்தல், விநியோகித்தல் அனைத்துமே அறிவியலை வேண்டி நிற்பவை.

ஞான சூனியங்களினால் பெரும்பாலும் ஆளப்படுகின்ற எமது அதிகார மையங்களுக்கு [illegible]து போன்ற விடயங்கள் பாரமாக அமைவதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால் அதிகார மையங்கள் [illegible] வசதிக்கேற்றாற் போல புறக்கணித்து விடுவதற்கு இதுவொன்றும் பித்அத்தான விடயமுமில்லை.

ஸகாத் வழங்காத ஒருவருக்கெதிராக கலீபா அபூபக்ர் ஜிஹாத் பிரகடனம் செய்தார்கள். அல்லாஹ்வின் இல்லமான பள்ளிவாசல்களே ஸகாத் கடமையை புறக்கணிக்கும் போது நாங்கள் அபூபக்கர்களுக்காக காத்திருக்க வேண்டிய அவசியமில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பயங்கர கொலரா ஆபத்தில் யெமன் சிறுவர்கள்



யெமன் கடுமையான மோதல்களால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அங்கு சிறுவர்கள் மத்தியில் மிக வேகமாக கொலரா நோய் பரவி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. ஒவ்வொரு 35 செக்கனுக்கும் ஒருவர் என்ற விகிதத்தில் மிக வேகமாக கொலரா நோய் தொற்றி வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சேவ் த சில்ரன் தொண்டு நிறுவனம் விடுத்துள்ள அறிக்கைககளின் படி கடந்த இரு வாரங்களில் நோயின் தாக்க வேகம் மும்மடங்கு அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது. இதே நேரம் பயங்கர வேகத்தில் அதிகரிக்கும் நோயாளர்களை பராமரிக்கும் வைத்தியசாலை உட்கட்டமைப்புக்களும் கூட வெகு சொற்பமான அளவிலேயே காணப்படுவதாக அவ்வமைப்பு கவலை வெளியிட்டுள்ளது.

நிலைமைகள் மிகுந்த ஆபத்தான கட்டத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் பாரிய உயிரிழப்புக்களுக்கான அபாய சமிக்ஞைகளும் உள்ளதாகவும் யெமனில் செயற்படும் பிரதான தொண்டு நிறுவனமொன்றின் பணிப்பாளரான கிராண்ட் பிரிட்சார்ட் என்பவர் எச்சரிக்க விடுத்துள்ளார். குறிப்பாக வைத்திய சிகிச்சைகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள் இன்மையே உயிரிழப்பு எண்ணிக்கையை கூட்டி விடுவதற்கான வாய்ப்பை மேலும் அதிகரித்து விடும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சேவ் த சில்ரன் அமைப்பை மேற்கோள் காட்டி வெளியிடப்பட்டுள்ள தரவுகளின்படி பாதிக்கப்பட்டுள்ளவர்களில் 50% க்கும் மேற்பட்டவர்கள் 15 வயதிலும் குறைந்த சிறுவர்களாவர். இரு வாரங்களுக்கு முன்னர் இது 40% ஆக இருந்தது. கடந்த புதன் ஜூன் 13ம் திகதி வரைக்குமான தகவல்களின் படி யெமனின் மொத்த 22 பிராந்தியங்களில் 20 பிராந்தியங்களில் மட்டும் 129,185 கொலரா நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர். இதில் 942 கொலரா மரணங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. யுனிசெப் தகவல்களின்படி யெமனில் கடந்த ஆறு மாதங்களில் கொலரா நோயால் பாதிக்கப்பட்டவர்களது மொத்த எண்ணிக்கை 250,000 ஐ விடவும் அதிகமாகும்.

# சர்வதேசப் பார்வை


## பங்களாதேஷில் வெள்ளம், மண்சரிவு

பங்களாதேஷில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக பெரு வெள்ளம் ஏற்பட்டுள்ளதோடு மண் சரிவுகளும் தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றன. சுமார் 150ஐ விடவும் அதிகமான தொகையினர் மரணித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கான மீட்புப் பணிகளும் மந்த கதியிலேயே இடம்பெற்று வரும் நிலையில் கடும் மழையும் தொடர்கின்றது.

உள்ளூர் ஊடகங்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டுள்ள அல் ஜஸீரா மீட்புப் பணியாளர்கள் சடலங்களை புதை மண்ணுக்குள்ளிருந்து வெளியேற்ற சீமெந்து அள்ளும் உபகரணங்களைப் பயன்படுத்துவதாகக் குறிப்பிட்டுள்ளது.

## அஸதின் படைகளால் மருத்துவ ஊழியர்களும் படுகொலை




சிரியாவில் அஸாதின் படைகளால் தொடர்ந்தும் நிகழ்த்தப்படும் படுகொலைகள் மற்றும் இரசாயனத் தாக்குதல்கள் தொடர்பான தகவல்களை லான்ஸீட் உலக மருத்துவ கண்காணிப்பு சஞ்சிகை ஆய்வு செய்து வெளியிட்டுள்ளது.

குறித்த ஆய்விலே 2011 முதல் 2016 வரையான காலப்பகுதி உள்ளடக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. மருத்துவத் துறை சார்ந்தவர்களில் மாத்திரம் சுமார் 792 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் அதில் 92% ஆனோர் அஸதின் அரச படைகளால் கொல்லப்பட்டுள்ள தாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அலெப்போவில் மாத்திரம் கடந்த மூன்றாண்டுக்குள் சுமார் 19 தடவைகள் அங்குள்ள பிரதான வைத்தியசாலை மீது தாக்குதல் நிகழ்த்தப்பட்டுள்ளது. நிகழ்த்தப்பட்ட மொத்தத் தாக்குதல்களில் சுமார் 89% ஆன தாக்குதல்கள் அஸதின் படையினர் மற்றும் அஸத் ஆதரவு ரஷ்யப் படை களின் மூலமாக நிகழ்த்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

வைத்தியசாலைகளும் மருத்துவ நிலையங்களும் தொடர்ந்தும் தாக்குதலுக்குள்ளாகி வரும் நிலையில், சுமார் 15,000 க்கும் மேற்பட்ட வைத்தியர்கள் நாட்டை விட்டும் வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாக குறித்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## குறைந்த விலைக்கு வேலையாட்களை சுரண்டும் இவான்கா ட்ரம்ப்



அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் மூத்த புதல்வி இவான்கா ட்ரம்ப் இந்தோனேசியாவில் நடாத்தும் ஆடைத் தொழிற்சாலையில் மிகக் குறைவான வேதனத்துக்கு தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளதாக அங்குள்ள தொழிலாளர் நலன் பேணும் அமைப்புக்களிடத்தில் முறைப்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக த கார்டியன் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இவான்கா ட்ரம்பின் குறித்த ஆடைத் தொழிற்சாலையில் மாதாந்த வேதனமாக 137 டாலர்களே அதிகூடிய தொகையாக வழங்கப்படுவதாகக் கூறப்படுகிறது. மேலும் தொழிலாளர்கள் தமது குழந்தைகளை விட்டும் தூரமாக இருப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படுவதாகவும் நாளாந்தம் சாத்தியமற்ற வேலை இலக்குகள் தரப்படுவதனூடாக தாம் வேலைத் துஷ்பிரயோகத்துக்கு உட்படுவதாகவும் குறித்த தொழிலாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

## குத்ஸிலுள்ள அல்ஜஸீராவை மூடும் முஸ்தீபுகளில் நெட்டன்யாகு



ஆக்கிரமிக்கப்பட்டுள்ள குத்ஸ் பிரதேசத்திலுள்ள அல்ஜஸீரா அலுவலகத்தை மூடி விடும் முஸ்தீபுகளில் இஸ்ரேல் பிரதமர் பென்ஜமின் நெட்டன்யாகு இறங்கியுள்ளதாக யதீஊத் அஹ்ரனூத் என்ற இஸ்ரேலிய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த திங்களன்று (ஜூன் 10) மாலை இடம்பெற்ற விஷேட கூட்டத்தின் பின்னரே இம்முடிவு எடுக்கப்பட்டதாக குறித்த பத்திரிகையின் செவ்வாய் இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இம்முடிவுகள் அரச ஊடகங்கள், வெளிநாட்டமைச்சு மற்றும் ஷாபாக் என்ற இஸ்ரேலின் மத்திய புலனாய்வுப் பிரிவினரோடு பேசியதன் பின்னரே எடுக்கப்பட்டதாக குறித்த பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. கடந்த வாரங்களில் கத்தார் நெருக்கடியின் போதும் அல்ஜஸீரா ஊடகம் சியோனிஸ ஆக்கிரமிப்பாளர்களுக்கு அளித்த நெருக்குவாரங்கள் குறித்து பரவலாகப் பேசப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பிரிட்டனுக்கு ஐரோப்பிய யூனியனின் கதவுகள் திறந்தேயுள்ளன

இமானுவேல் மெக்ரோன்



பிரிட்டன் ஐரோப்பிய யூனியனிலிருந்து வெளியேறும் தனது முடிவை மீள் பரிசீலனை செய்து மீண்டும் ஒன்றிணைந்துகொள்வதற்கான வாயில்கள் திறந்து காணப்படுவதாக பிரான்சின் புதிய அதிபர் இம்மானுவேல் மக்ரோன் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் கடந்த வாரம் பாராளுமன்ற தேர்தல் நிறைவுற்று தொங்கு பாராளுமன்றமொன்று அமைந்துள்ள நிலையிலேயே பிரிட்டன் பிரதமர் தெரேசா மேயை நோக்கி இந்த அழைப்பினை மக்ரோன் விடுத்துள்ளார். பிரிட்டன் விரும்புமிடத்து மீண்டும் ஐரோப்பிய யூனியனுடன் இணைவதற்கான பேரம் பேசல்களுக்கு தாம் தயாரெனவும் குறிப்பிட்டிருந்தார். இவ்வாறான கருத்தையே ஜெர்மனியின் சான்ஸிலர் அஞ்செலா மேர்கலும் கடந்த வாரம் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தேர்தல் வெற்றியை ஈட்டிக் கொண்ட தெரேசா மே தனது முதல் விஜயமாக பிரான்ஸ் நோக்கிப் பயணித்திருந்தார். இதன் போதே பிரான்சின் புதிய அதிபர் இம்மானுவேல் மக்ரோன் மேற்குறித்த கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்.

தொங்கு பாராளுமன்றம் அமைந்துள்ள நிலையில் தெரேசா மேயின் கட்சியினர் டெமோக்ரட்டிக் யூனியனிஸ்ட் கட்சியினரோடு அரசாங்கம் அமைக்கும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் மிதவாத வலதுசாரி புரட்டஸ்தாந்து கிறிஸ்தவக் கட்சியினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தனது இரு தீவுகளை சவூதிக்குத் தாரைவார்த்தது எகிப்து



செங்கடலில் சவூதிக்கும் எகிப்துக்கும் மத்தியிலுள்ள எகிப்துக்கு சொந்தமான இரு தீவுகளை சவூதிக்குத் தாரைவார்க்கும் தீர்மானமொன்றுக்கு சீசியின் பாராளுமன்றக் குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது. செங்கடலின் கேந்திர முக்கியத்துவமுள்ளதாகக் கருதப்படும் இரு தீவுகளையும் தாரைவார்த்ததன் பின்னர் சட்டத்தரணிகள் உள்ளிட்ட பல தரப்புப் பொது மக்களும் கெய்ரோ வீதிகளில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

இதன் போது பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் கைகலப்புக்கள் ஏற்பட்டிருந்தமையை சர்வதேச ஊடகங்கள் பதிவுசெய்திருந்தன. தய்ரான் மற்றும் ஸன்பாரி ஆகிய குறித்த இரு தீவுகளையும் சவூதிக்கு அளி[illegible] உயர்மட்டப் பேச்சுவார்த்தை கடந்த வருடம் மன்னர் ஸல்மானின் எகிப்து [illegible]த்தைத் தொடர்ந்து இடம்பெற்றிருந்தது. இதற்குக் கைமாறாக சவூதி எகிப்தில் பல பில்லியன் முதலீடுகள் மற்றும் இலகு கடன்களை அறிவித்திருந்தது.

## மௌஸிலுக்கான இறுதிக் கட்டப் போர்



ஈராக்கில் தாஇஷ் வசமிருக்கும் மிகச் சிறிய நிலப் பகுதியை [illegible] ஈராக்கியப் படையினர் [illegible] இதனைத் தொடர்ந்து அங்கிருந்து மக்கள் கூட்டம் கூட்டமாக வெளியேறும் காட்சிகளை சர்வதேச ஊடகங்கள் வெளியிட்டுள்ளன.

இலட்சக் கணக்கானோரைப் பலியெடுத்திருக்கும் ஈராக் யுத்தத்தில் மிக மோசமான கோர விளைவுகளை எதிர்நோக்கும் அபாயம் உள்ள இறுதி மோதலாக இது குறிப்பிடப்படுகிறது. வெளித் தொடர்புகளும் மருத்துவ உதவிகளும் அற்றிருக்கின்ற நிலையில் நிலைமைகள் இன்னும் சிக்கலாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை ஈராக்கியப் பகுதியிலுள்ள அமெரிக்காவால் சுயாட்சி வழங்கப்பட்ட குர்திஸ்தானைத் தனிநாடாக்கக் கோரும் சர்வஜன வாக்கெடுப்பு வரும் செப்டம்பர் 25 இல் இடம் பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. எரிந்து கொண்டிருக்கும் மத்திய கிழக்கு பிரச்சினையை இன்னும் பல தசாப்தங்களுக்கு நீட்டிக்கும் புதிய அத்தியாயங்கள் இங்கு துவங்கப்படுமென அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

குறித்த குர்திஜ்தானுக்கான சர்வஜன வாக்கெடுப்பை சவூதி வரவேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• எம்.எஸ்.எம். ஸியாப்



# கட்டார் நெருக்கடி:

## எதிரிகளது அம்புகள் எங்கே பாய்ந்துகொண்டிருக்கின்றன?

குழப்பகரமிக்க காலத்தில் சத்தியவாதிகளை எவ்வாறு இனங்கண்டுகொள்வது என இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களிடத்தில் வினவப்பட்ட போது ''எதிரிகளின் அம்புகளைப் பின்தொடர்ந்து செல்! அவை சத்தியவாதிகளை நோக்கிப் பாய்வதை நீ கண்டுகொள்வாய்'' எனப் பதிலளித்தார்கள். -

கடந்த இரு வாரங்களாக மத்திய கிழக்கின் அரசியல் நிகழ்வுகள் மிகுந்த சூடாக பல தளங்களிலும் விவாதிக்கப்பட்டது; விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தனது பதவியேற் பின் பின்பு முதலாவதாக மேற்கொண்டிருந்த வெளிநாட்டு விஜயம் சவூதி அரேபியாவுக்கும் இஸ்ரேலுக்குமென இருந்தது.

மே மாத இறுதிப் பத்தில் நிகழ்ந்த இவ்விஜயத்தைத் தொடர்ந்து காட்சிகள் தடல்புடலாக மாற்றம் பெற்றன. சவூதியோடு யூ.ஏ.ஈ, எகிப்து, பஹ்ரைன் ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து கட்டாருக்கு எதிரான பொருளாதாரத் தடையை அறிவிக்கின்றன. அதனைத் தொடர்ந்து யெமன், லிபியாவின் ஹப்தர் அரசு, மாலைத் தீவுகள் போன்ற நாடுகளும் தாம் கட்டாருடனான தொடர்புகளைத் துண்டித்துக் கொள்வதாக அறிவித்திருந்தன.

அதற்குள் ஜூன் முதல் வாரத்தில் தான் எமிரேட்ஸின் அமெரிக்காவுக்கான தூதுவர் யூஸுப் உத்தைபாவுக்கும் இஸ்ரேலிய பாதுகாப்புக் கொள்கை வகுப்பு அமைப்பான Foundation of Defense of Democracies (FDD) என்ற நிறுவனத்துடன் வைத்திருந்த ஈ-மெயில் தொடர்புகள் ஹேக்கர்களால் இடைமறிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருந்தன. இதில் யூ.ஏ.ஈ. க்கும் எகிப்திய இராணுவ சதி, துருக்கிய இராணுவ சதியில் எமிரேட்ஸின் பங்கு, கட்டாரின் பிராந்திய செல்வாக்கை வலுவற்றதாக்குவது, முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பு மற்றும் பலஸ்தீனத்தின் ஹமாஸ் அமைப்பை முடங்கச் செய்வது என்பவை முக்கியமாக அந்த ஈ-மெயில்களில் பரிமாறப்பட்டிருந்தமை கசிந்திருந்தது.

குறித்த நிகழ்வுகளின் உண்மைத் தன்மை வாஷிங்டனிலுள்ள எமிரேட்ஸ் தூதரக உத்தியோகத்தர்களால் உறுதிப்படுத்தப்பட்டுமிருந்தது. மொத்தத்தில் அமெரிக்கா-இஸ்ரேலியக் கூட்டுக்கு எது தேவையோ அவையனைத்தையும் கனகச்சிதமாக நிறைவேற்றிக் கொடுப்பதில் அமெரிக்காவின் பிரதான வர்த்தகப் பங்காளியான யூஸுப் உத்தைபா முன்னின்று உழைத்திருந்தார்.

சமநேரத்தில் ஹேக் செய்யப்பட்ட அல்ஜஸீரா ஊடகத்தின் இணையத் தளங்களில் நிலையை இன்னும் சிக்கலாக்கும் வகையில் கட்டார் அமீர் தெரிவித்ததாக ஹமாஸ், ஹிஸ்புல்லாஹ் ஆதரவுச் செய்திகள் புனைந்து வெளியிடப்பட்டிருந்தன. இதன் போது எண்ணற்ற பல இணையதள மற்றும் சமூக ஊடகக் கணக்குகள் ஹேக் செய்யப்பட்டு முறுகல்கள் ஏற்படுத்துவதற்கான நிலைகள் தோற்றுவிக்கப்படுவதை phys.org, cnn, nytimes, mofa.gov.qa ஆகிய இணைய செய்திகளூடாக அறியப்பட்டது.

இங்கு உத்தைபா விவகாரத்தை பரவலாகக் கவன ஈர்ப்பு செய்யும் விதத்தில் சர்வதேச ஊடகத் தளத்தில் கட்டாரின் அல்ஜஸீரா ஊடகம் வெளியிட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து புகைச்சல்கள் வெளித் தெரிய ஆரம்பித்து எமிரேட்ஸின் கடும் அழுத்தத்தில் சவூதியின் லெட்டர் பேடில் மன்னர் ஸல்மானின் கையெழுத்தோடு பொருளாதாரத் தடை அறிவிப்புக்கள் ஜூன் 6 வைகறைப் பொழுதிலேயே அறிவிக்கப்பட்டன.

பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மைக்கு கட்டார் பங்கம் விளைவிப்பதாகவும் தீவிரவாதத்துக்கு ஆதரவளிப்பதாகவும் உடனடி தன்னிலை விளக்கத்தில் சவூதி உள்ளிட்ட நான்கு நாடுகளும் தெரிவித்திருந்தன. தம் நாடுகளிலுள்ள கட்டார் இராஜதந்திரிகளை 48 மணி நேரங்களுக்குள் வெளியேறுமாறும் கட்டார் பிரஜைகள் தம் நாடுகளை விட்டும் வெளியேறுவதற்கு இரு வாரங்கள் அவகாசம் வழங்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டது.

அத்தோடு கட்டாருக்கான தரை மார்க்க, ஆகாய மார்க்க, கடல் மார்க்க போக்குவரத்துப் பாதைகளும் துண்டிக்கப்படுவதாக மேற்கண்ட நாடுகள் அறிவித்தன. இதனால் கட்டாரினுள் உணவுத் தட்டுப்பாடு நிகழுமோ என்ற அச்சம் ஏற்பட்டு அங்குள்ள அனைத்து அங்காடிகள், சந்தைகளிலும் உணவு, அத்தியாவசியப் பொருட்கள் உடனடியாக நுகரப்பட்டு களஞ்சியங்கள் வெறுமையாகி ஒரு வித செயற்கைப் பதற்றம் உருவாக்கப்பட்டது. எனினும் உடனடியாக துருக்கி மற்றும் ஈரானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களும் கட்டாரின் சந்தைகளை நிரப்பின.

இப்போது கடல்வழி மார்க்கத்தை சீர்செய்வதற்காக கட்டாரில் அமைக்கப்பட்டுவரும் சர்வதேச தரத்திலான ஹமத் துறைமுகம் அமைக்கும் பணிகள் தீவிரமாக்கப்பட்டிருக்கின்றன. சவூதி, எமிரேட்ஸ் வான் பரப்புக்களுக்கூடாகப் பறப்புக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் ஆகாய மார்க்க வழியும் சுமார் 20 நிமிட தாமதத்தை மட்டுமே ஏற்படுத்தக் கூடிய நிலைமை நிலவுகின்றது. எனவே குறித்த நான்கு நாடுகளும் எதிர்பார்த்த படியான அழுத்தங்களை கட்டார் இலகுவாகக் கடந்து சென்றது. பங்குச் சந்தை நிலவரங்களும் கூட தோஹாவில் அதிகரிப்பையும் ரியாத், துபாயின் பங்குச் சந்தைகள் வீழ்ச்சியையும் சந்தித்திருந்தன.

கட்டார் மீதான தடையைத் தொடர்ந்து வளைகுடா நெருக்கடி பற்றி எழுந்த விவாதங்களில் முக்கியமானது அரசியல், பொருளாதாரம் சார்ந்த ஆதிக்கப் போட்டியின் காரணத்தினாலா? அல்லது உண்மையிலேயே சவூதி அறிவித்தது போன்று கட்டார் தீவிரவாதத்துக்கு சார்பாகவும் ஈரானோடும் நெருக்கமானதாலா? அல்லது வஹாபிஸம், சூபிஸம், ஷீஆயிஸம் போன்ற மதவாதப் பிரிவினைப் போக்குகளைக் காரணம் காட்டி மத்திய கிழக்கின் அதிகாரப் போட்டிகள், மன்னராட்சிக் கார்ப்பரேட்டுகளின் சதிகளை மறைக்கும் தந்திரமா? எனப் பல கேள்விகள் அரசியல் அவதானிகளிடையே எழுந்திருந்தன.

பல திசை திருப்பல்கள், காய் நகர்த்தல்களைத் தொடர்ந்து குவைத் மன்னர் ஷெய்க் ஸபாஹின் மத்தியஸ்த முயற்சிகளின் பலனாக சவூதி முன்வைத்த பத்து நிபந்தனைகளும் சவூதிக்கு எங்கு பிரச்சினை என்ற கோணத்தைத் தெளிவாக வெளிப்படுத்திக் காட்டியது. மிகத் தெளிவாக முஸ்லிம் சகோதரத்துவ உறுப்பினர்கள், ஹமாஸ் தலைமைகளை நாட்டை விட்டும் வெளியேற்றுவது, அத்தோடு அல்ஜஸீரா ஊடகத்தைத் தமக்கான ஊதுகுழலாக மாற்றுவது இவையிரண்டுமே சவூதியின் அந்தப் பத்துக் கட்டளைகளின் சாரம்.

மொத்தத்தில் இஸ்லாமிய எழுச்சியை முற்றாகக் காயடித்து விட வேண்டும் என்ற சியோனிஸ-அமெரிக்க பயங்கரப் பசியினை சவூதி தனது நாவுகளால் வெளிப்படுத்தியிருந்தது. குறிப்பாக ஷெய்க் யூஸுப் அல் கர்ளாவி, ஷெய்க் அலி ஸல்லாபி போன்ற பெரும் அறிஞர்களையும் தாஈக்களையும் உள்ளடக்கிய 59 இஸ்லாமிய ஆளுமைகளையும் கட்டாரை விட்டும் வெளியேற்றக் கோரியிருப்பது மேற்குலகுக்கும் சியோனிஸத்துக்கும் அரபு ஆட்சியாளர்கள் எந்தளவு முதுகு சொறிந்து கொண்டிருக்கின்றனர் என்பதற்கான சான்று.

இதையே நெட்டன்யாஹு குறித்த தினத்தில் வெளியிட்ட 'கட்டார் தனிமைப்படுத்தப்படுவதன் மூலமாக வளைகுடா நாடுகளுடனான எமது ஒத்துழைப்பு இன்னும் விசாலமடையப் போகின்றது' என்ற நச்சு அம்புகள் தடவிய கருத்துக்கள் சுட்டிக் காட்டுகின்றன.

இந்த இராஜதந்திர முறுகல்களைத் தொடர்ந்து வளைகுடாவில் கட்டார் மீதான அனுதாப அலைகள் அதிகரித்திருந்த நிலையில் சமூக ஊடகங்களூடாக அரபு மக்கள் தம் எண்ணங்களைப் பதிவுசெய்யத் தலைப்பட்டனர். Stand with Qatar போன்ற ஹேஷ்டெக்குகள் வெளிப்படத் தொடங்கின. எமிரேட்ஸ் அரசுகள் சமூக ஊடகங்களில் கட்டாருக்கு அனுதாபம் தெரிவிப்போருக்கு எதிராக சிறைத் தண்டனை மற்றும் பாரிய தொகை அபராதத்தினை அறிவித்து மீண்டும் தனது கோழைத் தனத்தை நிரூபித்தது.

சவூதி அரசின் கோமாளித்தனத்தின் உச்சமாக பாசிலோனா அணியின் டீ-ஷேர்ட்டுக்கள் அணியவும் அங்கு தடைவிதிக்கப்பட்டது. இதன் பின்னணி என்னவெனில், அவ்வணிக்கு அனுசரணை வழங்கும் கட்டார் ஏர்வைஸின் லோகோ அவ்வாடையில் இருப்பதே.

இவ்வாறான அறிவிப்புக்கள் மத்திய கிழக்கின் கார்ட்டூனிஸ்டுகளுக்கும் மீம்ஸ் கிரியேட்டர்களுக்கும் நிறையத் தீனியைப் போட்டிருந்தன. இதற்குத் தோதாக சவூதிய அரசின் எல்லா அசைவுகளுக்கும் அங்கிருக்கும் அரச அனுசரணை பெற்ற ஷெய்குமார்கள் பத்வாக்களையும் அள்ளிவீசிக் கொண்டிருந்தார்கள். இன்னொரு கட்டத்தில் வெளிவந்த 'உம்ராவுக்கென வருகை தரும் கட்டார் பிரஜைகளை மக்காவுக்குள் நுழைய அனுமதிப்பதில்லை' என்ற செய்திகளை சவூதி மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்தும் சவூதி, எமிரேட்ஸ் புறமிருந்து பாதகமான சமிக்ஞைகளும் கோமாளித்தனம் மிக்க அறிவிப்புக்களும் வந்து கொண்டிருந்த நிலையில் கட்டார் இவற்றை எதிர்கொள்ளத் தேர்ந்தெடுத்த அணுகுமுறைகள் வெகு ஸ்மார்ட்டான தோற்றத்தை அத்தேசத்துக்கு அளித்ததோடு சர்வதேச சமூகத்தின் மத்தியில் கட்டார் மீதான நன்மதிப்பையும் பல மடங்கு அதிகரித்திருந்தது.

நிகழ்வுகள் வெகு உக்கிரம் பெற்றுக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் கட்டார் தேச மக்களுக்கும் சமூக ஊடக பாவனையாளர்களுக்கும் அந்நாடு தெளிவான வேண்டுகோளொன்றை முன்வைத்திருந்தது. 'நிகழும் இராஜதந்திர முறுகல்களைக் காரணமாக வைத்து எவரும் குறிப்பிட்ட நாடுகளை தூற்றிப் பதிவிட வேண்டாம்' என்பதுதான் அந்த வேண்டுகோளாகும்.

அத்தோடு எமிரேட்ஸின் மொத்த எரிபொருள் மற்றும் மின்சக்தித் தேவையில் பாதிக்கும் மேற்பட்டதைப் பூர்த்தி செய்ய தனது நாட்டிலிருந்து செல்லும் 364 கிலோமீட்டர் நீளமான எரிபொருள் வழங்கும் குழாய்களைத் தடை செய்யவும் இல்லை. அவ்வாறு செய்திருப்பின் ஒரு நாளுக்குள் எமிரேட்ஸை ஸ்தம்பிக்க செய்து பழிக்குப் பழி அரசியலொன்றைச் செய்திருக்க முடியும்.

இதனை விடுத்து கட்டார் குறித்த நான்கு நாடுகள் மற்றும் நிகழும் இராஜதந்திர முறுகல் தொடர்பில் தனது தெளிந்த நிலைப்பாட்டைக் கூறி அனைத்து நாடுகளுடனும் பூச்சிய முரண்பாடுகளைக் கைக் கொள்வதன் பாலான தனது ஆர்வத்தையே வெளிப்படுத்தியிருந்தது.

கட்டுரை எழுதப்படும் வரைக்குமான தருணம் வரைக்கும் முறுகல் நிலையின் சூடு தணிந்திருந்தாலும் துண்டிக்கப்பட்ட இராஜதந்திர உறவுகளில் முன்னேற்றங்கள் இன்றியே இருக்கின்றது. குவைத்தின் மத்தியஸ்த முயற்சிகளோடு துருக்கி அதிபர் மேற்கொண்டு வரும் முயற்சிகளும் பிராந்திய அமைதி குறித்த நம்பிக்கைகளை விதைக்கின்றன.

சுன்னி முஸ்லிம் உலகுக்குள்ளால் யெமன் பிரச்சினையைத் தொடர்ந்து ஏற்பட்ட ஓர் இராணுவக் கூட்டு ஒத்துழைப்பை அறுத்துவிடும் மேற்கின் முயற்சிக்கு முதல் வெற்றி கிடைத்திருக்கிறது. சவூதி அமெரிக்காவின் அடிமையாக இருந்து தொடர்ந்தும் பிழையான முடிவுகளிலேயே பயணிக்க முயற்சிக்கும் காலமெல்லாம் அபாயத்தின் எல்லை அதிகரித்துக் கொண்டே செல்லும். இந்நிலை சுன்னி முஸ்லிம் நாடுகளுக்கிடையிலான இராணுவ மோதலொன்றாக உருமாற்றப்படுமாக இருந்தால் அந்த அழிவின் தன்மை கற்பனைக்கெட்டாத விகாரமான தோற்றமொன்றைத் தருகிறது.

சவூதி தனது பிழையான நிலைப்பாடுகளை விட்டும் மீண்டு சுன்னி முஸ்லிம் நாடுகளை ஒருங்கிணைக்கும் பணியை செய்வது ஒன்றே சமகாலத்தில் இந்த உம்மத்துக்குச் செய்யும் பாரிய பங்களிப்பாக இருக்கும். அப்பணி தனது மன்னராட்சியின் நலன்களைப் பேணிக் கொள்வதற்கும் அதனைப் பேணுவதற்கான கருவியாக வஹாபிஸத்தை கேடயமாகப் பயன்படுத்தும் அயோக்கியத்தனங்களுக்கு அப்பாலானது.

அப்பணி மன்னர் பைஸல் நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் 'ராபித்தத்துல் ஆலமில் இஸ்லாமி' போன்ற அமைப்புக்களூடாக முன்னெடுத்து வந்த தூர நோக்குடனான பணி. அப்பணி மன்னர் பைசலுக்குக் கொண்டு வந்தது போன்ற உயிர்த்தியாகத்தையும் உங்களிடம் கேட்கக் கூடியது. அப்பணி எமிரேட்ஸினதும் அமெரிக்காவினதும் சியோனிஸத்தினதும் நலன் பேணி உங்கள் மன்னராட்சியைப் பாதுகாப்பதற்கு அப்பால் மறுமையில் சுவனத்தில் உங்கள் இருப்புக்களைப் பாதுகாக்கக் கூடிய பணி என்பதையும் கூறிவைக்கிறோம்.



இறுதியாக இன்னுமொரு முறை கூறுகிறோம்; குழப்பகரமிக்க காலத்தில் சத்தியவாதிகளை எவ்வாறு இனங்கண்டுகொள்வது என இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களிடத்தில் வினவப்பட்ட போது 'எதிரிகளின் அம்புகளைப் பின்தொடர்ந்து செல்! அவை சத்தியவாதிகளை நோக்கிப் பாய்வதை நீ கண்டுகொள்வாய்' எனப் பதிலளித்தார்கள்.

எதிரிகளது அம்புகள் எங்கே பாய்ந்துகொண்டிருக்கின்றன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளுத்கம கலவரத்திற்கு 3 வருடங்கள்

அளுத்கம கலவரம் இடம்பெற்று இம்மாதத்துடன் 3 வருடங்கள் கழிகின்றன. இரு உயிர்களை பலியெடுத்து,11 பேரை காயத்துக் குள்ளாக்கி, பல கோடி பெறுமதியான சொத்துக்களை சேதப்படுத்திய கலவரத்தை தூண்டியவர்கள் யார் என்பது வெளிப்படையாகத் தெரிந்தும் சட்டம் இன்னும் அவர்களை தண்டிக்கவில்லை. பாதிக்கப்பட்ட மக்கள் பொலிஸ் நிலையங்களில் முன்வைத்த 48 இற்கும் அதிமான முறைப்பாடுகள் நிலுவையில் உள்ளன. நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்ட வழக்குகளுக்கான நியாயமான தீர்ப்பு அம்மக்களுக்கு கிடைத்ததா? அவ்வழக்குகளின் தற்போதைய நிலை என்ன? என்பது குறித்து சிரேஷ்ட சட்டத்தரணி சிராஸ் நூர்தீன் மீன்பார்வை பத்திரிகையோடு பகிர்ந்து கொண்ட கருத்துக்களை தொகுத்துத் தருகின்றோம்.

## சட்டமும் நீதியும் தாமதிப்பது சட்டமும் நீதியும் நிராகரிக்கப்படுவதற்கு சமன்

• சிராஸ் நூர்தீன்



ஞானசாரவின் தூண்டுதலாலேயே அளுத்கம கலவரம் மூண்டது என சிங்களவர்களும் முஸ்லிம்களும் களுத்துறை, பேருவல, அளுத்கம பொலிஸ் நிலையங்களில் 48 முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளார்கள். (பார்க்க அட்டவணை) அம்முறைப்பாடுகளுக்கமைய அம்மூன்று பொலிஸ் நிலையங்களிலும் ஞானசார தேரருக்கு எதிராக B ரிப்போட் தாக்கல் செய்யப்பட்டது.

2014ம் ஆண்டு 06ஆம் மாதம் 15- 19ம் திகதிக்கு இடையில் மேற்படி முறைப்பாடுகளுக்கான B ரிப்போட் தாக்கல் செய்யப்பட்டது. சகல B ரிப்போட்களிலும் சொத்துகள் அழிக்கப்பட்டதாகவும் உயிர் சேதம் ஏற்படுத்தப்பட்டதாகவும் அவற்றுக்கு காரணம் ஞானசார அளுத்கம நகரில் தெரிவித்த கடும்போக்குவாதக் கருத்துக்கள் எனவும் தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தது.

இது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் அது தொடர்பான அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்படும் எனவும் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்து வந்தார்கள். அதனைத் தொடர்ந்து இச்சம்பவம் தொடர்பில் எவரது கருத்துக்களும் பதிவுசெய்யப்படவில்லை. மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படவுமில்லை. சந்தேக நபர்கள் மன்றில் ஆஜர்படுத்தப்படவும் இல்லை.



அளுத்கம கலவரத்தில் இருவர் கொல்லப்பட்ட விவகாரம் தொடர்பில் களுத்துறை நீதவான் நீதிமன்றத்தில் B 150114 எனும் இலக்கத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அவ்வழக்கு விசாரணையில் ஆரம்பத்தில் அக்கொலைக்கான காரணம் வெட்டுக்காயம் எனக் கூறப்பட்டது. பின்னர் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் இது குறித்து அவதானம் செலுத்தியது. மிக விரிவான விசாரணையில் அக்கொலை தொடர்பில் மருத்துவ விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு 2014.09.11ஆம் திகதி கொலைக்கான காரணம் நவீன ரக ஆயுதத்தால் சுடப்பட்டதனாலேயே மரணம் சம்பவித்துள்ளதென பிரதான நீதவான் ஆயிஷா ஆப்தீன் அறிவித்தார்.

விசாரணையை துரிதமாக மேற்கொண்டு குறித்த சந்தேக நபர்களை கைது செய்து கோட்டில் ஆஜர்படுத்துமாறு அன்றைய தினம் பிரதான நீதவான் ஆயிஷா ஆப்தீன் கொழும்பு குற்றப்பிரிவுக்கு (Crime Division) உத்தரவு பிறப்பித்தார்.

அதனைத் தொடர்ந்து குற்றவாளிகளை அவசரமாகக் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு கோரி 2015.02.11 ஆம் திகதி வரையில் குறித்த வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. ஆனால் அன்றைய தினம் கொழும்பு குற்றப்பிரிவு அதிகாரிகள் மன்றில் ஆஜராகவில்லை. அதனால் குற்றப்பிரிவு OIC க்கு மன்றில் ஆஜராகுமாறு நீதவான் அறிவித்தல் விடுத்திருந்தார். (Notice Issue)

அதன் பிறகு அவ்வழக்கு 2015.04.02 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. அன்றைய தினமும் பொலீஸார் மன்றில் ஆஜராகவில்லை. குற்றப் பிரிவு பொறுப்பதிகாரிக்கு மன்றில் ஆஜராகுமாறு அன்றைய தினமும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தொடர்ந்து அன்றைய தினம் பகல் வேளையில் குறிப்பிட்ட பொலிஸார் நீதிமன்றத்திற்கு தாமதமாக வந்து தாமதத்திற்கான காரணங்களை குறிப்பிட்டு ஒரு ரிப்போட்டை பைல் பண்ணினார்கள். மீண்டும் அவ்வழக்கு 2015.06. 25ஆம் திகதிக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

அன்றைய தினம் நீதிமன்றில் ஆஜரான பொலீஸார், நாம் இச்சம்பவம் குறித்து அரசாங்க பகுப்பாய்வு திணைக்களத்தின் Government Analys Department அறிக்கையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டார்கள்.

அதனைத் தொடர்ந்து இவ்வழக்கு 2015.09.10ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. அன்றைய தினமும் அரசாங்க பகுப்பாய்வு திணைக்களத்தின் அறிக்கை கிடைக்கவில்லை என பொலிஸார் கூற வழக்கு 2015.10.06ம் திகதிக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. அன்றைய தினம் பொலீஸார் மன்றில் ஆஜராகவில்லை. அதனால் பொலீஸாருக்கு மன்றில் ஆஜராகுமாறு கோரி அறிவித்தல் கொடுக்கப்பட்டது. இவ்வகையில் இவ்வழக்கு ஒவ்வொரு காரணங்களுக்காக வேண்டி தள்ளுபடி செய்யப்பட்டு வந்தது.

இறுதியாக இவ்வழக்கு 2016.12.08 ஆம் திகதி நடைபெற்றது. அன்றைய தினமும் அரசாங்க பகுப்பாய்வு திணைக்கள அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கான காலக்கெடு பெறப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 2017.06.29ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. அரசாங்க பகுப்பாய்வு திணைக்கள அறிக்கைக்காக வேண்டி 06 மாத காலம் இழுத்தடிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 03ம் அத்தியாயம் 12(1)ம் பந்தியில் 'சட்டத்தின் முன் சகலரும் சமன். சட்டத்தின் பாதுகாப்பு சகலருக்கும் கிடைக்க வேண்டும்' என குறிப்பிடப்பட்டுள்ளது. 12(2)இல் 'எந்தவொரு பிரஜைக்கும் மதத்தையும் மொழியையும் காரணமாக வைத்து அவர்களுக்கு கிடைக்க வேண்டிய சலுகைகள் (நீதி) மறுக்கப்படக் கூடாது' என குறிப்பிடப்பட்டுள்ளது.



ஆனால் அளுத்கம விவகாரத்தில் முஸ்லிம்களுக்கான நீதி மறுக்கப்பட்டுள்ளது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் குற்றவாளிகளை விரைவாகப் பிடித்து மன்றில் ஆஜர்படுத்துமாறு நீதவான் உத்தரவிட்டும் பொலீஸார் அதனை முறையாக அமுல்படுத்தாமல் இதுவரைகாலமும் சாக்குப்போக்குச் சொல்லி இழுத்தடித்து வந்துள்ளார்கள். 3 வருடங்களாகியும் வெளிப்படையாக விளங்கும் அளவுக்கு ஒன்றும் செய்யப்படவில்லை.

### அளுத்கம கலவரத்தைத் தூண்டும் வகையிலான வெறுப்புப் பேச்சு தொடர்பான முறைப்பாடுகள்


| இல | குற்றவாளி | முறைப்பாட்டு இல. | முறைப்பாட்டாளர் | திகதி | தகவல் பதிவு செய்யப்பட்ட இல. (சந்தேக நபரிடமிருந்து வாக்குமூலம் செய்யப்படவில்லை) |
|---|---|---|---|---|---|
| 01 | ஞானசார தேரர் | GCR 150/14 | யு.டி.டில்ஷான் | 17.06.2014 | BR/1803/14 |
| 02 | ஞான்சார தேரர் | GCR/147/14 | எஸ்.ஐ.சகுந்தலா | 19.06.2014 | BR/1800/14 |
| 03 | ஞானசார தேரர் | GCR/146/14 | எம்.டீ.எம்.பயாஸ் | 19.06.2014 | BR/1799/14 |
| 04 | ஞானசார தேரர் | GCR/145/14 | ஏ.ஜே.ரிகாஸ்தீன் | 19.06.2014 | BR/1798/14 |
| 05 | ஞானசார தேரர | GCR/144/14; | ஏ.ஐ.நௌசாத் | 19.06.2014 | BR/1797/14 |
| 06 | ஞானசார தேரர் | GCR/143/14 | பி.ரனவீர | 15.06.2014 | BR/1796/14 |
| 07 | ஞானசார தேரர் | GCR/142/14 | எம்.ஆர்.முஹம்மத் | 19.06.2014 | BR/1795/14 |
| 08 | ஞானசார தேரர் | GCR/140/14 | ஏ.எம்.ஸவாஹிர் | 19.06.2014 | BR/1794/14 |
| 09 | ஞானசார தேரர் | GCR/139/14 | எம்.ஐ.சுல்பிகார் | 19.06.2014 | BR/1793/14 |
| 10 | ஞானசார தேரர் | GCR/137/14 | எம்.என்.சிம்தாத் | 19.06.2014 | BR/1791/14 |
| 11 | ஞானசார தேரர் | GCR/136/14 | எம்.ஜே. ரிகாஸ் | 19.06.2014 | BR/1790/14 |
| 12 | ஞானசார தேரர் | GCR/132/14 | எம்.ஜே.முனாஸ் | 19.06.2014 | BR/1786/14 |
| 13 | ஞானசார தேரர | GCR/125/14 | ஏ.பி.எஸ்.லூனா | 18.06.2014 | BR/1781/14 |
| 14 | ஞானசார தேரர் | GCR/124/14 | ஏ.எச்.ஜெஸ்மினா | 18.06.2014 | BR/1780/14 |
| 15 | ஞானசார தேரர் | GCR/123/14 | ஏ.பி.அஸாம் | 18.06.2014 | BR/1779/14 |
| 16 | ஞானசார தேரர் | GCR/121/14 | எம்.எஸ். நசீர் | 18.06.2014 | BR/1778/14 |
| 17 | ஞானசார தேரர் | GCR/120/14 | எம்.ஐ.உவைஸ் | 18.06.2014 | BR/1777/14 |
| 18 | ஞானசார தேரர் | GCR/119/14 | எம்.எஸ்.எம்.சரீம் | 18.06.2014 | BR/1776/14 |
| 19 | ஞானசார தேரர் | GCR/118/14 | எம்.எஸ்.முஜாஹித் | 18.06.2014 | BR/1775/14 |
| 20 | ஞானசார தேரர் | GCR/111/14 | எம்.எஸ்.ஆரிப் | 18.06.2014 | BR/1773/14 |
| 21 | ஞானசார தேரர் | GCR/110/14 | எம்.எஸ்.இன்சாம் | 18.06.2014 | BR/1772/14 |
| 22 | ஞானசார தேரர் | GCR/107/14 | எம்.எஸ்.ஏ.துபைல் | 18.06.2014 | BR/1769/14 |
| 23 | ஞானசார தேரர் | GCR/106/14 | ஏம்.ஜே.எம்.ஹில்மி | 18.06.2014 | BR/1768/14 |
| 24 | ஞானசார தேரர் | GCR/81/14 | எஸ்.டீ.வன்சலா | 17.06.2014 | BR/1618/14 |
| 25 | ஞானசார தேரர் | GCR/92/14 | எம்.எஸ்.பௌஸான் | 17.06.2014 | BR/1629/14 |
| 26 | ஞானசார தேரர் | GCR/78/14 | ஏ.கே.எம்.சஹாப்தீன் | 17.06.2014 | BR/1615/14 |
| 27 | ஞானசார தேரர் | GCR/91/14 | ஜீ.ஏ.ஹேமந்த | 17.06.2014 | BR/1628/14 |
| 28 | ஞானசார தேரர் | GCR/133/14 | என்.விக்ரமசூரிய | 19.06.2014 | BR/1787/14 |
| 29 | ஞானசார தேரர் | GCR/79/14 | என்.எம்.அஸ்மி | 15.06.2014 | BR/1616/14 |
| 30 | ஞானசார தேரர் | GCR/63/14 | ஏம்.ஜே.எச்.அன்மாஸ் | 14.06.2014 | BR/1600/14 |
| 31 | ஞானசார தேரர் | GCR/87/14 | ஏ.எச்.சா | 17.06.2014 | BR/1624/14 |
| 32 | ஞானசார தேரர் | GCR/77/14 | எச்.ஜே.எச்.முனவ்வர் | 17.06.2014 | BR/1614/14 |
| 33 | ஞானசார தேரர் | GCR/80/14 | எம்.நஸீர் | 17.06.2014 | BR/1617/14 |
| 34 | ஞானசார தேரர் | GCR/94/14 | ஏ.எஸ்.எம்.ராசிக் | 17.06.2014 | BR/1631/14 |
| 35 | ஞானசார தேரர | GCR/93/14 | எம்.எஸ்.ஹம்ஸான் சாலி | 17.06.2014 | BR/1630/14 |
| 36 | ஞானசார தேரர் | GCR/88/14 | ஏஸ்.எம்.அஸ்மி | 17.06.2014 | BR/1625/14 |
| 37 | ஞானசார தேரர் | GCR/130/14 | பி.வி.பதுர் | 19.06.2014 | BR/1785/14 |
| 38 | ஞானசார தேரர் | GCR/108/14 | எம்.ஜே.எம்.தாஜ் | 18.06.2014 | BR/1770/14 |
| 39 | ஞானசார தேரர் | GCR/105/14 | எம்.ஆர்.எம்.நபீன் | 18.06.2014 | BR/1767/14 |
| 40 | ஞானசார தேரர் | GCR/138/14 | ஏம்.எஸ்.எம்.சித்தீக் | 19.06.2014 | BR/1792/14 |
| 41 | ஞானசார தேரர் | GCR/135/14 | ஏ.எம்.அஸ்லம் | 19.06.2014 | BR/1789/14 |
| 42 | ஞானசார தேரர் | GCR/134/14 | ஏ.ஹூசைன்தீன் | 19.06.2014 | BR/1788/14 |
| 43 | ஞானசார தேரர் | GCR/85/14 | கே.எச்.பீரிஸ் | 17.06.2014 | BR/1622/14 |
| 44 | ஞானசார தேரர் | GCR/109/14 | எம்.எஸ்.பஸார் | 18.06.2014 | BR/1771/14 |
| 45 | ஞானசார தேரர் | GCR/90/14 | எம்.என்.நஸ்லான் | 18.06.2014 | BR/1627/14 |
| 46 | ஞானசார தேரர் | GCR/148/14 | வி.எஸ்.எஸ்.சுரன்கி | [illegible] | BR/1801/14 |
| 47 | ஞானசார தேரர் | GCR/129/14 | எம்.பைசல் | [illegible] | BR/1784/14 |
| 48 | ஞானசார தேரர் | GCR/128/14 | எப்.எச்.எச்.ஹலா | 18.06.2014 | BR/1783/14 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எனக்குத் தேவையானதை நானே கண்டுபிடிக்கின்றேன்"

பர்ஹான் முஸம்மில்





• அனஸ் அப்பாஸ்

1976 இல் நீர்கொழும்பு, பலஹத் துறையில் பிறந்த பர்ஹான் முஸம்மில், உயர்தரம் வரை கற்று நீர்/அல்–பலாஹ் மகா வித்தியாலயத்தில் இருந்து பல்கலைக்கழகம் தெரிவானார். போதிய வழிகாட்டல் இன்மை, குடும்ப சூழ்நிலைகள் காரணமாக பல்கலைக்கழக உள்நுழைவுக்கான அனுமதி கிடைத்தும் அவர் செல்லவில்லை.

''எனக்கு "Image Printers" நிறுவனத்தில் பணியாற்ற சந்தர்ப்பம் கிடைத்தது. இதன் பின்னர் அச்சிடல் (Printing) துறையிலேயே எனது தொழில் அமைந்தது. ஏக காலத்தில் கணினியில் வேலை செய்யும் வாய்ப்பு அந்த நிறுவனத்தில் கிடைத்ததால் கணனித் துறையில் எனது ஆர்வம் அதிகரித்தது.

அது தொடர்பில் கற்கத் தொடங்கினேன். எமது ஊரிலேயே இயங்கக் கூடிய முதல் கணணி என்னிடம்தான் இருந்தது. நிறைய பழுதுபார்த்தல் வேலைகள், உதிரிப்பாக மாற்ற வேலைகள் என அதில் நானே செய்தேன். இந்த ஆர்வத்தினால் கணினி பொறுப்பாளராக நிறுவனமொன்றில் பணியாற்ற சந்தர்ப்பம் கிடைத்தது. அங்கிருந்து கிராபிக்ஸ் துறையில் கற்கும் ஆர்வம் அதிகரித்தது. கிராபிக்ஸ் கற்கையும் பூர்த்தி செய்தேன். பின்னர் ஊரில் ஒரு Communication ஐ ஆரம்பித்தேன். அச்சிடல் வேலைகளையும் செய்தேன்.

தொழில்நுட்ப முன்னேற்றத்தால் தொடர்பாடல் இலகுவானது. கையடக்கமானது. ஆகவே, Communication இற்குரிய தொடர்பாடல் தேவை அருகியது. பின்னர் திருமண பந்தத்தில் இணைந்தேன். வெளிநாடு சென்றும், அச்சிடல் துறையே கைகொடுத்தது. உள்நாட்டுக் திரும்பி ''நோலிமிட்'' இல் பணிபுரிந்தேன். அதுவும் திருப்தி தரவில்லை. மீண்டும் வெளிநாடு பயணமானேன். ஒன்றரை வருடத்தில் நாடு திரும்பி, எமதூரை சேர்ந்த தனவந்தரான 'நளீர் ஹாஜியார்' அவர்களின் மூக்குக் கண்ணாடி (Spectacles) விற்பனை நிலையத்தில் பணியாற்றினேன். அங்கிருக்கும்போது பழுதாகும் Frame பாகங்களை திருத்துவதற்கு கொழும்பில் உள்ள ஒரு மாற்றுமத சகோதரருக்கு வழங்கினோம். அவருக்கு பெரிதும் கேள்வி (Demand) இருந்தது. தேசிய ரீதியாக மிகவும் அரிய வேலை ஒன்றாக அது இருப்பதை உணர்ந்தேன்.

அதைக் கற்பதற்கான நேரடி மூலங்கள் இருக்கவுமில்லை. சரி, இதை ஏன் நான் கற்கக் கூடாது எனத் தோன்றியது. நிறைய தேடினேன். இணையமும் உதவியது. இன்று வரை வீட்டிலிருந்து மூக்குக் கண்ணாடி பழுதுபார்த்தல் வேலைகள் செய்கின்றேன். அல்ஹம்துலில்லாஹ், நகரிலுள்ள கடைகளில் 75% இற்கும் மேற்பட்ட கடைகளின் திருத்தல் வேலைகளை எனக்கே கொடுக்கின்றார்கள்'' என்கிறார் பர்ஹான்.

ஒரு இலத்திரனியல் நிபுணராக வரக் கூடிய அத்தனை அத்தாட்சிகளையும் இவரது இல்லத்திலுள்ள அவரது குட்டி அலுவலகத்தில் நான் கண்டேன். சிறு வயது முதலே திருத்தல் வேலைகளிலும், தேடலிலும் அதீத ஆர்வமுடைய பர்ஹான் முஸம்மிலின் வீட்டின் கட்டுமானம், சுய தொழில் கருவிகள் முதல் வீட்டு இலத்திரனியல் உபகரணங்கள் வரை பெரும்பாலும் அவரது சொந்த தயாரிப்பாகவே இருக்கின்றது. சிலதை மட்டும் இங்கு பட்டியலிடுகின்றேன்.

- Bike Stand போட்டிருக்கும் நிலையில் மோட்டார் சைக்கிள் Start ஆகாமல் இருக்க ஒளி சமிக்ஞை அலாரம்.
- நீர்த்தொட்டி நிறைகின்ற அளவுக்கேற்ப ஒளிரும் மின் விளக்கு சமிக்ஞை தொகுதி. (இவரது வீடு அமைந்திருக்கும் பகுதியில் இரவோடிரவாக மழை வெள்ளம் வரும் என்பதால் இப்பொழுது அந்தக் கருவியை வெள்ள நீர் வரும் பகுதியில் வைத்துள்ளதால் அவசர நிலையில் அலர்ட் ஆகி விடுகின்றனர் அப்பகுதி மக்கள்)
- உலை அடுப்பு (Oven) மூலமான Welding செய்யும் கருவி.
- (பகுதிநேர தொழிலாக) களவுகளை குறைக்கும் சென்சார் அலாரம் கருவி தயாரித்தும் வருகின்றார்.
- UPS மூலமான 3 in 1 இயந்திரம். (Mobile Charger, Flash Light, Soldering machine)
- சூரிய ஒளி மூலமான மின்சார உற்பத்திக் கருவி.
- இது தவிரவும் ஒரு அறை முழுதுமே சுய தயாரிப்புக்களை நிறைந்து வைத்துள்ளார்.

''பொருளாதார சிக்கனத்தை மேற்கொள்ளவே நான் சுய தயாரிப்புக்களில் ஈடுபட்டேன். இதனால் எனக்குத் தேவையானதை நானே தயாரிக்கின்றேன். உறவினர்கள், அயலவர்கள் என பொருள் பழுதுபார்ப்பதற்காக நான் அனுபவமே இல்லாத கருவிகளை எல்லாம் எடுத்து வருவதுண்டு. இறைவன் அருளால் நான் அதை எப்படியாவது திருத்திக் கொடுக்கின்றேன்'' என்கிறார் அவர்.

''தரம்–6 ஐ சேர்ந்த இளம் கண்டுபிடிப்பாளர் ஒருவரின் சாதனை குறித்து மீள்பார்வை மூலம் அறிந்தேன். தேசிய நலன் கருதிய அவ்வாறான இளம் கண்டுபிடிப்பாளர்களை நான் மிகவும் பாராட்டுகின்றேன். சமூகம் வேண்டி நிற்பதும் அதைத்தான். தேசிய நலனுக்கான, சமூக மேம்பாட்டுக்கான பாரியதொரு சாதனையை நானும் எனது வேலைப் பழுக்களுக்கு மத்தியில் நிலைநிறுத்த வேண்டும் என்பதே எனது பேரவா. ஆலோசனைகள் சொன்னால் எனது பங்களிப்பை தேசத்துக்காக நான் செய்யத் தயார்.'' 6 ஆம் தர பிள்ளையொன்றின் தந்தையான பர்ஹான் முஸம்மில் அப்படித்தான் சொன்னார்.

வீட்டு பொருளாதார நிலமைகளால் தன்னால் ஒரு தொழில்சார் நிபுணராக வர முடியாமல் போனாலும், தனது தம்பி முஹம்மத் சப்ரியை ஒரு கணினி மென்பொருளாளராக உருவாக்க பங்களிக்க முடிந்த சந்தோஷத்தில் இருக்கின்றார். எளிமையான தோற்றமும் இளமை ததும்பும் உடற் கட்டுடனும் இருக்கும் பர்ஹான் முஸம்மில்.

# அடுத்த நோன்புக்கு 90 வீத முஸ்லிம்கள் பிச்சையெடுப்பர்

• இஸ்ஸதீன் றிழ்வான்

குளிப்பாட்டுங்கள், கவனிடுங்கள், அடக்கம் செய்யுங்கள், நாளைக்கு மற்றதை பார்க்கலாம் என்று புதிது புதிதாக முஸ்லிம் கடைகளை தீ வைத்து பின் நல்லடக்கம் செய்துகொண்டிருக்கிறது இனவாதம். 'யஹபாலனய' என்ற பெயரில் எம்மை வழிமறித்து ஏமாற்றி ஆட்சியை பிடித்து வடிகட்ட முடிவெடுத்து விட்டார்கள்.

இனவாதத்தையும் ஊழலையும் விரட்டியடிக்கவே கடந்த மஹிந்த அரசை வீழ்த்தியதாக மேடை முழுதும் வீர வசனம் பேசி வருகிறோம். ஆனால் அது உண்மையாக இருக்கும் என்று நான் நம்பவில்லை.

'யஹபாலனய' என்ற நல்லாட்சி கம்பனியின் பாட்டனார்களாகிய முன்னால் ஜனாதிபதி, இந்நாள் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்களான ராஜித சேனாரதன, பாடாலி சம்பிக்க போன்றோர் இந்த இனவாத மறுபிரவேசம் குறித்து கவனம் செலுத்தாது வேறு சில விடயங்கள் பக்கம் மக்களை திசைதிருப்புவது ஏதோ புதிய அர்த்தத்தைத் தருகிறது.

தினம் ஒரு கடை என்ற விகிதத்தில் முஸ்லிம்களின் கடைகளை பட்டியலிட்டு நல்ல நாள் பார்த்து தீ வைத்தல் என்பது மிக சுருங்கிய நாட்களுக்குள் முஸ்லிம்களின் பொருளாதாரத்தில் ச்ரிவை ஏற்படுத்தி அடுத்த ரமழானுக்கு பிச்சைப் பாத்திரம் ஏந்தும் நிலையை உண்டுபண்ணுவதற்கே என்பது தான் அர்த்தமோ...?

முழுக்க முழுக்க முஸ்லிம் அரசியல்வாதிகளை மட்டும் குறை கூறி விமர்சிக்கின்ற தொழிலையே முழுநேர தொழிலாகச் செய்துவருகிறோம்.

ஆளும் அரசியல் கட்சியில் அங்கம் வகிக்கும் அரசியல்வாதிகளுக்கு அரசை விமர்சிக்க ஒரு எல்லை இருக்கிறது. அது தாண்டினால் அவர்களின் கதிரை பரிபோகும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதனால் நமது அரசியல்வாதிகளை முழுமையாக நம்பக் கூடாது.

சமூகத்தில் இயங்குகின்ற பல ஜமாஅத்துக்கள் இனவாதிகளின் எல்லை மீறிய செயற்பாடுகள் பற்றி வாய்மூடி இருக்கிறார்கள்; இருப்பார்கள். அதனால் நமது ஜமாஅத்துக்களை முழுமையாக நம்பக் கூடாது.

பாராளுமன்றத்தில் முன்வரிசையில் அமர்ந்து எல்லா வாதத்திற்கும் கருத்துச் சொல்லி, பதிலளித்து வந்த பிரதமரை அண்மைக் காலமாக காணமுடியவில்லையே... எங்கே? இவரை நம்பி எப்படி நமது உரிமை, பாதுகாப்பு, சுதந்திரம் பற்றிப் பேச முடியும்...?

நாம் ஒவ்வொருவரும் தனித்து நின்று எவ்வாறு இவனாதத்திற்கு எதிரான செயற்பட முடியும் என்பதைப் பற்றியே சிந்திக்க வேண்டும். முஸ்லிம்கள் எக்காலத்திலும் ஒன்றுபட மாட்டார்கள் என்பதையும் நாம் புரிந்து செயற்பட வேண்டும்.

முஸ்லிம்களாகிய நாம் ஓர் ஆளுமையின் கீழ் ஒன்றுபடுவோன் என்றால், அமைச்சர் ரவூப் ஹகீமின் ஆதரவாளர்கள் அவரின் தலைமைத்துவத்தையே வேண்டி நிற்பர். அமைச்சர் ரிஷாத் பதியூதினின் ஆதரவாளர்கள் அவரின் தலைமைத்துவத்தையே வேண்டி நிற்பர். ஜமாஅத் ஆதரவாளர்கள் அதன் அமீரையே தலைவராக ஏற்கும்படி ஒற்றைக் காலில் நிற்பர். அப்படி என்றால் எப்படி ஒரே தலைமைத்துவம் சாத்தியமாகும்..?

முஸ்லிம்களின் இந்த வீக்னஸை எதிரிகள் சரியான புரிந்து வைத்துத்தான் எம்மை சூரையாடி கூறுபோட முடிவெடுத்துள்ளனர் என்பதையை கால தாமதமாகவேயாவது ஏற்றுக்கொள்ளுங்கள்.

தினம் ஒரு கடை, வாரம் ஒரு பள்ளி என்று தீ வைத்தால் அடுத்த றமழானில் 90 வீதமான முஸ்லிம்கள் பிச்சை எடுக்க வேண்டிவரும் என்பதை ஏற்றுக் கொள்ளுங்கள்.

அல்லாஹ் போதுமானவன்.

# இழப்புகளின் பின்னரான திட்டமிடலில் எந்தப் பயனும் கிடையாது

• அபு அரிய்யா

நாட்டில் கடந்த சில வருடங்களாக முஸ்லிம்களை இலக்கு வைத்து ஒரு சில தீய சக்திகளினால் மேற்கொள்ளப் பட்டு வரும் தீவிர இனவாதப் பிரச்சாரமானது சூடுபிடித்து, தற்போது விஸ்வரூபம் அடைந்து வருவதை அவதானிக்க முடிகிறது. பல்லின சமூகக் கட்டமைப்பைக் கொண்டுள்ள இலங்கையைப் போன்ற நாட்டிலே குடிமக்களின் இன நல்லுறவையும் சகவாழ்வையும் பாதிக்கும் வகையில் தற்போது இடம்பெறுகின்ற இது போன்ற இனவாதச் செயற்பாடுகள் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

இலங்கையில் கடந்த 30 வருடகாலமாக தொடர்ந்திருந்த யுத்த சூழலானது படுமோசமான அகோர விளைவுகளையே இந்த நாட்டில் விட்டுச் சென்றுள்ளன. தற்போது மக்கள் அச்சூழலிலிருந்தும் பாதுகாக்கப்பட்டு ஓரளவான நிம்மதிக் காற்றை சுவாசிக்க முற்பட்டிருக்கிறார்கள். இத்தருணத்திலேயே முஸ்லிம் சமூகத்தை இலக்கு வைத்து அவர்களுடைய மத, கலாசார, பண்பாட்டு விடயங்களில் வலிந்து மூக்கு நுழைக்கும் அத்துமீறல்களை சில இனவாதிகள் திட்டமிட்டு அரங்கேற்றி வருகிறார்கள்.

தொன்று தொட்டு இற்றை வரை இன நல்லுறவைப் பேணி ஒரு நாட்டு குடிமக்களாக வாழ்ந்து வரும் முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையே பகையுணர்வையும் பிரிவினையையும் ஏற்படுத்தும் நோக்கில் பொது பல சேனா போன்ற இனவாத இயக்கத்தினர் மிகத் தீவிரமாக செயற்பட்டு வருகின்றனர். இவர்களினுடைய செயற்பாடுகள் ஒரு இனத்தின் சுதந்திரமான கலாசார பின்பற்றுதலுக்கு ஊறு விளைவிப்பனவாகும்.

பள்ளிவாசல் அமையப் பெற்றலில் முரண்பாடு, முஸ்லிம் மத்ரஸாக்கள் பற்றிய தப்பபிப்பிராயம், இஸ்லாமிய அமைப்புக்களை தீவிரவாதிகளாகப் பார்த்தல், குர்பானி விவகாரத்தை மிருகவதை என்று குற்றம் சாட்டுதல், ஹலால் சான்றிதழுக்கெதிரான கருத்துக்கள், முஸ்லிம் பெண்களின் ஹிஜாப் ஆடையை அடக்குமுறையாகக் கருதுதல் என தொடர்ந்த இனவாதப் பிரச்சாரம் நாட்டில் முஸ்லிம்களுக்கு மத்தியிலே பாரிய பீதியை ஏற்படுத்தியுள்ளது.

இது வெறும் பிரச்சாரத்துக்கப்பால் முஸ்லிம்களை அச்சுறுத்தும் விதமான ஆர்ப்பாட்டங்களும், பள்ளி உடைப்புகளும், நில ஆக்கிரமிப்புகளும், அச்சமூட்டும் சுவரொட்டிகளும் மாநாடுகளும் தற்போது நாட்டின் பல பாகங்களிலும் புற்று நோயைப் போல் பரவி வருகிறது. இச்செயற்பாடானது கடந்த அரசாங்கத்தின் காலத்தில் இடம்பெற்றதைப் போலவே நல்லாட்சி எனும் பெயரைச் சுமந்த தற்போதைய அரசாங்கத்தின் காலத்திலும் தொடர்கிறது.

பல்லின சமூகம் வாழும் ஒரு நாட்டில் அதற்கிடையே குரோதம், வெறுப்புணர்வு, ஆதிக்க மனோநிலை, இன வாதம் போன்ற பண்புகள் வளர முடியாது. ஏனெனில், அவை நாட்டின் அமைதிக்கும் அபிவிருத்திக்கும் குந்தகம் ஏற்படுத்தும் செயற்பாடுகளாகும். ஆனாலும் இவ்வாறான நிகழ்வுகள் தோற்றம் பெறாமல் நாட்டை வழிநடாத்துவது ஆட்சியாளர்களின் பொறுப்பாகும் என்ற வகையில் தற்போதைய அரசாங்கம் இது குறித்து கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென்பது முஸ்லிம் சமூகத்தின் எதிர்பார்ப்பாகும்.

அது போல் ஒரு குழுவினரின் செயற்பாடு மொத்த சமூகத்தின் எண்ணமாக அமைய முடியாது என்ற வகையில், சகோதர சிங்கள மக்கள், ஒருபோதும் முஸ்லிம் சமூகத்தின் எதிரிகளல்லர். மாறாக குறித்த நிகழ்வோடு யார் தொடர்புடையவர்களோ அவர்கள் மாத்திரமே கண்டிக்கப்படவும், சட்டத்தின் முன் நிறுத்தப்படவும் வேண்டியவர்கள்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரையில், எப்போதும் போல் நாட்டின் அமைதிக்கும் பிற சமூகத்தின் உணர்வுகளுக்கும் மதிப்பளித்து செயற்படுவதோடு, தொடர்ந்தும் இஸ்லாமிய வரையறைகளைப் பேணி தீர்மானம் எடுக்கும் பண்பை வளர்த்துக்கொள்வதுதான் முன்மாதிரியுள்ள சமூகத்தின் அடையாளமாக இருக்க முடியும்.

எனவே இவ்வாறான சூழ்நிலைகளில் மக்களை நேரிய பாதையின்பால் வழிநடாத்திச் செல்லும் பாரிய பொறுப்பை நாட்டின் அனைத்துப் பாகங்களிலுமுள்ள தலைமைத்துவங்கள் சுமந்து கொள்வதோடு நிதானமாகவும், அறிவுபூர்வமாகவும் தமது செயற்பாடுகளை அமைத்துக் கொள்வது சிறந்ததாகும்.

பொறுமையோடிருத்தல், குனூத் ஓதப் பணித்தல், திக்ர் செய்தல் போன்ற ஆன்மீக கட்டளைகளை நிறைவேற்றுமாறு பணித்தலோடு, தமது கடமைகளை நிறைவேற்றி விட்டதாக சமூகத்தின் பொறுப்பு வாய்ந்த தலைமைகள் எண்ணிவிடக்கூடாது.

அதற்கப்பால் எமது சமூகத்தினது இருப்புக்கும் பாதுகாப்புக்கும் பாரிய அச்சுறுத்தலாக அமையப் பெறுகின்ற இவ்வாறான இனவாதக் கும்பல்களின் நடத்தைகளிலிருந்து நாட்டையும் சமூகத்தையும் விடுவிப்பதற்கான ஆரோக்கியமான செயற்திட்டங்களை வகுத்துச் செயற்படுவது சமூகத் தலைமைகள் மீதான தார்மீகக் கடமையாகும்.

இதற்காக எமது நாட்டிலுள்ள சமூகத் தலைமைகள் நாடு தழுவிய முஸ்லிம் சிவில் அமைப்புக்களை இணைத்து எமது அரசியல் சக்திகளைப் பலமாக்கிக் கொண்டு செயற்பட வேண்டிய காலத்தின் தேவை நம் மீது இருக்கிறது.

எப்போதும் நாம் சிக்கல் நிறைந்த பிரச்சினையொன்றின் தோற்றத்தின் பின்னர்தான் அதற்கான தீர்வு குறித்த வழிமுறைகளைத் தேட முற்படுகின்றோம். இது தவறான சிந்தனையாகும். இழப்புகளின் பின்னரான திட்டமிடலில் எந்தப் பயனும் கிடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• அஷ்ஷெய்க் அக்ரம்
அப்துல் ஸமத் (நளீமி)

# ரமழானின் இறுதி நாட்களும் ரமழானுக்குப் பின்னரும்

### கடைசிப் பத்து எப்படி இருக்க வேண்டும்?

நபியவர்கள் கூறினார்கள் ''செயல்கள் அதனுடைய இறுதி நிலையை வைத்தே தீர்மானிக்கப்படுகின்றன'' (புகாரி).

இந்த ஹதீஸ் எமக்கு சொல்லும் செய்தி என்ன? எமது எந்தச் செயலாக இருந்தாலும் அதன் ஆரம்பம் முதல் இறுதி வரை எந்தவித சோர்வும் தளர்வும் இன்றி நடைபெறல் வேண்டும்.. ஒன்றை ஆரம்பிக்கும்போது காணப்படும் உற்சாகம் இறுதியில் குன்றி விடவோ அற்றுப் போய்விடவோ கூடாது.

இது குறித்த ஒரு செயலுக்கு மாத்திரமான ஒரு விதியல்ல, முழு மனித வாழ்வுக்கும் கூட இந்த விதி பொருந்துகிறது என்பதைத்தான் நபியவர்களது கீழ்வரும் துஆ எங்களுக்குச் சொல்கிறது.


''யா அல்லாஹ் எனது ஆயுளின் சிறந்த காலமாக அதன் இறுதிப் பகுதியை ஆக்கி விடு! எனது செயல்களின் சிறந்த பகுதியாக அதன் கடைசியை அமைத்துவிடு! எனது வாழ்நாளின் சிறந்த நாட்களாக உன்னை நான் சந்திக்கும் நாட்களை அமைத்து விடு!'' என்றார்கள். (இப்னுஸ் ஸுன்னி)

எமது வாழ்வின் எந்தக் கட்டத்திலும், எமது செயற்பாடுகளின் எந்த இடத்திலும் நாம் நம்பிக்கையிழந்து விடக் கூடாது. ஒரு செயலின் சரி பிழையை இடைநடுவில் தீர்மானிப்பதை விடவும், முழுமையாக நிறைவேற்றியதன் பின்னர் அதன் சரி பிழைகள் பற்றிப் பேசுவது மிகவும் பொருத்தமாக இருக்கும்.

இது தொடர்ந்த உழைப்பை வலியுறுத்துகிறது. இறுதிவரை நம்பிக்கை யிழக்காமையையும் கைவிடாமையையும் போதிக்கிறது. இந்த உண்மைகளே ரமழானிலும் வலியுறுத்தப்படுகின்றன. ரமழானின் இருபத்தி ஏழாம் இரவு கடந்து விட்டால் ரமழானே முடிந்து விட்டது என்பது போன்ற மன நிலைக்கு பலர் வந்து விடுகிறார்கள். அது தவறானது என்பதை மேற்சொன்ன ஹதீஸ்கள் குறிக்கின்றன.

மாத்திரமன்றி, மற்றொரு ஹதீஸ் குறிப்பாக இவ்வாறு சொல்கிறது; ''ரமழானின் கடைசி இரவில் லைலதுல் கத்ரை எதிர்பாருங்கள்'' என்று நபியவர்கள் கூறியுள்ளார்கள். (ஸஹீஹுல் ஜாமிஃ - அல்பானி)

எனவே ரமழானின் இறுதி நாள் வரை நாம் ஓய்ந்து விடக்கூடாது. அல்லாஹுதஆலா ஒரு செயலின் சிறப்பை அதன் கடைசித் தருணம் வரையில் வைத்திருக்கிறான். இதன் காரணமாகத் தான் உமர் இப்னு அப்துல் அஸீஸ் அவர்கள் தனது ஆட்சிக் காலத்தில் எல்லா நகரங்களுக்கும் ரமழானை இஃதிபாரின் மூலமும் ஸதகாவின் மூலமும் நிறைவு செய்யுமாறு கட்டளை அனுப்புவார்கள்.



மேலும் ஆதம் (அலை) அவர்கள் கேட்ட துஆவையும் (அஃராப்: 23) நூஹ் (அலை) அவர்கள் கேட்ட துஆவையும் (ஹூத்: 47) இப்றாகீம் (அலை) அவர்கள் கேட்ட துஆவையும் (ஷுஅரா: 82) மூஸா (அலை) அவர்கள் கேட்ட துஆவையும் (கஸஸ்: 16) துந்நூன் கேட்ட துஆவையும் (அன்பியா: 87) அந்நாட்களில் கேளுங்கள் என்றும் கேட்டுக் கொண்டார்கள்.

எனவே, ரமழானின் கடைசி நிமிடம் வரையில் தளர்வின்றி உச்சபட்ச உற்சாகத்துடன் அதனைப் பயன்படுத்த உறுதி கொள்வோம்.

### ரமழான் முற்றுப் புள்ளியல்ல.

அலி (ரழி) அவர்கள் கூறியுள்ளார்கள்: ஒரு செயலை நல்ல முறையில் செய்வதில் அதிக கவனம் செலுத்துவது போல், அது ஏற்றுக் கொள்ளப்படுமா? என்பதில் அதை விடவும் கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹுதஆலா கூறுவதைக் கேட்கவில்லையா? ''அல்லாஹுதஆலா தக்வா உள்ளவர்களிடமிருந்தே செயல்களை ஏற்கிறான்.'' (மாயிதா: 27).

எனவே ஒரு செயலை சம்பூரணமாக நிறைவேற்றுதல் என்பது ஒரு விடயம். அது ஏற்றுக் கொள்ளப்படுதல் என்பது மற்றொரு விடயம். அல்லாஹுதஆலா ஒருவனது செயல்களை ஏற்றுக் கொண்டு விட்டானா? இல்லையா? என்பது மனித அறிவால் தீர்மானிக்க முடியாத ஒரு விடயம் என்றிருந்தாலும் அதன் குறைந்தபட்ச ஒரு அடையாளமாக அந்த செயலின் ஊடாக பெற்றுக் கொண்ட தர்பியத், பெற்றுக்கொண்ட பயன் ஒருவனிடத்தில் நீண்டு நிலைத்திருக்கும் எனின், அது அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது என்று பொருள்.

இக்கருத்து புலப்படும் வகையிலேயே நபியவர்கள் இவ்வாறு கூறினார்கள். ''அறிந்து கொள்ளுங்கள் உங்களுடைய செயல்கள் மாத்திரம் உங்களை சுவர்க்கத்திற்கு எடுத்துச் செல்வதில்லை. அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான செயல் அது குறைவாக இருந்தாலும் தொடர்ந்தேர்ச்சியாக செய்து வருவதாகும்'' என்றார்கள். (புஹாரி)

எனவே ரமழானில் எடுத்துக் கொண்ட பயிற்சிகள், பெற்றுக் கொண்ட பயன்கள், அவை பண்புகளில் ஏற்பட்ட மாற்றங்களாக இருக்கலாம், நடத்தைகளில் ஏற்பட்ட மாற்றங்களாக இருக்கலாம், இபாதத்களில் ஏற்பட்ட அதிகரிப்பாக இருக்கலாம். இவை ரமழானுக் குப் பின்னர் முற்றுப் பெற்று விடக்கூடாது.

மேற்கூறிய ஹதீஸ் கூறும் கருத்துப் படி வெறுமனே ஒரு செயல் மாத்திரம் அல்லது ஒரு சந்தர்ப்பத்தின் செயல் மாத்திரம் எம்மை சுவர்க்கத்திற்கு எடுத்துச் செல்லப் போதுமானதல்ல. மாற்றமாக அவை ஒரு தொடர் பழக்கமாக, தொடர் நடத்தையாக எங்களிடத்தில் மாற்றம் காணுகின்ற பொழுதே நாம் சுவர்க்கத்திற்குத் தகுதியானவர்களாக மாறுகிறோம்.

எனவே ரமழான் தொடக்கி வைத்திருக்கிறது. அவை தொடரும் வண்ணம் நன்கு பயிற்றுவிக்கப்பட்டும் இருக்கின்றன. ஏனைய காலங்களில் அவை அன்றாட வாழ்வின் நிகழ்வுகளாக மாற வேண்டும். இல்லாவிட்டால் அது அர்த்தமற்றது என்பதை மக்காவில் வாழ்ந்த ரைதா பின்த் ஸஃத் என்ற ஒரு பெண்ணின் செயலை உதாரணமாகக் குறிப்பிட்டு அல்குர்ஆன் சொல்லிக் காட்டுகிறது.

''தனது பின்னல்களை மிகவும் பலமாகப் பின்னியதன் பின்னர் தானே அவற்றை அவிழ்த்துப் போடும் அந்தப் பெண்ணை போல் நீங்களும் இருந்துவிடாதீர்கள்.'' (நஹ்ல்: 92)

ஒரு பலமான நிலையை அடைந்து கொள்ளும்போது அதனைத் தொடர்ந்து கொண்டு செல்லுதல் அல்லது அதனை விடவும் மேலே செல்லுதல் என்பது தான் சாதாரண மனிதப் பகுத்தறிவு ஏற்றுக் கொள்ளும் உண்மை. இதனை விடுத்து பலப்படுகின்ற சந்தர்ப்பங்களில் எல்லாம் தான் கட்டியதை தானே உடைத்து மீண்டும் பூச்சியத்தில் இருந்து செல்ல நினைப்பது என்பது எவ்வளவு பெரிய முட்டாள்தனம் என்பதையே இந்த வசனம் குறிப்பிடுகிறது.

இக்கருத்து ரமழானுக்கும் மிகவும் பொருந்துகிறது. ரமழான் எங்களுக்கு மிகப்பெரிய ஒரு தர்பிய்யத். எங்களது ஆன்மாவை அது பலப்படுத்துகிறது. அல்லாஹ்வுடனான நெருக்கத்தைப் பலப்படுத்துகிறது. எங்களது செயல்களைப் பலப்படுத்துகிறது. எமது உள்ளார்ந்த சக்தியைப் பலப்படுத்துகிறது. எம்மில் எத்தனையோ நல்ல பழக்கங்களை உருவாக்குகிறது. எத்தனையோ இபாதத்களை விதைக்கிறது. இவை அனைத்தும் மிகப் பெரிய பலங்கள். ரமழானுக்குப் பிந்திய நாட்களில் இவற்றை அஸ்திவாரமாகக் கொண்டு தான் நாம் கட்டடம் அமைக்கப் போகிறோம்.

இப்பொழுது ஒருவன் அந்த அஸ்திவாரத்தையே சிதைத்து விடுகிறான் என்றால் அவன் எத்தகையவன்? இந்தத் தவறை நாம் ரமழானிற்குப் பின்னர் செய்யக் கூடாது. ரமழானில் பெற்ற பயிற்சிகள் பயனற்றுப் போகின்றன என்றால், அமல்கள் சடுதியாக வீழ்ச்சி காணுகின்றன என்றால், எமது அஸ்திவாரம் ஆட்டம் காணுகிறது என்று பொருள். இப்பொழுது அதன் மீது நாம் கட்டடம் கட்ட முடியாது.

எனவே ரமழானின் மிகச் சரியான நோக்கத்தை நாம் அடைந்து கொள்வது என்பது, அதன் பின்னர் எமது செயல்கள் தொடர்ந்தும் உயிருடன் காணப்படுவதன் மூலமே நடைபெறுகிறது. அல்லாஹ்தஆலா அந்தப் பாக்கியத்தை எம் அனைவருக்கும் தருவானாக! ஆமீன்.

• எம்.எச்.எம். நாளிர்

# இயற்கை அனர்த்தங்கள்

## ஆன்மீகக் கண்ணோட்டம்

இயற்கை அனர்த்தங்களைப் பொறுத்தவரை உலோகாயுதவாதிகளின் கண்ணோட்டமும், ஆன்மீகவாதிகளின் கண்ணோட்டமும் ஒரே வகையாக அமைவதில்லை. நாம் எமது உலக விவகாரங்கள் அனைத்தையும் சடவாத சிந்தனையோடு நோக்குவதற்குப் பழக்கப்படுத்திக் கொண்டோம்.

நாம் கற்கும் கல்வி மேற்கிலிருந்து பெறப்பட்டதன் விளைவாகவே இவ்வாறு நேர்ந்துள்ளது. அங்கு சடவாதத்தை மையப்படுத்திய கல்வி முறையே வளர்க்கப்படுகிறது. அவர்கள் கற்பித்த சிந்தனையின் அடிப்படையிலேயே அனைத்தும் அணுகப்படுகின்றன. புயல், வெள்ளம், சுனாமி போன்ற அனர்த்தங்களுக்கு சடரீதியான காரணங்கள் மட்டுமே முன்வைக்கப்படுகின்றன.

இலங்கை பல சமயங்களை ஏற்றுக் கொண்ட ஒரு நாடு. இந்நாட்டில் சமய நம்பிக்கை கொண்டவர்களே அதிகமாக உள்ளனர். சமயங்கள், இறை நம்பிக்கையை முதன்மையாகக் கொண்டுள்ளன. இறைவனைப் படைப்பாளனாகவும், பரிபாலகனாகவும் நம்பி செயற்படுகின்ற அதே நேரத்தில், நன்மை அருகி, தீமை பெருகும்போது மக்களை எச்சரிக்கை செய்யும் வகையில், இறைவனின் கோபம் பல்வேறு வடிவங்களில் வெளியாகின்றன என்பதை அவை நம்புகின்றன. எல்லாச் சமயங்களின் மரபுகளிலும் இதனைக் காணலாம்.

இவ்வாறான அனர்த்தங்கள் இறைவனின் இராட்சதத் தன்மையிலிருந்து வெளிப்படுவனவல்ல; எச்சரிக்கை செய்யப்படும் வெளிப்பாடாகவே அமைகின்றன. ஆனால், நாம் படிக்கும் சிந்தனைகள், பௌதிக ரீதியானதாக அமைவதால், ஆன்மீகக் கண்ணோட்டத்தில் நோக்கும் தன்மை குறைவடைந்துள்ளது.

ஒரே பருவ காலத்தில், இரு வருடங்களின் ஒரே வகையான சோதனை அனர்த்தம், வெள்ளப் பெருக்கு என்ற வடிவத்தில் வெளியானதும் தொடர்ந்தும் அவ்வகை அனர்த்தம் நிகழாமல் பாதுகாப்பதற்கு ஒரே வழி, நாம் இறைவனை



நம்பியிருக்கிறோம் என்ற வகையில் இறைவன் பக்கம் எமது கவனத்தைத் திருப்புவதேயாகும்.

ஆனால், அந்த நம்பிக்கையின் அடிப்படையில் எமது வாழ்வு முறையை அமைத்துக் கொள்வதற்குத் தவறி விட்டோம். எல்லா சமயங்களும் நல்லவற்றையும், தீயவற்றையம் பிரித்துக் காட்டுகின்றன. நல்லவற்றைத் தூண்டுகின்றன. தீயவற்றை செய்ய விடாது தடுக்கின்றன. ஆனால், நாம் அந்த அறிவுறுத்தல்களை -எச்சரிக்கைகளை கருத்திக் கொள்வதில்லை.

நாம், எமது சமயங்களுக்கும் அவற்றின் அறிவுரைகளுக்கும் எந்தளவு தூரம் முன்னுரிமை வழங்குகிறோம்? எம்மிலுள்ள தவறுகளை நீக்கிக் கொள்வதற்கு தீவிர முயற்சிகளை மேற்கொள்ள [illegible] டப்படுகிறோமா? அனர்த்தங்கள் நிகழ்ந்திருப்பதற்கான பௌதிக காரணங்களைக் கண்டறியும் அதேவேளை, ஆன்மீக சிந்தனைகளை நடைமுறைப்படுத்தவும் வேண்டும். அறிந்தோ, அறியாமலோ, வேண்டுமென்றோ, தெரியாத் தனமாகவோ, தனிப்பட்ட முறையிலோ, கூட்டாகவோ எம்மால் இடம்பெற்று வருகின்ற பாவங்கள் செய்யும் சூழ்நிலைகளை அணுகுமுறைகளை எம்மிலிருந்து களைவதற்கு முயற்சிக்க வேண்டும். எம்மில் நிறைந்துள்ள தவறுகள் களைந்து விட முடியாதவையல்ல.

நாம் சுயநலமிகளாக வாழப் பழகி விட்டோம். எம்மிடம், நானும் எனது குடும்பமும் எனது சமூகமும் நன்றாக இருக்க வேண்டுமென்று சிந்திக்கின்ற, செயற்படுகின்ற ஆர்வம், எமது நாடு நன்றாக இருக்க வேண்டும், இறைவனின் படைப்புகள் நலமாக வாழ வேண்டும், [illegible] தொழிற்படுகின்றது.

மனிதன் படைப்புகளில் மிக உயர்ந்தவன், பகுத்தறிவுடையவன், இறைவன் வழங்கியுள்ள அவ்வறிவைப் பயன்படுத்தி உலகாயுத துறையில் அதிகமாகவும், வேகமாகவும் முன்னேறிவிட்டான். ஆனால், ஆன்மீக ரீதியான முயற்சியை எங்கோ புதைத்து விட்டான். ஒவ்வொரு தனிமனிதனும், சமூகமும் தம்மால் இடம்பெறுகின்ற தவறுகளை -குறைகளை- குற்றங்களை சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய ஒரு கட்டமாக இது தெரிகிறது.

மாசடைந்த மனித உள்ளங்களை தூய்மைப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நாம் மனிதர்களை மானுடப் பண்புடன் நோக்க வேண்டும். அவன் வாழும் பிரதேசம், அவன் பேசும் மொழி, அவன் பின்பற்றும் சமயம், அவன் ஆதரிக்கும் கட்சி போன்றவைகளை அளவீடாகக் கொண்டு எமது சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் குறுகியதாக அமைத்துக் கொள்ளாமல், மனித நேயம் என்ற பரந்த நிலையில் அணுக வேண்டும்.

ஒவ்வொருவரும் தம்முள் உறைந்துள்ள தவறுகளை படிப்படியாகவேனும் போக்கிக் கொள்ள முயற்சிக்க வேண்டும். பாவக் கறைகளால் இருண்டுள்ள உள்ளங்களுக்கு ஒளியூட்ட வேண்டும். அந்த ஒளியின் மூலம் சூழ்ந்திருக்கும் கறைகளைக் களைந்தெறிய வேண்டும்.

முன்பொரு காலத்தில் வறுமை காரணமாக 'இல்லாதவர்களே' அதிகமான பாவச் செயல்களில் ஈடுபட்டதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், இன்று 'உள்ளவர்களே' துணிச்சலோடு பாவச் செயல்களில் ஈடுபடுவதாகவும், தூண்டுவதாகவும் காணக் கிடைக்கிறது. பழைய பாவச் செயல்கள் புதிய பெயரோடு, புதிய பாணியில் இடம்பெற்று வருகின்றன. அரசியல், சமூக, பொருளாதார துறைகளில் முனிலையிலுள்ள பலர், எதற்கும் அஞ்சாமல் சமூக விரோத செயல்களில் ஈடுபடத் துணிந்து விட்டார்கள். ஆன்மீக உணர்வும் செயற்பாடுகளும் குறைந்தமை இதற்கு முதன்மையான காரணமாகும்.

ஆன்மீக சிந்தனையும் செயற்பாடும் அருகியமையால் ஏற்பட்டுள்ள நிலையை பின்வருமாறு பட்டியலிடலாம்.

- மானுடத் தன்மை - மனித நேயம் குறைந்துள்ளமை.
- சட்டத்துக்குக் கட்டுப்படும் சமூகம் உருவாகாமற் போனமை.
- உரிமைகள் பகிரங்கமாகவே பறிக்கப்படுகின்றமை.
- வலியோர், எளியோரை உறுத்துகின்றமை.
- குற்றச் செயல்கள் பெருகியுள்ளமை.
- பொதுத் துறைகளில் ஊழல்களும், துஷ்பிரயோகங்களும் இடம்பெறுகின்றமை.
- பாலியல் தொடர்பான குற்றங்கள் மலிந்துள்ளமை.
- வணிகத் துறை சார்ந்த மோசடிகள் பெருகியுள்ளமை.
- சூழல் மாசடைதல்.
- வாழ்க்கையைப் புரிந்துகொள்ள முடியாத சந்ததிகள் உருவாகியுள்ளமை.

எனவேதான், தினை விதைத்தவன் தினை அறுப்பான்; வினை விதைத்தவன் வினை அறுப்பான், அரசன் அன்று கொல்லும் தெய்வம் நின்று கொல்லும் என்ற பழமொழிகள் தோன்றி மக்களை எச்சரித்தன.

அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது. ''மனிதர்களின் கைகள் தேடிக் கொண்ட தீவினையின் காரணமாக கரையிலும் கடலிலும் குழப்பம் உருவாகி விட்டது. அவர்கள் செய்த (தீய)வற்றின் சிலவற்றை அவர்களுக்கு அவன் சுவைக்கச் செய்வதற்காக இவ்வாறு சோதிக்கின்றான். இதனால் பாவங்களிலிருந்து அவர்கள் திரும்பிடக் கூடும்.'' (30: 41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முஹம்மத் பகீஹுத்தீன்

# ஷரீஆவின் பார்வையில் பெருநாள் தினங்கள் ஏன்? எப்படி?



அல்லாஹுதஆலா முஃமின்களாகிய எமக்கு கொண்டாடி மகிழ்வதற்காக இரண்டு பெருநாட்களைத் தந்துள்ளான். ஒன்று ஈதுல் பித்ர் எனும் நோன்புப் பெருநாள், அடுத்தது ஈதுல் அழ்ஹா ஹஜ்ஜுப் பெருநாள்.

அனைத்து வணக்க வழிபாடுகளும் மற்றும் ஷரீஆ சட்டங்களும் மனித நலன்களை நோக்கமாகவும், மனிதனுக்கு அருள் நிறைந்ததாகவும், இறைநீதி கொண்டதாகவும் காணப்படும். அந்த வணக்கங்கள் விதியாக்கப்பட்டமைக்கான பிரதான இலக்குகள், காரணங்கள் சிலபோது வெளிப்படையாகவும் பல போது மறைந்தும் இருப்பதுண்டு. பெருநாள் தினங்களும் அவ்வாறே பல நோக்கங்ளின் அடிப்படையில் விதியாக்கப்பட்டுள்ளது. அதற்கு பின்னால் பல சமூக நலன்கள் உள்ளன. அருள் நிறைந்த நோக்கங்கள் காணப்படுகின்றன. அவற்றை நோக்குவோம்.

### 1) பரஸ்பர சந்திப்பும் ஒன்று கூடலும்

ஷரீஆவின் பார்வையில் பெருநாள் தினம் ஏன் என்று சிந்திக்கும் போது, முஸ்லிம்கள் பரஸ்பரம் ஸலாம் கூறி, ஆரத்தழுவி, அன்பாக பேசிக் கதைத்து, அழகான வார்த்தைகளை பரிமாறிக் கொள்வதற்கான ஒரு அரிய சந்திப்பு என்பதை புரிந்து கொள்ளலாம். அது உறவுகளை புதுபித்து உள்ளங்களை இணைத்துக் கொள்வதற்கான ஒரு சங்கமம். பெருநாள் தினத்தின் பிரதான இலக்கும் நோக்கமும் இதுவே.

எனவே தான் பெருநாள் தொழுகை ஒரு திறந்த இடத்தில் இடம்பெறுவது ஸுன்னாவாக உள்ளது. ஆண்கள் மாத்திரமன்றி, பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் அனைவரும் அந்த மைதானத்துக்கு செல்வதும் நபி (ஸல்) அவர்களுடைய வழிமுறையாக காணப்படுகிறது.

உம்மு அதிய்யா (ரழி) அவர்கள் சொல்கிறார்கள். ''பெருநாள் தினத்தில் கன்னிப் பெண்கள் உட்பட மாதவிடாய் ஏற்பட்ட பெண்கள் கூட தொழுகை நடைபெறும் இடத்துக்குச் செல்ல வேண்டும் என்று நபியவர்கள் எங்களைப் பணித்தார்கள். முஸ்லிம்களின் பிரார்த்தனையை, தொழுகையை எல்லோரும் கண்டுகழிக்க வேண்டும். மாதவிடாய் உடன் இருக்கின்ற பெண்கள் கூட அங்கு சமூகம் தந்து அந்த மைதானத்திலே ஒரு பக்கமாக ஒதுங்கி இருக்க வேண்டும் என்று நபி (ஸல்) அவர்கள் எமக்குப் பணித்திருக்கிறார்கள்.'' (புகாரி, முஸ்லிம்)

பெருநாள் தினத்தின் மிகப் பிரதானமான இந்த நோக்கத்தை அடையும் வகையில் எமது செயற்பாடுகள் அமைய வேண்டும். ஒரு ஊரில் பல பள்ளிவாசல்களில் பெருநாள் தொழுகை இடம்பெறுவதாலோ, அல்லது பல சிறிய ஊர்கள் இருக்கும் போது குறித்த ஒரு கிராமத்தில் அல்லது பல கிராமங்களில் வெவ்வேறாக திறந்த வெளியில் தொழுகை நடத்துவதாலோ அல்லது ஒரு குழுவனர் மாத்திரம் திறந்த வெளியில் தொழுகை ஏற்பாடு செய்துவிட்டு சுன்னாவை நிறைவேற்றிவிட்டதாகப் பெருமிதம் கொள்வதாலோ ஷரீஆ எதிர்பார்க்கும் நோக்கம் நிறைவேறுவதில்லை.

ஒரு ஊரின் பல கிராமங்கள், பள்ளிவாசல்கள் ஒன்றிணைந்து, வித்தியாசமான சிந்தனைப் போக்கு கொண்ட பல ஜமாஅத்களின் விட்டுக் கொடுப்புடனும், ஒத்துழைப்புடனும் முஸ்லிம்களின் ஒற்றுமையை வெளிப்படுத்தும் சந்திப்பே பெருநாள் தொழுகையின் பிரதான இலக்கு என்ற கருத்து பொதுத் தளத்தில் பிரசாரம் செய்யப்பட வேண்டும். அந்தப் புரிதலுடன் மக்கள் திறந்த வெளிக்கு கூட்டமாக வரும்போது மாத்திரமே உயிரோட்டமான அந்த சந்திப்பு நிறைவேறும். பரஸ்பர அன்பு உருவாகும். சகோதரத்துவம் வளரும். ஒற்றுமை தளிர் விடும்.

### 2) மகிழ்ச்சியை கொண்டுவருதல்

இரண்டு பெருநாட்களையும் முக்கியமான இரண்டு வணக்கங்களைத் தொடர்ந்துதான் அல்லாஹ் எமக்குத் தந்திருக்கிறான். ரமழானுடைய நோன்பைத் தொடர்ந்து ஈதுல் பித்ர் பெருநாளையும் ஹஜ் கடமையை அடுத்து ஈதுல் அழ்ஹா எனும் தியாகத்திருநாளையும் நாம் கொண்டாடுகிறோம். எனவே இரண்டு பெருநாட்களும் முஸ்லிம்களின் உள்ளங்களில் சந்தோசத்தை ஏற்படுத்தும் வெகுமதியாகவே அமைந்துள்ளன. பெருநாளைக் கொண்டாடுவது உலகில் வழங்கப்பட்டுள்ள வெகுமதி. நோன்பாளி சுவர்க்கம் நுளைவதும் தனது இரட்சகனைச் சந்திப்பதும் மறுமையில் கிடைக்கவுள்ள மற்றொரு வெகுமதியாகும்.

எனவே பெருநாள் தினத்தில் மகிழ்சியை வெளிப்படுத்தும் வகையில் ஷரீஆ சட்டம் அங்கீகரித்த களியாட்டங்களில், விளையாட்டுக்களில் ஈடுபடுவதற்கு இஸ்லாம் அனுமதி வழங்கியிருக்கிறது.

ஆயிஷா (ரழி) அவர்கள் சொல்கிறார்கள். ''பெருநாள் தினத்தில் நபி (ஸல்) அவர்கள் பார்த்திருக்க அபீசீனியா அடிமைகள் ஆடிப்பாடி மகிழ்ந்தார்கள். நான் அந்தக் காட்சியை நபியவர்களின் புஜத்துக்குப் பின்னால் இருந்து எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தேன். நான் அந்தக் காட்சியைக் கண்டு கழிக்க வேண்டுமென்பதற்காக நபியவர்கள் குனிந்து தனது முதுகைப் பணித்தார்கள். நான் மிகவும் மகிழ்ச்சியாக அந்த அபீசீனியா அடிமைகளுடைய ஆடல், பாடல்களைக் கேட்டு ரசித்தேன். மனநிறைவு அடைந்ததைத் தொடர்ந்து நான் வீட்டுக்குள்ளே சென்று விட்டேன்.'' ( புஹாரி, முஸ்லிம்)

இந்த வகையில் எமது குழந்தைகள், சிறுவர்கள், இளைஞர்கள், யுவதிகள் இந்தப் பெருநாள் தினத்தை மகிழ்ச்சியாகக் கொண்டாடும் வகையில் ஆகுமான, அனுமதிக்கப்பட்ட விளையாட்டுக்களை, கலை நிகழ்ச்சிகளை ஷரீஆ வரம்புகளைப் பேணி ஒழுங்கு செய்ய வேண்டிய தேவையும் அவசியமும் இருக்கின்றது. இது மனிதனின் அழகியல் தேவை. இது நிறைவேற்றப்படாத போது அவர்கள் வீண் விளையாட்டுக்கள், கேளிக்கைகளின் பால் திசை திரும்புவதற்கான சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

இங்கு இன்னொரு உண்மையையும் கவனத்திற் கொள்ள வேண்டும். அதாவது பெருநாள் தினத்தில் தொழுது விட்டு வரும் வழியில் ஒரு அடையாளமாக சில உறவினர்களின் வீடுகளுக்கு சென்று மகிழ்ச்சியை பரிமாறி விட்டு தூங்கி விடும் பழக்கம் தான் அதிகம். பின்னர் வேறு ஒரு தினத்தை ஒதுக்கி அதில் பிள்ளைகளோடு உல்லாசமாக கழிப்பதற்கு எதாவது முயற்சிகள் எடுப்பதும் எமது வழமையாகிவிட்டது. இதனால் பெருநாள் வந்ததும் தெரியாது. போன தும் தெரியாது.

அந்த நாள் மகிழ்ச்சிக்குரிய நாள். இறைவன் கொண்டாடுவதற்கென்றே அருளிய திருநாள். அதனை சோக தினம் போல் மாற்றிவிட்டு வேறு தினத்தில் கொண்டாட நினைப்பது நோக்கம் மறந்த செயலாகும். இந்த வருடம் கொண்டாடிய பெருநாள் அடுத்த வருடம் ஞாபகம் வரும் அடையாளமாக இருக்க வேண்டும். குடும்ப உறுப்பினர்களின் பேசு பொருளாக மாற வேண்டும்.

எனவே பெருநாள் தினம் ரமழானுக்கான பரிசு. அன்றய தினத்திற்கான புதிய ஆடைகள் விதம்விதமான உணவுகளை குடும்பத்தினர்க்குப் பெற்றுக் கொடுப்பதில் கணவன்மார் தாராளமாய் நடந்து கொள்ளவேண்டும். குறிப்பாக பிள்ளைகளின் பெருநாள் தின சந்தோசம் ஆடைகளிலும் உணவு வகைகளிலும் அதிகம் தங்கியிருக்கிறது. உங்கள் பிள்ளைகளுக்கு மட்டுமன்றி பெற்றோருக்காகவும் ஆடைகள் வாங்குவது நல்லது. இயலுமானால் யாரேனும் ஒரு வசதியற்றவர்க்காகவும் வாங்கிக் கொடுங்கள். பெருநாள் தின சமையலை உறவினர்கள் அயலவர்கள் என பல வீடுகள் இணைந்து மேற்கொள்வது பற்றி சிந்தியுங்கள். நாம் பெருநாள் கொண்டாடினோம் என்பது அப்போதுதான் மறக்காதிருக்கும்.

பெருநாள் தினத்தைக் கொண்டாடும் போது கடைப்பிடிக்க வேண்டிய சில ஒழுங்குகளையும் இஸ்லாம் எமக்குக் கற்றுத் தந்துள்ளது.

### 1. புத்தாடை அணிதல்

இமாம் இப்னுல் கையிம் (ரஹ்) அவர்கள் சொல்கிறார்கள். ''நபி (ஸல்) அவர்கள் இரண்டு பெருநாட்களின் போதும் தன்னிடம் இருக்கின்ற ஆடைகளுள் மிக அழகான ஆடையைத் தெரிவு செய்து அணிந்து கொள்வார்கள். அவர்களிடம் ஒரு விஷேடமான ஆடை இருந்தது. குறிப்பாக அந்த ஆடையை ஈதுல் பித்ர் பெருநாள் தினத்திலும் ஈதுல் அழ்ஹா பெருநாள் தினத்திலும் அவர்கள் அணிவார்கள்.''

### 2. பெருநாள் தின காலை உணவு

நபி (ஸல்) அவர்கள் நோன்புப் பெருநாளில் காலை உணவை அருந்திய பின்னரே தொழுகைக்குச் செல்வார்கள். ஆனால், ஹஜ்ஜுப் பெருநாளில் தொழுகையை நிறைவேற்றி விட்டு வீடு வந்துதான் காலை உணவை சாப்பிடுவார்கள் என்று அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

### 3. ஒரு பாதையால் தொழுகைக்குச் சென்று மற்றொரு பதையால் திரும்புதல்

ஜாபிர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள். ''நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பெருநாள் தொழுகைக்காகச் செல்கின்றபோது ஒரு பாதையால் செல்வார்கள். திரும்புகின்றபோது மற்றொரு வழியால் திரும்புவார்கள்.'' (ஸஹீஹ் முஸ்லிம்)

### 4. குறித்த நேரத்தில் தொழுதல்

பெருநாள் தொழுகையுடன் தொடர்புடைய மிக முக்கியமான மற்றுமொரு ஸுன்னா பெருநாள் தொழுகையை குறித்த நேரத்தில் தொழுவது. ஆனால், இன்று பெருநாள் தொழுகை முடியுமானவரை தாமதப்படுத்தப்படுகிறது. இது நபியவர்களின் ஸுன்னாவுக்கு மாற்றமானது. அதிலும் குறிப்பாக, ஈதுல் அழ்ஹா ஹஜ்ஜுப் பெருநாளுக்குரிய தொழுகையை முடியுமான வரை நேர காலத்தோடு தொழுவது மிக முக்கியமான ஒரு ஸுன்னா. ஜுன்துப் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

''இரண்டு ஈட்டியின் அளவு உயரத்திற்கு சூரியன் உயரும்போது ஈதுல் பித்ர் பெருநாள் தொழுகையையும் சூரியன் ஓர் ஈட்டின் அளவுக்கு உயரும்போது ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகையையும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நிறைவேற்றுவார்கள்.'' (ஆதாரம்: அஹ்மத்)

### 5. தக்பீர் சொல்லுவது

பெருநாள் தினத்தல் அதிகமதிகம் அல்லாஹ்வைப் புகழ்ந்து தக்பீர் சொல்ல வேண்டும். அதுவும் முக்கிய ஸுன்னாக்களில் ஒன்று. ''ஈத் பெருநாட்களை அல்லாஹ்வைப் புகழ்ந்தும் தக்பீர் கூறியும் அழகுபடுத்துங்கள்'' என்று நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

### 6. வாழ்த்துத் தெரிவித்தல்

பெருநாள் தினத்தில் நிறைவேற்ற வேண்டிய மற்றுமொரு ஸுன்னா இருக்கின்றது. அதுதான் வாழ்த்துத் தெரிவிப்பது. பெருநாள் தினத்தில் நபித் தோழர்கள் சந்தித்துக் கொண்டால் ''தகப்பலல்லாஹு மின்னா வ மின்கும்'' (அல்லாஹ் உங்களையும் என்னையும் பொருந்திக் கொள்வானாக) என்று வாழ்த்துக் கூறியவர்களாக முஸாபஹா, முஆனகா செய்து கொள்வார்கள். இது வெறுமனே ஒரு வாழ்த்து மட்டுமல்ல, ஓர் உயர்தர பிரார்த்தனையும் கூட.

எனவே, பெருநாள் தினம் என்பது எமது குடும்பத்தினரிடையே, சகோதர சகோதரிகளுக்கு மத்தியில், அண்டை அயலவர்களுக்கு மத்தியில் ஒற்றுமையைக் கட்டியெழுப்ப வேண்டிய நாள். எம்மைச் சூழ வாழ்கின்ற அனைவர் மத்தியிலும் சாந்தி சமாதானத்தை உருவாக்க வேண்டிய நாள். அதற்கான சந்தர்ப்பத்தை பெருநாள் தின வணக்கங்கள் எற்படுத்தித் தருகிறது. அந்த இலக்குகளையும், நோக்கங்களையும் அடையும் வகையில் பெருநாள் தின கொண்டாட்டத்தை அமைத்துக் கொள்வோம்.

அனைவருக்கும் ஈத் பெருநாள் வாழ்த்துக்கள்!

# என் டயரியில் இடம்பிடித்த முதலாவது தொழில்சார் அசம்பாவிதம்

• இஸ்ஸதுன் நிஸா (MBBS)

வழமையான பரபரப்புகளினூடே அன்றைய எனது private practice ஐ செய்து கொண்டிருந்தேன். இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு முன் என நினைக்கிறேன். அரச வைத்தியசாலையில் பணி புரிவதற்கும் தனியார் வைத்தியசாலையில் பணி புரிவதற்குமான வேறுபாடுகள், சவால்கள், கஷ்டங்கள், வெற்றிகளை அடையாளப்படுத்தியவாறே நகர்ந்த நாட்கள் அவை.

''மெடம், உங்களை தேடி Medical Rep வந்திருக்கிறாங்க'' டியூட்டியில் இருக்கும் தாதி வந்து சகஜமாய் சொல்லி விட்டுப் போனார். அவருக்கு அது சகஜமான ஒன்றாக இருப்பினும் எனக்கு அது தான் அவர்களை எதிர்நோக்குவது முதல் தடவை.

''நாங்கள் X கம்பனியில் இருந்து வருகிறோம் மேம்'' என்று தொடங்கியது அவர்களது பேச்சு. Loratadine இற்குரிய ஒரு brand ஐ அறிமுகப்படுத்துவதாய் நினைவு எனக்கு. சரியாக ஞாபகமில்லை.

பேச்சு முடிந்தது.

''இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?'' இது நான்.

''உங்களுடைய Prescription Chits இல் Loratadine இற்குப் பதிலாக xxx என எழுதினால் போதும்.''

''சாராம்சமாக சொல்லுங்களேன். அப்படி இந்த brand name ஐ எழுதுவதால் என்னதான் நன்மை?''

''இது ஒரு மிகச் சிறந்த brand. நோயாளர்களுக்கு விரைவான தீர்வினை கொடுக்கும். நீங்கள் trail பார்த்துக் கொள்ளலாம் மேம்.''

''அது மிகச் சிறந்ததாகவே இருக்கட்டும். ஆனாலும் Generic Name ஐ விடுத்து எந்த ஒரு brand name ஐ எழுதினாலும் அது மிகப் பெரிய மன்னிக்க முடியாத குற்றமாகவும் Medical Ethics இற்கு முரணானது எனவும் தானே எனக்கு இத்தனை காலம் என் Consultants எல்லோரும் கற்பித்தார்கள். இப்போது உடனே அதையெல்லாம் மறந்து இந்த பிழையை எவ்வாறு நான் செய்வது. குற்றமில்லையா?'' என சாதாரணமாகக் கேட்டேன்.

உலகம் தெரியாத பிள்ளையாய் என்னை அவர்கள் நினைத்துக் கொண்டது அவர்களது முக பாவனையில் தெரிந்தது.

''அப்படி எழுதுவதுதான் இப்போது வழக்கமானது. அதுதான் வைத்தியர்களின் வழக்கமும் கூட. மக்களுக்கு சிறந்ததைத்தானே வழங்குகிறோம்'' என்றார்கள்.

''சிறந்தது என தீர்மானித்ததும் அத்தகைய போலிகளை மக்கள் முன் கொண்டு சேர்த்ததும் இத்தகைய கம்பனிகளும் முதலாளி வர்க்கமும்தான். எனது இந்தத் தொழில் அதற்கு மிகப் பெரும் உடந்தையாய் இருப்பதை ஏற்றுக் கொள்கிறேன். அதற்காக அதே தவறை நானும் தவறாமல் [illegible] என்றேன்.



''சாதாரண இருமல் தும்மலுக்கு பயன்படுத்தும் Loratadine தானே. அது இரண்டு நாட்களில் குணமாகி விடும். தேவைப்பட்டால் நான் Loratadine என்றே எழுதிக் கொள்கிறேன். Brand ஐயும் தரத்தையும் அவரவர் பொருளாதார சக்திக்கேற்ப நோயாளிகளும் Pharmacists உம் தீர்மானிக்கட்டும். இப்போதைக்கு என்னால் [illegible] தான் செய்ய முடியும்.

Patients இன் முகத்தைப் பார்த்து சிரித்துக் கொண்டே High Brand Drugs எழுத இப்போதைக்கு என்னால் இயலவில்லை. ஒருவேளை நீங்கள் சொல்வது போல் அது ஏனையவர்களைப் போன்று சகஜமாய் மாறினால் அப்போது வாருங்கள் உங்கள் Brand Name ஐ எழுதுகிறேன்'' என்று சொல்லி அனுப்பினேன்.

நான் தவறாக இருக்கலாம். அல்லது சரியாக இருக்கலாம். தொழில் திறன் அறியாதவளாக இருக்கலாம். ஆனாலும் தொழில் தர்மம் அறியாதவளல்ல. கார்ப்பரேட்டுகளின் உறிஞ்சிப் பிழிதல்கள் இன்று அடிமட்ட மக்களை எங்கு கொண்டு போய்ச் சேர்த்திருக்கிறது என்பதன் பாரதூரம் ஓரளவுக்கேனும் புரிந்ததால் நான் எதிர்நோக்கிய அந்த ''முதலாவது'' தவறு சாதாரண தவறாய் தெரியவில்லை எனக்கு. தவிர்ந்து கொண்டேன். எதிர்காலத்தில் எப்படி நடந்துகொள்வேன் என சத்தியமாய் சொல்லத் தெரியவில்லை.

காலையில் கண் விழித்ததும் கையிலெடுக்கும் Toothpaste இலிருந்து பல ''சிறந்தது''களால் எத்தகையதோர் சமனிலையற்ற தன்மையை உலகம் எதிர்நோக்கி இருக்கிறது என்பதை அனுபவித்தும் அதிலிருந்து மீளவே முடியாமலும் இருக்கும் சாதரண பிரஜை நான். அந்த பயங்கரமான பாவத்தில் பங்குதாரியாய் மாறி விடுவேனோ என்ற அச்சத்திலேயே என் பதில்களை தெளிவாக அவர்களிடம் கூறினேன்.

மாபியார்க்களையும் கார்ப்பரேட்டுகளையும் தாண்டி மருத்துவ உலகம் பெருத்து வியாபித்துக் கிடக்கிறது என்ற நம்பிக்கையில் அடுத்த நோயாளியை பார்க்க தயாரானேன் நான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்திய கிழக்கு... (01ம் பக்கத் தொடர்)



சுன்னி முஸ்லிம்வாத திட்டத்தின் மூலம் கட்டார் ராஜ்யத்தை தனிமைப் படுத்தும் நடவடிக்கையாகவே இது புலப்படுகிறது. அவர்கள் குற்றஞ்சாட்டும் தீவிரவாத நிறுவனங்கள் அனைத்தும் சுன்னி மத பிரிவுக்குரியதாகும். இங்கு விசேடமாக கட்டார் இராச்சியம் தன்னுடைய தலைநகரான டோஹா நகரத்தை அரேபியாவின் பிரதான வணிக மத்திய நிலையமாக மாற்ற பெரும் போட்டியில் ஈடுபட்டுள்ளது.

விசேடமாக துபாயும், யூ. ஏ. ஈயும் கட்டாருக்கு எதிராக இந்த கூட்டணியில் இணைந்துள்ளன. இந்த இணைப்பானது கட்டார் விமான சேவை, அல்ஜஸீரா தொலைக்காட்சி மற்றும் டோஹா நகரை தோல்வியடையச் செய்யும் நோக்கில் அமைந்ததாகும்.

இது தொடர்பாக கருத்து தெரிவிப்பவர்கள் அநேகர், குறிப்பாக அல்ஜஸீரா தொலைக்காட்சி, பயங்கரவாதத்துக்கு உதவி செய்ததாக கட்டார் மீது விரலை நீட்டும் போது ஏனைய நான்கு விரல்களும் சவூதி அரேபியா, யூ. ஏ. ஈ. இராச்சியம், பஹ்ரேனை சுட்டிக் காட்டுவதாக கூறுகின்றது.

மேலும் அவர்கள் ஐ.எஸ்.ஐ.எஸ், அல்கைதா, அல் நுஸ்ரா போன்ற பயங்கரவாத அமைப்புகள் பலவற்றின் உயர் தலைவர்களான ஒஸாமா பின் லேடனிலிருந்து அனைவரும் சவூதியை சேர்ந்தவர்களென்றும், நவம்பர் 11 தாக்குதலுக்கு அமெரிக்கா சென்று தாக்குதலில் ஈடுபட்ட 19 பேரில் 15 பேர் சவூதி அரேபியர்கள் என்றும் கூறுகின்றது.

அதேபோல் உலகம் பூராவும் வஹாபிஸத்தை பரப்புவதற்காக நிதி வழங்கியதும் சவூதி அரேபியா என்று கூறுவதோடு வியாபாரம், சமூக நல நிறுவனங்கள், வங்கிகள் என பாரிய அளவிலான பெயர் பட்டியலையும் கட்டார் வெளியிட்டுள்ளது.

இதற்கு முன்னரும் சவூதியின் வங்கிகள் பலவற்றை அமெரிக்கா பயங்கரவாதத்துக்கு உதவி செய்வதாக தடை செய்திருந்தது.

இதிலுள்ள மிக முக்கிய விடயம் கட்டார் இராச்சியத்தின் வாயு குழாய் தொகுதி சிரியாவுக்கு ஊடாக மத்திய தரை கடலுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. நீண்ட காலமாக ரஷ்யாவை பணிய வைக்க ஐரோப்பிய சங்கம் கட்டார் அரசிடம் இந்த குழாய் தொகுதியை கேட்டிருந்தது. கட்டாரினூடாக இத்தாலிக்கு வாயு குழாய் தொகுதி கிடைத்தால், ரஷ்யாவின் வாயு குழாய் தொகுதி மூலம் எரிபொருள் சுயாதீனத்துக்கு ஏற்பட்டுள்ள அழுத்தத்தை குறைக்க முடியுமென நம்புகின்றார்கள். தற்போது ரஷ்யா சிரியாவை நோக்கிப் பயணிப்பதன் முக்கிய காரணமும் வாயு குழாய் தொகுதியை தடுப்பதற்காகவேயாகும்.

எமது நாட்டவர்கள் கட்டார், சவூதி அரேபியா, அதேபோல் அரேபியாவின் ஏனைய நாடுகளிலும் இலட்சக் கணக்கில் பணியாற்றுகின்றார்கள். அவர்களின் தொழிலுக்கு மாத்திரமல்ல அதற்கும் அப்பால் இலங்கை அரசியல் மோதலுக்கும் ஆரம்பமாக அமையக்கூடுமென கூறப்படுகின்றது.

இந்நிலைமையில் சவூதி - கட்டார் மோதல் வெறும் ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதத்துக்கு நிதி உதவி வழங்குவதற்கு அப்பால் சென்று இயற்கை அரசியல் மற்றும் இயற்கை எரிபொருள் தொடர்பான மோதல் என்பது தெளிவாகின்றது. அம்மோதலின் அதிர்வலைகள் இந்து சமுத்திரத்துக்கு மாலைதீவினூடாக எதிர்காலத்தில் வர வாய்ப்புள்ளது என்பதை நாம் அனைவரும் சிந்திக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## புத்தளத்தில்... (01ம் பக்கத் தொடர்)

உள்ளூராட்சி நிறுவனங்களால் தெரிவு செய்யப்படும் இடங்களில் கழிவுகளை அகற்றும் நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்துபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு ஆலோசனை வழங்கிய ஜனாதிபதி சுற்றாடல் பொலிஸாரை பலப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் ஆலோசனை வழங்கினார்.

புத்தளம் அருவக்காறு கழிவகற்றல் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக இந்த ஆண்டு 2000 மில்லியன் ரூபா நிதியை வழங்க நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

இதேவேளை, கொழும்பு நகரில் சேகரிக்கப்படும் குப்பைகளை முத்துராஜவல வனப் பகுதியில் கொட்டுவதைத் தடுக்கும் வகையில் உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை ஜூலை 20ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.



முத்துராஜவல பகுதியைச் சேர்ந்த 35 பேரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மேல்மாகாண குப்பைகளை மீள்சுழற்சி செய்வதற்காக இதுவரை டென்மார்க், அவுஸ்திரேலிய நிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளதாக மேல்மாகாண திண்மக் கழிவு முகாமைத்துவ சபையின் பணிப்பாளர் நலீன் மான்னப்பெரும தெரிவித்துள்ளார். இந்தச் மீள்சுழற்சி மூலம் தேசிய மின்வலுவுக்கு 10 மெகாவாட் மின்சாரத்தை வழங்க முடியும் எனவும், இதனால் 35,000 வீடுகளுக்கு மின்சாரம் வழங்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

## அரச அதிகாரத்தைக்... (06ம் பக்கத் தொடர்)

வேண்டும். கல்வி கற்கவும் வேண்டும். அதே போல சிறுபராயச் செயற்பாடுகளுக்கும் இடம்கொடுக்க வேண்டும். பரீட்சையில் சித்தியடையாதவர்களை மக்குகளாகக் கணிக்கக் கூடாது. கலைத்துறை ஆர்வமில்லாதவர்களுக்கு தொழில்நுட்பத் துறைகளை காட்டிக் கொடுக்க வேண்டும். ராஜாங்களை என்ற இடத்தில் விருப்பமின்றி விவசாயத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இளைஞர்களுக்கு தொழில்நுட்ப கற்கைகளை நாங்கள் அறிமுகப்படுத்தியபோது அவர்கள் சந்தோஷமடைந்தார்கள்.

மறுமலர்ச்சியின் முதற்கட்டம் சிறப்பாக நிறைவடைந்து வருகிறது. பல்வேறு பிரதேசங்களிலுமாக தொண்ணூறை அண்மித்த கிளைகள் நிறுவப்பட்டுள்ளன. 200 இலக்கை வெகுவிரைவில் அடையக் கூடியதாகவுள்ளது. மறுமலர்ச்சி சிந்தனையை மக்களிடையே உரசிப் பார்த்ததில் அது மக்களிடையே நல்ல அங்கீகாரத்தைப் பெற்றிருப்பதை அவதானிக்க முடிகிறது. சிங்கள, தமிழ், முஸ்லிம் அனைத்துத் தரப்பினரிடமும் இது வரவேற்புப் பெற்றிருக்கிறது. இதனூடாக இலங்கையர் என்ற அடையாளத்தை கருக்கட்டச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை வளர்ந்திருக்கிறது. வானில் வட்டமிட்ட மறுமலர்ச்சிச் சிந்தனை தரையில் காலூன்றும் வல்லமை பெற்றிருக்கிறது.

இரண்டாவது கட்டத்தில் மக்கள் அறிவூட்டப்படவிருக்கின்றார்கள். இவர்கள் தான் ஏனையோருக்கு மறுமலர்ச்சி சிந்தனையை சுமந்து செல்வார்கள். இதனோடு மறுமலர்ச்சி இயக்கம் சூடுபிடிக்கும். சிறு சிறு கூட்டங்களாக நடைபெற்றவைகள் பாரிய மக்கள் வெள்ளத்துக்கு மத்தியில் நடக்கவாரம்பிக்கும். மறுமலர்ச்சி இயக்கம் அங்கத்தவர்களின் சொந்த நிதியினாலேயே வளர்க்கப்படுகிறது. அதனால் இந்த இயக்கம் எந்தச் சக்தியினதும் அடிவருடியாக இருக்கப் போவதில்லை. இனி மறுமலர்ச்சி இயக்கத்தின் பயணத்தை யாரும் தடுக்க முடியாது. பத்து இலட்சம் அங்கத்தவர் எண்ணிக்கையை அது வெகுவிரைவிலேயே அடைந்துவிடும்.

## அளுத்கம... (01 ம் பக்கத் தொடர்)



குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தைப் பணித்திருந்தார். விசாரணைகளின் பின்னர் குற்றப் புலனாய்வுப் பிரிவு இந்தக் குற்றச் செயல்களுக்கு ஞானசார தேரர் தொடர்பிருப்பதாக அறிக்கைப்படுத்தியது. (C345/14CM).

இந்த விசாரணை முடிவுகளின் படி குற்றவியல் சட்டத்தின் 120 ஆவது பிரிவுக்கிணங்க ஞானசார தேரருக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கான வாய்ப்புக்கள் இருப்பதனால் இது தொடர்பான சட்ட ஆலோசனை பெறுவதற்காக CRI/327/14 என்ற இலக்கத்தையுடய கோப்பொன்று 31.12.2014 இல் குற்றப்புலனாய்வுப் பிரிவினால் சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது. இரண்டரை வருடங்களாகியும் இது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்தை விட முஸ்லிம்களுடைய 62 கோடி ரூபா சொத்திழப்புக்கு காரணமாக இருந்த குற்றத்துக்காக இவர் இரண்டு வருடங்களுக்கு முன்னரே கைது செய்யப்பட வேண்டியவராக இருந்தும், இந்தக் குற்றத்துக்காக அவரை கைது செய்வதற்கான முயற்சிகள் நடக்கவில்லை.

## மீராவோடை... (01 ம் பக்கத் தொடர்)

ஓட்டமாவடிப் பகுதியில் கடந்த ஆறு வருடங்களுக்கு மேலாக இந்த ஷீஆ மத்திய நிலையம் இயங்கி வந்துள்ளது. கடந்த வருடம் ஓட்டமாவடி ஜம்இய்யதுல் உலமா எடுத்த முடிவின்படி அதானுக்காகவன்றி எந்தப் பள்ளிவாசலும் ஒலிபெருக்கியைப் பயன்படுத்தக் கூடாதென அறிவித்திருந்தது.

ஆனாலும் பெரும்பாலான பள்ளிவாசல்கள் இதனை ஏற்றுக் கொள்ளாத நிலையில் குறித்த ஷீஆ இஸ்லாமிய கலாச்சார நிலையமும் ரமழான் காலங்களில் அதிக ஒலியுடன் ஒலிபெருக்கியை பாவித்து வந்துள்ளது. இதனைப் பொறுக்க முடியாத சில இளைஞர்களே இந்தத் தாக்குதலை நடத்தியதாக தெரிய வருகிறது.

## கைது செய்வதை... (01 ம் பக்கத் தொடர்)



அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது. திட்டமிட்ட குற்றங்கள் தடுப்புப் பிரிவு ஒழுங்கமைக்கப்பட்ட விசாரணை ஒன்று இன்றி தன்னை கைதுசெய்ய முயல்வதாகவும் இதனால் தனது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகவும் ஞானசார தேரரின் குறித்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் முறையான விசாரணை ஒன்று நிறைவுறும் வரை தன்னை கைது செய்யவேண்டாம் என தடை உத்தரவு பிறப்பிக்குமாறு கோரியுள்ள ஞானசார தேரர், தனக்கு விடுக்கப்பட்டுள்ள உயிர் அச்சுறுத்தல் தொடர்பில் பொலிஸ் மா அதிபரிடம் முறையிட்டுள்ள நிலையில், அந்த விசாரணைக ளும் இடம்பெற்று வருவதையும் குறித்த அடிப்படை உரிமை மீறல் மனுவில் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தீவிரவாத... (05 ம் பக்கத் தொடர்)

இந்நாட்களில் முஸ்லிம்களின் சொத்துக் களுக்கு மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதல் களை ஆட்சியாளர்கள் உடனடியாக நிறுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கா விட்டால் இந்நிலைமை மற்றுமொரு அளுத்கமை வரையில் விருத்தியடையும். அதனால் இலங்கைக்கு அவப்பெயரும் அழிவுகளுமே கிடைக்கும்.

அண்மையில் கிடைக்கப்பெற்ற ஜிஎஸ்பி சலுகையினை மீள இழப்பதற்கு கூட காரண மாக அமையும். அரசங்கத்திற்கு முஸ்லிம்களது மாத்திரமல்லாமல் இனவாதத்தினை எதிர்க்கும் சிங்கள மக்களினது ஆதரவும் கிடைக்காமல் போகும். இவையனைத்தையும் விட எதிர்கால இலக்கினை தேடிக்கொண்டிருக்கும் ஐஸிஸ் உறுப்பினர்கள் இலங்கையை ஒரு இலக்காக காணும் நிலையும் ஏற்படலாம். அவ்வாறு இடம்பெற்றால் எமக்கு மீண்டும் தற்கொலைத் தாக்குதல்களுக்கு உள்ளாக நேரிடும்.

ஐஸிஸ் என்பது சுன்னி தீவிரவாத குழு வொன்றாகும். அது மாற்று மதத்தவர்களுக்கும் ஷீஆக்களுக்கும் தீவிரவாத போக்கற்ற சுன்னி முஸ்லிம் களுக்கு எதிரானது, அதனால் ஐஸிஸ் உறுப்பினர்கள் இலங்கைக்கு வந்தால் அவர்கள் இந்நாட்டில் உள்ள சகல மத அமைப்புக்களுக்கும் அச்சுறுத்தலாக அமைவார்கள்.

ஐஸிஸ் உறுப்பினர்கள் ஏதாவதொரு நாட்டில் செயற்படுகின்றார்களா என்பது தொடர்பில் சரியான தகவல்களை அந்நாட்டில் உள்ள முஸ்லிம்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம். குறிப்பாக சுன்னி முஸ்லிம்களிட மிருந்து. அதனால் இலங்கைக்கு மீண்டும் பயங்கரவாதம் வருவதைத் தடுப்பதற்கான தேவை ஆட்சியாளர் களுக்கிருந்தால் அவர்கள் முஸ்லிம் களுடன் நல்லுறவை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

முஸ்லிம்கள் பிரிதொரு நாட்டை வேண்டுபவர்கள் அல்ல. அவர்களுடன் இன ரீதியாக அல்லது மொழி ரீதியான பிரச்சினையொன்றும் எமக்கில்லை. அவர்களுக்கு அவர்களது வாழ்வாதாரத் தினையும் வாழ்க்கையையும் முன்னெடுத்துச் செல்வதற்கு பாதுகாப்பான தொரு சூழல் மாத்திரமே தேவையாக உள்ளது. அவர்கள் விசேடமானதொரு பாதுகாப்பையோ விசேட கவனிப் பையோ வேண்டுவதில்லை. அவர்கள் இந்நாட்டின் சகல பிரசைகளுக்கும் யாப்பின் மூலம் உத்தரவாதப்படுத்தப் பட்டுள்ள உரிமைகளை மாத்திரமே வேண்டுகின்றார்கள். சட்டத்தை சரியான முறையில் அமுல்படுத்துமாறு கூறுகின்றார்கள்.

சிறிசேன-விக்கிரமசிங்க ஆட்சி பீடத்திற்கு அக்குறைந்த பட்ச நிபந் தனையாவது பூரத்தி செய்து கொடுக்க முடியவில்லை என்றால் அது நல்லாட்சி யாக அமைந்து விடாது. ஞானசார தேரரை இதுவரையில் கைதுசெய்ய முடியாமல் இருப்பதனாலும் அன்றாடம் இடம்பெறுகின்ற முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்கள் மீதான தாக்குதல் களை நிறுத்தி விட முடியாமல் இருப்ப தனாலும் விளங்குவது என்னவெனில் சட்ட ஆட்சியை ஸ்தாபிப்பதில் அரசாங்கம் தோல்வியுற்றுள்ளது என்பதாகும்.

ஞானசார தேரரும் வர்த்தக நிலையங் களுக்கு தாக்குதல் நடத்துகின்றவர்களும் நாட்டின் சட்டத்தையே மீறிக் கொண்டிருக்கின்றார்கள். நாட்டின் அரசங்கத் தையே அவமானப்படுத்துகின்றார்கள்.

இறுதியாக ஒரு கேள்வியை தொடுக்க வேண்டியுள்ளது. அரசாங்கத் தின் இயலாமைக்கும் மௌனத்திற்கு மான காரணம் என்ன? அரசாங்கம் சிங்கள பௌத்த தீவிரவாதிகளுக்கு பயப்படுகின்றதா? இல்லாவிட்டால் அரசங்கத்திலேயே உள்ள ஒரு சிலர் அரசங்கத்திற்கு அவப்பெயரை கொடுத்து ராஜபக்ஷாக்களுக்கு வழியமைக்கும் நோக்கில் மத வன்முறையை ஏற்படுத்துபவர்களுக்கு பாதுகாப்பையும் ஒத்துழைப்பையும் வழங்குகிறார்களா?

## தேவை... (03ம் பக்கத் தொடர்)

இந்த அச்சுறுத்தல் சம்பந்தமாக வெளிநாட்டுப் புலனாய்வுப் பிரிவினர் இலங்கையை எச்சரித்து வருகின்றனர். இதில் நாங்கள் போதுமான கவனம் எடுக்கவில்லை. புலப்படும் வகையில் பொதுபலசேனா, ஜம்மியதுல் உலமா, தௌஹீத் ஜமாஅத் என்பன காணப்படுகின்றன. இவர்கள் சட்டத்தை மீறுகையில் இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் நான் குறிப்பிட்ட அச்சுறுத்தல் கண்ணுக்குப் புலப்படவில்லை.

புலனாய்வுத் தகவல்களின் படி, வெளிநாடுகளில் இருந்து இயங்குகின்ற ஐ.எஸ் இனால் தீவிரமயமாக்கப்பட்ட பலர் இலங்கையில் இயங்குகின்றார்கள். இவை இலங்கை முஸ்லிம்களுக்கு எதிர்காலத்தில் கடும் அச்சுறுத்தலாக அமையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழர்களது போராட்ட சமயத்தில் அப்பாவித் தமிழர்கள் கைதுசெய்யப்பட்டு பலவந்தமாக போராளிகளாக குற்றஞ்சாட்டப்பட்ட பல சம்பவங்களை மரிசா டி சில்வா தனது கட்டுரையில் சுட்டிக்காட்டுகிறார். இது தொடர்பிலான சுவாரஷ்யமான ஒரு கதையும் சொல்லப்படுவதுண்டு. அரசனின் முயல் ஒன்று காட்டுக்குள் ஓடி ஒளிந்து கொண்டதாம். அதைத் தேடிப்பிடிக்க பல்வேறு நாடுகளில் இருந்தும் பொலிசார் வரவழைக்கப்பட்டும் அதனைக் கண்டுபிடிக்க முடியவில்லையாம். குறிப்பிட்ட நாட்டின் பொலிசார் மட்டும் இலகுவாக முயலைக் கண்டுபிடித்து ஒப்படைத்தார்களாம். இது எப்படிச் சாத்தியமாயிற்று என்று கேட்டதற்கு, இது உண்மையிலேயே முயல் அல்ல. இது பூனை. நாங்கள்தான் அதனை அடித்து மிரட்டி முயல் என்று சொல்ல வைத்தோம். இப்படித்தான் நாங்கள் நாட்டிலே கள்வர்களைப் பிடிக்கிறோம் என்று சொன்னார்களாம் அந்தப் பொலிசார்.

எதிரி இனம் காணப்பட்டுள்ளது போன்றதொரு நிலையே தெரிகிறது. இனி எதிரியை வடிவமைக்கும் வேலையில் எதுவும் நடக்கலாம்.

## அரசியல்... (04 ம் பக்கத் தொடர்)

ஏனெனில் மழையின் இயல்பு காரணமாக மழை நீர் பூமியில் உறிஞ்சிக் கொள்ளப்படுவதில்லை. இவ்வாறான குறுகிய கால சிறு மழையின் காரணமாக மழை நீர் பூமியில் உறியப்பட்டு நிலக்கீழ் நீர் மட்டம் உயர்வதற்குப் பதிலாக குளம், ஆறு, ஓடைகளின் நீர் ஒன்று சேர்ந்து வெள்ளப்பெருக்கை ஏற்படுத்துகிறது. மண் மற்றும் நீர் முகாமைத்துவ திட்டமொன்றை விரைவாக அமுல் படுத்தாவிட்டால் இலங்கை வாழ் மக்களாகிய எமக்கு மிகக் கடுமையான காலநிலை அனர்த்தங்களுக்கு முகம்கொடுக்க நேரிடும் என மன்த்திரி திலக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுவரையிலும் விடுக்கப்பட்டு வந்த இதுபோன்ற எச்சரிக்கைகள் செவிடன் காதில் ஊதிய சங்கிற்கு ஒப்பாகிறது. எதிர்வரும் சில மாதங்களிலும் ஆட்சியாளர்கள் இக்கொள்கையை பின்பற்றி வந்தால் 2018ம் ஆண்டு 2017ம் ஆண்டினையும் விட காலநிலை ரீதியில் மக்களுக்கு கூடுதல் தீங்கு பயக்கும் என்பது திண்ணம்.

மீள்பார்வை உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | - ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் | - 4000.00 | ஐக்கிய இராச்சியம் | - 5500.00 |
| 12 இதழ்கள் | - ரூபா 600.00 | தனிப் பிரதி | - ரூபா 100.00 | மலேசியா | - 4000.00 | அமெரிக்கா | - 6500.00 |
| 24 இதழ்கள் | - ரூபா 1200.00 | ஒரு வருடம் | - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் | - 4000.00 | அவுஸ்திரேலியா | - 4700.00 |
| | | | | | | சீனா | - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0777 581 661 People's Bank A/c: 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழப் பதிந்த வேர்கள்

ஒரு ஊரில் இரண்டு அயலவர்கள் வாழ்ந்தார்கள். அவர்கள் இருவருமே தொழிலிலிருந்து ஓய்வு பெற்று, வீட்டில் இருப்பவர்கள். அவர்களில் ஒருவர் ஆசிரியராகப் பணியாற்றியவர். மற்றையவர் காப்புறுதி நிறுவன மொன்றில் பணிபுரிந்தவர். இருவரும் நல்ல நண்பர்கள். இருவரும் வீட்டுத் தோட்டம் செய்வதில் ஆர்வம் உள்ளவர்கள்.

அவர்கள் இருவரும் ஒரு தடவை நகரிலிருந்து சிறந்த தாவரக் கன்றுகள் இரண்டை வாங்கி வந்தனர். இருவரும் அதனை நல்ல முறையில் நட்டினர். ஓய்வுபெற்ற ஆசிரியர், தான் நட்டிய கன்றுக்கு சிறிதளவு நீர் ஊற்றுவார். அதிகமாக கரிசனை செலுத்த மாட்டார். அதற்கு மாற்றமாக, காப்புறுதி நிறுவனத்தில் பணியாற்றியவர் அதிகமாக நீர் ஊற்றுவார். மிக்க அக்கறையுடன் தனது கன்றை பராமரித்தார்.

சில நாட்கள் கடந்தன. ஓய்வுபெற்ற ஆசிரியரின் கன்று நன்றாக வளர்ந்தி ருந்தது. எனினும், காப்புறுதி உத்தியோகத்தரின் கன்று அதனை விட மிகச் சிறப்பாகவும் பச்சை நிறமாகவும்



உயர்ந்து வளர்ந்திருந்தது. ஒரு நாள் இரவு கடும் மழையுடன் காற்றும் வீசியது. அடுத்த நாள் காலையில் இரு அயலவர்களும் தமது வீட்டுத் தோட்டத்தை பார்க்க வந்தனர். காப்புறுதி நிறுவனத்தில் பணியாற்றிய வரது தாவரம் வேறுடன் பிடுங்கப்பட்டு வீசப்பட்டிருந்தது. ஆனால், ஆசிரியரது கன்று அப்படியே இருந்தது.


ஆச்சரியமடைந்த காப்புறுதி நிறுவன பணியாளர் ஆசிரியரிடம், ''நானும் நீங்களும் ஒரே நேரத்திலே கன்றுகளை நட்டோம். ஆனால், உங்களை விட நன்றாகவே நான் எனது கன்றுகளை பராமரித்துக் கொண்டேன். ஆனால், எனது கன்று விழுந்துவிட்டது. உங்களது கன்று அப்படியே இருக்கின்றதே என்ன விடயம்?'' என்று கேட்டார்.

அதற்கு ஆசிரியர் இப்படிக் கூறினார்: ''நீங்கள் உங்கள் கன்றினை நன்றாக கவனித்தீர்கள். அதிகமாக நீர் ஊற்றினீர்கள். அதனால் அவை தாமே தமக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சிக்க வில்லை. ஆனால், நான் சிறிதளவு தண்ணீரை ஊற்றினேன். எனது கன்றின் வேர்கள் தனக்கு மேலதிகமாக

மீள்பார்வை

தொகுப்பு: ஏ.ஸீ.எம். நதீர்

தேவைப்படும் நீரை நிலத்தின் ஆழத்திற்கு தேடிச் சென்றன. எனவே, அதன் வேர்கள் நிலத்தில் ஆழமாகப் பதிந்தன. எனவே, அது காற்றையும் மழையையும் தாங்கிக் கொண்டது.




ரமழான் மாதம் இன்னும் சில நாட்களில் நிறைவடைந்துவிடும். இன்ஷா அல்லாஹ் அதனைத் தொடர்ந்து நோன்பாளிகள் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு வாழ்ந்த காலத்தினை மகிழ்ச்சியாக நிறைவுசெய்வதற்காக ஈதுல் பித்ர் எனும் நோன்புப் பெருநாள் எம்மை அடைந்துவிடும். அந்நாளில் நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதை தெரிந்து கொள்வோம்.

1. ஈதுல் பித்ர் தொழுகைக்காக குளித்து, சுத்தமாகி தயாராகுதல் வேண்டும். சிறந்த ஆடையை அணிந்துகொள்ள வேண்டும். இப்னு உமர்(றழி) அவர்கள் பெருநாள் தினத்தில் தொழுகைக்குச் செல்லும் முன்னர் குளிப்பவர்களாக இருந்தார்கள். அத்துடன், சிறந்த ஆடையை அணிபவர்களாகவும் இருந்தார்கள் என்பதை முவத்தா கிரந்தத்தில் இமாம் மாலிக் பதிந்துள்ளார்.
2. பெருநாள் தினத்தில் தொழுகைக்காகச் செல்லும் முன்னர் ஒற்றையாக பேரீத்தம் பழத்தை சாப்பிடுவது ஸுன்னத்தாகும். நபி(ஸல்) அவர்கள் பெருநாள் தினத்தில் பேரீத்தம் பழம் சாப்பிடாமல் வெளியேறிச் செல்ல மாட்டார்கள். அவர்கள் ஒற்றையாகவே சாப்பிடுவார்கள். (புஹாரி) எனவே, ஒன்று அல்லது மூன்று என ஒற்றையாக சாப்பிட்டு விட்டுச் செல்வோம்.
3. தொழுகைக்காகச் செல்லும்போது தக்பீர் சொல்லிக் கொண்டு செல்லும் வழக்கத்தை நபி(ஸல்) அவர்கள் கொண்டிருந்தார்கள். அப்துல்லாஹ் இப்னு உமர்(றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நபி(ஸல்) அவர்கள் பெருநாள் தினத்தில் சத்தத்தை உயர்த்தி தக்பீர் கூறியவர்களாக வெளியேறிச் செல்வார்கள்.
4. தொழுகைக்காகச் செல்லும்போது, நடந்து செல்பவர்களாக இருந்தார்கள் என திர்மிதி கிரந்தத்தில் ஹதீஸ் பதிவுசெய்யப்பட்டுள்ளது. எனவே, தொழுகைக்காக நடந்து செல்ல முயற்சிப்போம்.
5. ஒரு பாதையில் சென்று வேறொரு பாதையால் திரும்பி வரும் வழக்கம் நபி(ஸல்) அவர்களிடம் காணப்பட்டதாக ஜாபிர்(றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். இந்த ஹதீஸ் புஹாரி கிரந்தத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, ஒரு பாதையால் சென்று வேறு பாதையில் திரும்புவதன் மூலம் ஸுன்னாவை நடைமுறைப்படுத்திய நன்மையை பெற்று கொள்வோம்.
6. பெருநாள் தொழுகை சூரியன் உதித்து, சில நிமிடங்களின் பின்னர் தொழவேண்டும். இத்தொழுகைக்கு அதானோ, இகாமத்தோ இல்லை. முதல் ரக்அத்தில் 7 தக்பீர்களும் இரண்டாம் ரக்அத்தில் ஐந்து தக்பீர்களும் கூறப்படும். தொழுகைக்குப் பின்னர் குத்பா இடம்பெறும். தொழுகையை மட்டும் நிறைவேற்றி விட்டுச் சென்றுவிடாது, குத்பாவையும் கேட்டுச் செல்ல வேண்டும்.

இவற்றுடன், பெருநாள் தினத்தில் உறவினர்கள், நண்பர்கள் மட்டுமன்றி ஊரிலுள்ள அனைவரையும் சந்திக்க கிடைக்கின்றது. அவர்களுடன் முஸாபஹா (கைக்கொடுத்தல்), முஆனகா (ஆரத் தழுவுதல்) செய்வதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. உறவினர்கள், நண்பர்கள் வீட்டிற்கு செல்வதற்கும் நேரம் ஒதுக்கிக் கொள்வோம்.

# பித்தன்



– கவிக்கோ அப்துல் ரகுமான்

பித்தன் மழைக்காகப் பள்ளிக்கூடத்தில் ஒதுங்கினான்
குழந்தைகளின் கையிலிருந்த புத்தகங்களைப் பார்த்து
புத்தகங்களே சமர்த்தாயிருங்கள்
குழந்தைகளைக் கிழித்துவிடாதீர்கள் என்றான்
அவன் மேலும் சொன்னான்...

குழந்தைகளே பாடப் புத்தகங்களாக இருக்கிறார்கள்
அவர்கள் கையில் ஏன் காகிதக் குப்பைகளைத் தருகிறீர்கள்?
உங்கள் புத்தகங்கள் கண்களைத் திறப்பதில்லை
ஊற்றுக் கண்களைத் தூர்த்து விடுகின்றன
காகித ஓடங்களை நம்பி இருப்பவர்களே!
நீங்கள் எப்படி அக்கரை போய்ச் சேர்வீர்கள்?

இதோ! இரவு பகல் என்ற ஏடுகள்
உங்களுக்காகவே புரளுகின்றன
நீங்களோ அவற்றைப் படிப்பதில்லை
இதோ உண்மையான உயிர் மெய் எழுத்துக்கள்
உங்கள் முன் நடமாடுகின்றன
நீங்களோ அவற்றைக் கற்றுக் கொள்வதில்லை
ஒவ்வொரு பூவும் பாடப் புத்தகமாக இருப்பதை
நீங்கள் அறிவதில்லை.
நீங்கள் நட்சத்திரங்களைப் படிக்கக் கற்றிருந்தால்
உச்சரிக்க முடியாத எழுத்துக்களில்
அதிகமான அர்த்தம் இருப்பதை அறிந்திருப்பீர்கள்
நீங்கள் மின்னலின் வாக்கியங்களை
வாசிக்க முடிந்திருந்தால்
ஒளியின் ரகசியத்தை அறிந்திருப்பீர்கள்,

உங்களுக்குக் கண்ணீர்த் துளிகளைப்
படிக்கத் தெரிந்திருந்தால்
நீங்கள் மனிதனின் சாரத்தை அறிந்திருப்பீர்கள்.
எழுத்துக்களால் அல்ல
காயங்களால் கற்பதே கல்வி
என்பதை அறிந்து கொள்ளுங்கள்.
உங்கள் புத்தகங்கள் விளக்குகளாக இருக்கின்றன.
சூரியனைக் காண விளக்குகள் தேவைப்படுவதில்லை.

(அண்மையில் காலஞ்சென்ற கவிக்கோ அப்துல் ரகுமானின் நினைவாக இந்தக் கவிதை நன்றியுடன் பிரசுரமாகிறது.)

# நான் தீவிரவாதியாகிய கதை

நான் எந்த மத ஸ்தலத்திற்கும்
கல் வீசவில்லை, தீ மூட்டவுமில்லை.
எந்த மத சிலைகளையும்
உடைத்தெறியவில்லை.
எந்த மதத்தவனது கடைகளுக்கும்
தீ வைக்கவில்லை.
யாருக்கெதிராகவும்
துப்பாக்கி ஏந்தவுமில்லை.
எந்த சமயத்தவனது பொருளாதாரத்தையும்
துவம்சம் செய்ய கனவிலும் நினைத்ததில்லை.
எந்த மதத்தையும்
நிந்திக்கவில்லை.
எனக்கெதிரான எல்லா
அடக்குமுறைகளையும் தாங்கிக் கொண்டு,
நான் மிக உறுதியாக நம்பும்
எனது இறைவனிடமே எல்லாவற்றையும்
பொறுப்புச் சாட்டி விட்டு
எனக்குள்ளே அழுது கொண்டிருக்கிறேன்.
ஆனால், எனக்குப் பெயர்
தீவிரவாதி அல்லது பயங்கரவாதி.
ஜனநாயகம் வாழ்க...!

– நாஸிக் மஜீத்
கிண்ணியா

# கஃபாவைக் கழுவ முன்...

ஒரு நிழலை இன்னொரு நிழலால்
வெட்டி வீழ்த்தும் ஆட்டம்–
பெரும் சதுரங்க ஆட்டம்.
நோன்பென்றும் பாராது
பக்கத்து வீட்டான் மீது பாய்தல் தகுமோ?
அதிகார அடுக்குகளில்
இரவல் மூளைதான் இறைந்து கிடக்கிறது.
அங்கும் இங்குமாய்க் கடன் வாங்கி
ஆயிரம் காரணங்களை அடுக்குகிறான்.
ஊதிப் பெருப்பித்த காரணங்கள்
ஒவ்வொன்றாய் உடைகையில்...
அவன் நெற்றி வியர்க்கிறது.
தலைப்பாகையால் தடவுகிறான்
தடுமாறித் தடுமாறி நிற்கிறான்.
ஆடம்பரங்கள் மின்னும் ஆடையை
அடிக்கடி சரி செய்கிறான்.
அத்தர் பூசி அழகு பார்த்தவன்
டொலர் பூசி அழகு பார்க்கிறான்.
ஒட்டகத்தின் திமிலைப் போல
நிமிர்ந்து நிற்கிறது அவன் திமிர்.
ஹிராக் குகையிலிருந்து
ஒரு அசரீரி கேட்கிறது.
ஹஜ்ஜதுல் விதாவின் பேருரை
அறபா வெளியெங்கும்
அமைதியாய்ப் படர்ந்திருக்கிறது.
மினாவின் பள்ளத்தாக்குகள்
காய்ந்து போயிருக்கின்றன.
திரும்பிப் பார்ப்பார் யாருமில்லை.
திரும்ப அவர்க்கு மனமுமில்லை.
கஃபாவைக் கழுவ முன்
கழுவ வேண்டிய கசடுகள் பல
கழுத்தை நெரிக்கின்றன.
சுஜூதில் தாழ்ந்திருக்கிறது தலை.
நிலத்தை நனைத்திருக்கின்றன
கண்ணீர்த் துளிகள்!

சிராஜ் மஷ்ஹூர்
08.06.2017

# பெருநாள் கொண்டாட்டத்தின் நாள்

ஈதுல் பித்ர் பெருநாள் கொண்டாடுவதற்குரிய நாளாகும். நபி(ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வந்தபோது, மதீனாவாசிகள் இரண்டு தினங்களை கொண்டாட்டத் திற்குரிய நாட்களாக கொண்டிருந்தனர். அப்போது நபி(ஸல்) அவர்கள் இவ்விரண்டு தினங்களும் எவை எனக் கேட்டார்கள். அதற்கு மக்காவாசிகள் ஜாஹிலிய்யா காலத்தில் நாம் இவ்விரண்டு நாட்களையும் கொண்டாடினோம் என்றார்கள்.

நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: ''அல்லாஹுதஆலா உங்களுக்கு அவ்விரண்டு நாட்களுக்கும் பகரமாக ஈதுல் பித்ர் (நோன்புப் பெருநாள்), ஈதுல் அழ்ஹா (ஹஜ்ஜுப் பெருநாள்) ஆகிய நாட்களை கொண்டாட்டத்திற்குரிய நாட்களாக மாற்றியிருக்கிறான்.''

எனவே, ஈதுல் பித்ர் பெருநாள் மகிழ்ச்சியாக இருப்பதற்கான நாளாகும். ஆகுமான விளையாட்டுக்களில் ஈடுபடலாம். ஆனால், ஹராமான செயற்பாடுகளில் ஈடுபட்டு நோன்பின் நன்மைகளை அழித்துக்கொள்ளாதிருப்போம்.

# வன்முறைக்கு எதிரான கவிதைக் குரல்கள்!

அளுத்கம கலவரம் முதல் இன்று வரையான முஸ்லிம் சமூகத்தின் மீதான வன்செயல்கள் குறித்து கவிதைகளாக எழுந்த எதிர்க்குரல்களைப் பதிவு செய்வதற்கான ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த வகையில் பத்திரிகைகள், சஞ்சிகைகள், வலைத்தளங்கள், சமூக ஊடகங்களில் வெளிவந்த எதிர்க்குரல் கவிதைகளைத் தொகுத்து நூலாக்கி வெளியிடுவதற்காக அவ்வாறான கவிதைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

எமக்கு அனுப்பி வைக்கப்படும் கவிதைகள் மாத்திரமே நூலுக்கென ஏற்றுக் கொள்ளப்படும், தனிப்பட்ட முறையில் யாரிடமும் கவிதைகள் கோரப்படாது. இன்று படைப்பாக்கங்களில் ஈடுபடுவோர் பெரும்பாலும் இணையத் தளங்க ளிலும் சமூக வலைத் தளங்களிலும் இணைந்திருக்கிறார்கள், படிக்கிறார்கள், எழுதி வருகிறார்கள். இக்கவிதைகள் முஸ்லிம் படைப்பாளிகளால் மட்டுமே படைக்கப்பட்டவையாக இருக்க வேண்டும் என்ற கட்டாயம் ஏதுமில்லை.

வெளியீட்டுக்குப் பொருளாதார ரீதியாக உதவ முன்வருவோரிடமிருந்து கிடைக்கும் பணத்தொகையே புத்தகத்தின் பக்கங்களைத் தீர்மானிக்கும் என்பதையும் கவிதைகளைத் திருத்தியமைக்கவோ சுருக்கவோ தொகுப்பாளருக்கு உரிமை உண்டு என்பதையும் கவனத்தில் கொள்க.

எனவே உங்களது கவிதைகளை (பிரசுரமானதாயின் விபரங்களுடன்) பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ashroffshihabdeen@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் பெறுமதிமிக்க வீரராக நெய்மர்



உலகின் மிகவும் விலையுயர்ந்த கால்பந்து வீரர்கள் பட்டியலில் பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரர் நெய்மர் 185 மில்லியன் பவுண்களுடன் முதல் இடத்தைப் பிடித்துள்ளார். டோட்டன்ஹாம் வீரர் டெல் அலி 137 மில்லியன் பவுண்களுடன் 2 ஆவது இடத்தையும், மற்றொரு டோட்டன்ஹாம் வீரர் ஹாரி கேன் 135 மில்லியன் பவுண்களுடன் 3 ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர்.

பார்சிலோனா அணியின் மற்றுமொரு நட்சத்திர வீரரான மெஸ்சி 134 மில்லியன் பவுண்களுடன் 4 ஆவது இடத்திலும், அட்லெடிகோ மெட்ரிட் அணியின் கிறிஸ்மான் 132 மில்லியன் பவுண்களுடன் 5 ஆவது இடத்திலும் உள்ளனர். ரியல் மெட்ரிட் அணியின் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ 99 மில்லியன் பவுண்களுடன் 11 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

## மீள்பார்வை விளையாட்டு



# உடலுக்கு கேடு விளைவிக்கும் பெப்சி விளம்பரத்தில் நடிக்க மாட்டேன்

### விராட் கோஹ்லியின் முன்மாதிரி

உடலுக்கு தீங்கும் விளைவிக்கும் பானங்கள் எடுத்துக் கொள்வதை நிறுத்தி விட்டேன். இதனால் இனி பெப்சி விளம்பரங்களில் நடிக்க மாட்டேன் என இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் கோஹ்லி தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் கோஹ்லி பல நிறுவனங்களுக்கு விளம்பரத் தூதராக உள்ளார். 6 ஆண்டுகளாக பெப்சி நிறுவனத்தின் விளம்பரத் தூதராக இருந்து வரும் கோஹ்லியின் ஒப்பந்தம் கடந்த மாதம் 30 ஆம் திகதியுடன் முடிவடைந்தது.

இதையடுத்து ஒப்பந்தத்தை நீடிக்க பெப்சி நிறுவனம் கோஹ்லியை அணுகியபோதும் உடலுக்கு நலன் இல்லாத ஒரு பொருளை விற்கும் விளம்பரத் தூதராக இருக்க எனக்கு மனமில்லை. அதனால் இந்த ஒப்பந்தத்தை நீடிக்க விரும்பவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இது குறித்து விராட் கோஹ்லி குறிப்பிடுகையில், நான் 18 பொருட்களின் நிறுவனத்திற்கு விளம்பரத் தூதராக உள்ளேன். இவற்றில் பெப்சி நிறுவனத்துடன் பல கோடி ரூபாய் பெறுமதியான ஒப்பந்தத்தை மேற்கொண்டேன். இருந்தாலும் உடலுக்குத் தீங்கான உணவுகள் மற்றும் பானங்களை நான் எடுத்துக் கொள்வதில்லை. ஏனையவர்களுக்கும் விளம்பரத்துக்காக இவற்றைத் தூண்டுவது மிகவும் மோசமானது. இதன் மூலம் கிடைக்கும் பணமும் எனக்குத் தேவையில்லை எனக் கருதுகிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் சீருடை அனுசரணையாளராக பெப்சி நிறுவனம் இருந்து வருகின்ற நிலையில் விராட் கோஹ்லியின் இந்த செயல் அனைவருக்கும் முன்மாதிரியாக அமைந்துள்ளது.







பேருவளை ஜாமிஆ நளீமிய்யாவின் பழைய மாணவர் அமைப்பான 'ராபிதா அன் நளீமிய்யீன்' பேருவளைக் கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த இப்தார் நிகழ்வும், குடும்ப ஒன்றுகூடலும் "Legacy of Usthaz Khairul Bashar" எனும் தொனிப்பொருளில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உஸ்தாத் அரபாத் கரீம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, விஷேட உரையை அஷ்ஷெய்க் மக்கி மன்ஸூர் அவர்கள் நிகழ்த்தினார். மர்ஹூம் உஸ்தாத் ஹைருல் பஷர் அவர்கள் பற்றிய விஷேட ஆவணக் குறிப்பும் இதன்போது திரையிடப்பட்டது.

# சம்பியனாகும் முனைப்பில் பாகிஸ்தான்



இங்கிலாந்தில் இடம்பெற்றுவரும் 8 முன்னணி அணிகளுக்கிடையிலான ஐசிசி சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் தரவரிசையில் எட்டாவது இடத்திலுள்ள பாகிஸ்தான் அணி யாருமே எதிர்பார்க்காத வகையில் பலம்மிக்க இங்கிலாந்து அணிக்கு அதிர்ச்சி அளித்துள்ளது.

இந்த வெற்றியின் பின் கருத்துத் தெரிவித்த பாகிஸ்தான் அணியின் தலைவர் சப்ராஸ் அஹமட், பாகிஸ்தான் அணியை இறுதிப் போட்டி வரை அழைத்து வந்தமையானது அணித் தலைவர் என்ற வகையில் பெருமையான விடயம். இந்தத் தொடரில் எமது பந்து வீச்சாளர்கள் மிகவும் சிறப்பான முறையில் பந்து வீசி வருகின்றனர். இறுதிப் போட்டியிலும் ஒரு அணியாக சிறப்பாக செயற்பட்டால் நிச்சயம் இம்முறை சம்பியனாக முடியும் எனக் குறிப்பிட்டார்.

பாகிஸ்தான் அணி முதல் தடவையாக சம்பியன்ஸ் தொடரின் இறுதிப் போட்டிக்கு நுழைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரதமரின் தேக சுகத்திற்கு முஸ்லிம்கள் பிரார்த்தனை





தபால், தபால் சேவைகள் முஸ்லிம் கலாசார அமைச்சு மற்றும் முஸ்லிம் கலாசார திணைக்களம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உடல் ஆரோக்கியத்திற்காக துஆப் பிரார்த்தனையும் மற்றும் இப்தார் நிகழ்வும் நேற்று முன்தினம் (27) புதன்கிழமை மருதானை பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றது.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் மற்றும் தபால் சேவைகள் அமைச்சர் எம்.எச். ஏ. ஹலீமின் ஏற்பாட்டிலும், முஸ்லிம் கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.ஆர்.எம். மலிக் (நளீமி) ஒருங்கிணைப்பிலும் நடைபெற்ற இந்நிகழ்வில், மௌலவி அல்- காரி பைஸலினால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உடல் ஆரோக்கியத்திற்காகவும் மற்றும் நாட்டு நலனுக்காவும் சிங்கள மொழியில் துஆப் பிரார்த்தனை செய்யப்பட்டது.

நிகழ்வில், அமைச்சர்களான ரஊப் ஹக்கீம், ஏ.எச்.எம்.பௌஸி, பாராளுமன்ற உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான், இம்ரான் மஹ்ரூப், அப்துல்லாஹ் மஹ்ரூப், காதர் மஸ்தான், தபால் மற்றும் முஸ்லிம் கலாசார அமைச்சின் செயலாளர் ஹப்பு ஆராச்சி, முஸ்லிம் கலாசார திணைக்கள அதிகாரிகள், அரச உயர் மட்ட அதிகாரிகள், மற்றும் ஏராளமான பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (தகவல்: எம்.எஸ்.எம்.ஸாகிர்)












காலி HEADS நிறுவனம் நடாத்திய 5 ஆம் தர மாணவர்களுக்கும் அவர்களது பெற்றோர்களுக்குமான ஊக்குவிப்பு செயலமர்வு நிறுவனத்தின் தலைவர் ஏ.ஏ.ஏ. ஸலாம் தலைமையில் நடைபெற்றது. பிரதம அதிதியாக Dr. பஹ்மியா இஸ்மத் கலந்துகொண்டார். வளவாளர் இஸ்பஹான் சாப்தீன் செயலமர்வை நடத்தினார்.









திஹாரிய அல் அஸ்ஹர் மத்திய கல்லூரியின் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் அணிவித்தல் வைபவம் அண்மையில் பாடசாலையின் அதிபர் திரு. அஸ்மீர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இவ்வைபவத்தில் பிரதம அதிதியாக வோக்[illegible]யா கலந்துகொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Printed and Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.